# www.Padasalai.Net

**Padasalai Official – Android App – Download Here**

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |


**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

salai.Net www.Trb

9

# டால்பின்®

## உன்னால் முடியும்

தமிழ்

புதிய பதிப்பு - 2020

100
100
உறுதி



10ம் வகுப்பு பொதுத்தேர்வு
அடிப்படையில்
தயாரிக்கப்பட்டுள்ளது

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

ur Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@g

# டால்பின்

## உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு
2020

# 9

**10ம் வகுப்பு பொதுத் தேர்வு**
**அடிப்படையில்**
**தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்**

98653 06197 | 89256 77710 | 99435 67646
**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in

© All Copyrights reserved

விலை : ரூ.189

# பதிப்புரை

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்" – குமரகுருபரர்

என்னருமை மாணவச் செல்வங்களே!

சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே அதைத் தொழுது படித்திடடிப் பாப்பா என்றார் பாரதியார். உலக மொழிகளுள் தொன்மையானதும் சிறப்பானதும் தமிழே ஆகும். இத்தகைய செந்தமிழை நீங்கள் சுவைபட படித்துத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற வாழ்த்துகிறேன்!

உங்கள் கைகளில் தவழும் இந்த உரை நூல் சுருக்கமாக எளிய – இனிய நடையில் அமையப் பெற்றுள்ளது. பாடப்பகுதியின் உள்ளிருந்து இடம் பெற்றிருக்கும் வினா – விடைகள் போட்டித் தேர்வுகள் எழுதுவதற்குப் பயன்படும் வகையில் மிக மிக நேர்த்தியாக உருவாக்கப்பெற்றுள்ளது.

பொதுத் தேர்வுகளில் கேட்கப்படும் வினாக்களின் அடிப்படையிலேயே இவ்வுரை நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வுரை நூல் உங்களுக்கு முழு மதிப்பெண்களைப் பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

நன்றாகப் படியுங்கள்!
சாதனை படையுங்கள்!
வாழ்வில் வெற்றி பெறுங்கள்!

பாராட்டுகளுடன்
பதிப்பகத்தார்.

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிறம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

அலைபேசி எண் (Mobile No) : **9865306197 / 8925677710 / 9943567646**

கட்செவி எண் (Whatsapp No) : **9345314146**

குறுஞ்செய்தி (Sms) : **9345330937**

வலைதளம் (Website) : **www.kalvidolphin.in**

மின்னஞ்சல் (E-mail ID) : **dolphin.pub2005@gmail.com**

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுக்க - கொடுக்கப்பட வேண்டும்.

நீங்கள் எங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு **dolphin.pub2005@gmail.com** மின்னஞ்சல் **(E-Mail)** மூலமாகவும் தங்களுக்குத் தேவையான புத்தக விவரங்களை அனுப்பலாம்

**மாணவர்கள் :**

நீங்கள் எங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு **dolphin.pub2005@gmail.com** மின்னஞ்சல் **(E-Mail)** மூலமாகவும் தங்களுக்குத் தேவையான புத்தக விவரங்களை அனுப்பலாம்.

( அல்லது )

கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பணவிடை **(M.O.-Money Order)** அனுப்புவதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

## வங்கி கணக்கு விவரங்கள்

| TAMILNADU MERCANTILE BANK | | CITY UNION BANK | |
|---|---|---|---|
| A/C No | : 328150310875103 | A/C No | : 328109000204092 |
| IFSC CODE | : TMBL0000328 | IFSC CODE | : CIUB0000328 |
| BRANCH | : Srivilliputtur | BRANCH | : Srivilliputtur |

**✷ பணம் செலுத்திய பின் தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கவும் ✷**

## தொடர்புக்கு :

98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in

# பொருளடக்கம்



| இயல் | பாடத்தலைப்புகள் | | பக்க எண். |
|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | i |
| 1 | அமுதென்று பேர் | | 1 |
| | உரைநடை | திராவிட மொழிக்குடும்பம் | 13 |
| | செய்யுள் | தமிழோவியம் | 17 |
| | | தமிழ்விடு தூது | 20 |
| | துணைப்பாடம் | வளரும் செல்வம் | 23 |
| | இலக்கணம் | தொடர் இலக்கணம் | 24 |
| 2 | உயிருக்கு வேர் | | 32 |
| | உரைநடை | நீரின்றி அமையாது உலகு | 44 |
| | செய்யுள் | பட்டமரம் | 48 |
| | | பெரிய புராணம் | 50 |
| | | புறநானூறு | 53 |
| | இலக்கணம் | துணைவினைகள் | 56 |
| 3 | உள்ளத்தின் சீர் | | 59 |
| | உரைநடை | ஏறு தழுவுதல் | 69 |
| | செய்யுள் | மணிமேகலை | 72 |
| | துணைப்பாடம் | அகழாய்வுகள் | 76 |
| | இலக்கணம் | வல்லினம் மிகும் இடங்கள் | 76 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 79 |
| 4 | எட்டுத்திக்கும் சென்றிடுவீர் | | 85 |
| | உரைநடை | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் | 95 |
| | செய்யுள் | ஓ.என் சமகாலத்தோழர்களே! | 99 |
| | | உயிர்வகை | 101 |
| | துணைப்பாடம் | விண்ணையும் சாடுவோம் | 103 |
| | இலக்கணம் | வல்லினம் மிகா இடங்கள் | 104 |

| | | | |
|---|---|---|---|
| 5 | **கசடற மொழிதல்** | | 106 |
| | உரைநடை | கல்வியிற் சிறந்த பெண்கள் | 116 |
| | செய்யுள் | குடும்ப விளக்கு | 121 |
| | | சிறுபஞ்சமூலம் | 125 |
| | துணைப்பாடம் | வீட்டிற்கோர் புத்தகசாலை | 128 |
| | இலக்கணம் | இடைச்சொல் – உரிச்சொல் | 130 |
| 6 | **கலை பல வளர்த்தல்** | | 136 |
| | உரைநடை | சிற்பக்கலை | 145 |
| | செய்யுள் | இராவண காவியம் | 149 |
| | | நாச்சியார் திருமொழி | 153 |
| | துணைப்பாடம் | செய்தி | 155 |
| | இலக்கணம் | புணர்ச்சி | 156 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 160 |
| 7 | **வாழிய நிலனே** | | 164 |
| | உரைநடை | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | 175 |
| | செய்யுள் | சீவக சிந்தாமணி | 179 |
| | | முத்தொள்ளாயிரம் | 182 |
| | | மதுரைக்காஞ்சி | 184 |
| | துணைப்பாடம் | சந்தை | 187 |
| | இலக்கணம் | ஆகுபெயர் | 190 |
| 8 | **என்தலைக் கடனே** | | 194 |
| | உரைநடை | பெரியாரின் சிந்தனைகள் | 203 |
| | செய்யுள் | ஒளியின் அழைப்பு | 207 |
| | | தாவோ தே ஜிங் | 210 |
| | | யசோதர காவியம் | 212 |
| | இலக்கணம் | யாப்பிலக்கணம் | 213 |


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com


| | | | |
|---|---|---|---|
| 9 | ***அன்பென்னும் அறனே*** | | **218** |
| | உரைநடை | விரிவாகும் ஆளுமை | **227** |
| | செய்யுள் | அக்கறை | **231** |
| | | குறுந்தொகை | **232** |
| | துணைப்பாடம் | தாய்மைக்கு வறட்சி இல்லை | **234** |
| | இலக்கணம் | அணியிலக்கணம் | **235** |
| | பாடலைப்படித்து வினாக்களுக்கு விடை தருக. | | **238** |
| | விண்ணப்பம் எழுதுதல் | | **245** |
| | பொதுக்கட்டுரைகள் | | **252** |
| | இலக்கிய நயம் பாராட்டல் | | **262** |
| | எளிய வழியில் இலக்கணக் குறிப்புகளைக் கண்டறியும் முறைகள் | | **269** |
| | இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம் | | **273** |
| | அணிகள் | | **279** |





Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# மனப்பாடப்பகுதி

## தமிழ்விடுதூது

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே

## பெரிய புராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்

- சேக்கிழார்

## புறநானூறு

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!

- குடபுலவியனார்

## திருக்குறள்

1. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

2. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

3. ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

- திருவள்ளுவர்

## ஓ, என் சமகாலத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்
ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

- வைரமுத்து

## உயிர்வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

- தொல்காப்பியர்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## சிறுபஞ்சமூலம்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு. **- காரியாசான்**

## இராவண காவியம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும் **- புலவர் குழந்தை**

## திருக்குறள்

**குடிமை**

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

**சான்றாண்மை**

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

**நாணுடைமை**

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

**உழவு**

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

## சீவகசிந்தாமணி

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே
**- திருத்தக்கத்தேவர்**

## முத்தொள்ளாயிரம்

**சேரநாடு:**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

## யசோதர காவியம்

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

## அக்கறை

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை **- கல்யாண்ஜி**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் ஒன்று

# அமுதென்று பேர்

## மதிப்பீடு (பக்கம்.25)

### பலவுள் தெரிக.

1. **குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு - 1 | குழு - 2 | குழு - 3 | குழு - 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ............... | ............... | ............... | ............... |

அ) 1- வங்கம், 2-மானு, 3- தாழிசை, 4- பிறவினை
ஆ) 1- தாழிசை, 2- மானு, 3- பிறவினை, 4- வங்கம்
இ) 1 - பிறவினை, 2 - தாழிசை, 3- மானு, 4- வங்கம்
ஈ) 1- மானு, 2- பிறவினை, 3- வங்கம், 4- தாழிசை **[அ) 1- வங்கம், 2-மானு, 3- தாழிசை, 4- பிறவினை]**

2. **தமிழ்விடு தூது .................. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.**
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் **[இ) சிற்றிலக்கியம்]**

3. **விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**
அ) .......... இனம் ஆ) வண்ணம் ............ இ) ......... குணம் ஈ) வனப்பு ...........
க) மூன்று, நூறு, பத்து, எட்டு உ) எட்டு, நூறு, பத்து, மூன்று
ங) பத்து, நூறு, எட்டு, மூன்று ச) நூறு, பத்து, எட்டு, மூன்று **[க) மூன்று, நூறு, பத்து, எட்டு]**

4. **“காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக்**
**காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!” ......... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் -**
அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி **[இ) மோனை, எதுகை, இயைபு]**

5. **<u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, <u>சிந்தா</u> மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு-**
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
**[ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]**

### குறுவினா

1. **நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**
   - நாங்கள் பேசும் தமிழ்மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**
**தமிழோவியம் கவிதையில் என்னை மிகவும் ஈர்த்த அடிகள்:**

**''காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்**
**காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!''**

- உலகம் தோன்றிய நாள்முதல் தோன்றிய தமிழ் இன்றுவரை நிலைத்து நிற்பதோடு அல்லாமல், நாளும் வளரும் மொழியாய் உயர்ந்திருக்கிறது.

---

3. **கண்ணி என்பதன் விளக்கம் யாது?**
- இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.
- அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

---

4. **கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.**
- மென்பொருள், உலவி, உறை, செதுக்கி, மடிக்கணினி ஆகியன கணினி சார்ந்து நான் அறிந்த தமிழ்ச்சொற்களாகும்.

---

5. **அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை**
**அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் - இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**
- மக்களின் அகவாழ்வியல் முறைகளையும் புறவாழ்வோடு தொடர்புடைய செய்திகளையும் பாடுபொருளாகக் கொண்டு தமிழ் இலக்கிய இலக்கணங்கள் தோன்றின.
- என்பதையே இவ்வடிகள் உணர்த்துகின்றன.

---

6. **செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**
- செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் : படு, உண், பெறு.
- ஆசிரியர் பாடம் படித்தார் - செய்வினை
- பாடம் ஆசிரியரால் படிக்கப்பட்டது - செயப்பாட்டுவினை.
- செல்வி உணவு உண்டாள் - செய்வினை
- செல்வியால் உணவு உண்ணப்பட்டது - செயப்பாட்டு வினை

---

7. **வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.**
- வீணையோடு வந்தாள் - வேற்றுமைத்தொடர்
- கிளியே பேசு - விளித்தொடர்

---

## சிறுவினா

1. **சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல், கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**
- உலகில் தொன்மை மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம்மொழியில் கடல் சார்ந்த சொற்களில் எறிதிரை (எறுதிரான்), கலன் (கலயுகோய்), நீர் (நீரியோஸ்), நாவாய் (நாயு), தோணி (தோணீஸ்) போன்ற தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

---

2. **திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூன்றாகப் பிரிப்பர். அவற்றுள் சிறந்த மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு, குடகு, கூவி (குவி), கோண்டா போன்றவை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- **தமிழ்** : தொன்மையும் இலக்கிய இலக்கண வளமும் உடைய மொழி; பிறமொழிக் கலப்புக் குறைந்த மொழி; திராவிட மொழிகளின் தாய்மொழி.
- **தெலுங்கு** : தேன் போன்ற இனிய மொழி; எழுத்துமுறை தேவநாகரியை ஒட்டி அமைந்துள்ளது.
- **மலையாளம்** : சேரநாட்டின் மொழி; தமிழோடு ஒத்த இனமொழி என்பர். இதன் இலக்கியம் இராமசரிதம்.

**3. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிடமொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

- திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.
- மூன்று - தமிழ்
- மூணு - மலையாளம்
- மூடு - தெலுங்கு
- மூரு - கன்னடம்
- மூஜி - துளு

**4. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?**

- முன்னைப் பழமைக்குப் பழைமையும், பின்னைப் புதுமைக்குப் புதுமையும் கொண்ட தமிழ் மொழி.
- மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது.
- தனித்தன்மை மாறாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ் திகழ்கிறது.
- காலப்புதுமையைப் பெறத்தக்க வல்லமை கொண்டது. கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்றதாய் அமைந்துள்ளது.

**5. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.**

- software - மென்பொருள்
- browser - உலவி
- crop - செதுக்கி
- cursor - ஏவி
- cyberspace - இணைய வெளி
- server - வையக விரிவு வலை
- folder - உறை
- laptop - மடிக்கணினி

**6. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

- தன்வினை - வினையின் பயன் எழுவாயைச் சேரும்.
  - திருடன் திருந்தினான்
- பிறவினை - வினையின் பயன் பிறரையோ, பிறவற்றையோ சென்றடைதல்.
  - காவலர் திருடனைத் திருத்தினார்.

**7. ''புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்'' - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

- புதுவடிவில் புதுப்பொலிவுடன் தமிழ் வளர்ப்பேன். அறிவியல், மருத்துவம், பொறியியல் சார்ந்த மொழிபெயர்ப்புகளை உடனுக்குடன் செய்வேன்.
- நற்றமிழை அறிவியல் தமிழாய், கணினித் தமிழாய் இணையத் தமிழாய், வணிகத் தமிழாய்ப் புதுவடிவில் வளர்த்தெடுப்பேன்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## நெடுவினா

1. **திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

**மொழிக்குடும்பம்:**

- மனித இனம் வாழ்ந்த இட அமைப்பும், இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின. இதனால் பல மொழிகள் உருவாயின.
- உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- அவற்றுள் ஒன்று திராவிட மொழிக்குடும்பம்.

**திராவிட மொழிக்குடும்பம்:**

- தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்பட்டதால் இவை சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர் பலரிடையே நிலவி வந்தது.
- முதன் முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்வு செய்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன் வைத்தார். இவற்றிற்குத் தென்னிந்திய மொழிகள் எனப் பெயரிட்டார்.
- ஹோக்கன் என்பார் திராவிட மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்று கருதினார்.

**திராவிடம்:**

- தமிழ் என்ற சொல்லிலிருந்து தான் 'திராவிடா' என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.
- ஹீராஸ் பாதிரியார், இம்மாற்றத்தைத் தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று விளக்குகிறார்.

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்:**

- கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதையும் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

**தலைமைச்சிறப்பு:**

- திராவிட மொழிகள் அனைத்திற்கும் மூலமொழியாகத் திகழ்வது தமிழ்மொழி. ஏனைய திராவிட மொழிகள் தமிழிலிருந்து தோன்றி வளர்ந்தவை.
- எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிடமொழி தமிழ். இத்தகு தலைமைச் சிறப்பு வாய்ந்தது நம் தமிழ்மொழி.

**சொல்லொற்றுமை:**

- பிற திராவிட மொழிகளின் வேர்ச்சொற்களை ஆராய்ந்தால் அவை தமிழ்மொழியின் வேர்ச் சொற்களைச் சார்ந்தே தோன்றியுள்ளன என்பதை அறியலாம்.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு | கூர்க் |
|---|---|---|---|---|---|
| கண் | கண்ணு | கன்னு | கண்ணு | | ஃகன் |
| மூன்று | மூணு | மூடு | மூரு | மூஜி | |
| மரம் | மரம் | மானு | மரம் | மர | மர |
| ஒன்று | ஒண்ணு | ஒகடி | ஒந்து | ஒஞ்சி | |
| நூறு | நூறு | நூரு | நூரு | நூது | |
| நீ | நீ | நீவு | நீன் | ஈ | நின் |
| நான்கு | நால்/நாங்கு | நாலுகு | நாலு | நாலு | |
| ஐந்து | அஞ்சு | ஐது | ஐது | ஐனு | |

- தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள் ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன.

**முடிவுரை:**

- திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ் பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்விற்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.
- தமிழ்மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப்பாதுகாத்து தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாக விளங்கிவருகிறது.

---

2. **தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

**தூதுப் பொருள்கள்:**

- அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப் புள், குயில், மனம், தென்றல், வண்டு ஆகியவை தூதுப் பொருட்களாகத் தூது இலக்கியங்கள் கூறுகின்றன.
- ஆனால் அழகிய சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் அவளுடைய உள்ளக் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறி, தலைவனிடமிருந்து மாலையைப்பெற்று வரும் தகுதியுடைய ஒரே தூதுப்பொருள் தமிழே என்று எண்ணித் தமிழைத் தூதுப் பொருளாகத் தேர்வு செய்கிறாள்.

**விண்ணப்பம்:**

- சாவாமையைத் தரும் அமிழ்தமே! வீடுபேற்றைத் தரும் கனியே! முத்தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் எனக்கு ஒரு விண்ணப்பம் உண்டு, அதைக் கேட்பாயாக.

**பெருமை:**

- தமிழே! உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடி, புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். அதனால் உனக்கு ஏதேனும் உறவு உண்டோ?
- பாவின் திறம் அனைத்தும் கைவரப் பெற்று என்றுமே சிந்தாமணியாய் இருக்கும் உன்னைச் சிந்து என்று கூறிய நா இற்று விழட்டுமே.

**குணம்:**

- வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள்.
- ஆனால் நீயோ குற்றமிலாப் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளாய்.

**வண்ணம்:**

- மனிதரால் உண்டாக்கப்பட்ட அடிப்படை வண்ணங்கள் ஐந்திற்கு மேல் இல்லை, நீயோ நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

**சுவை:**

- நாவின்மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை.
- நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்.

**அழகு:**

- தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று.
- ஆனால் நீயோ நீங்காத அழகுகளாகிய அம்மை முதலிய எட்டினைப் பெற்றுள்ளாய்.
- எனவே, எனது காதலைத் தலைவனிடம் எடுத்துரைக்கும் அனைத்துச் சிறப்புகளையும் நீயே பெற்றுள்ளாய் எனத் தலைவி தமிழை வேண்டுகிறாள்.

---

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# மொழியை ஆள்வோம் (பக்கம்.27)

## மொழிபெயர்க்க.

1. **Linguistics** - மொழி ஆராய்ச்சி
2. **Literature** - இலக்கியம்
3. **Philologist** - மொழி ஆராய்ச்சியாளர்
4. **Polyglot** - பன்மொழியாளர்கள்
5. **Phonologist** - ஒலியனியல் வல்லுநர்
6. **Phonetics** - ஒலிப்பியல்

## அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் **திகழ்கிறது**. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் **கலந்துகொள்வாள்.** (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் **பேசப்படுகின்றன**. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலாச் **சென்றனர்**. (செல்)
5. தவறுகளைத் **திருத்துவேன்**. (திருத்து)

## வடிவம் மாற்றுக

**பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேல்நிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த ''உள்ளங்கையில் உலகம்'' என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜீன் திங்கள், பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் 'இன்சுவை' நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

**அறிவிப்புப் பலகை**
**அரசு மேனிலைப்பள்ளி, மருதூர்.**
**நூல் வெளியீட்டு விழா**

**நாள்** : 21.06.2019 **நேரம்** : பிற்பகல் 3 மணி
**இடம்** : பள்ளி அரங்கம்
**நூல்** : மாணவி. பூங்குழலி படைத்த ''உள்ளங்கை உலகம்''

**வெளியிட்டுச் சிறப்புரை** : கின்னஸ் சாதனை படைத்த முன்னாள் மாணவர் கவிஞர் 'இன்சுவை' அவர்கள்.

அனைவரும் வருக! தமிழின்பம் பெருக!



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

1. இளமையில் கல்வி **சிலைமேல் எழுத்து**.
2. சித்திரமும் கைப்பழக்கம் **செந்தமிழும் நாப்பழக்கம்**.
3. கல்லாடம் படித்தவரோடு **சொல்லாடாதே**.
4. கற்றோர்க்குச் சென்ற **இடமெல்லாம் சிறப்பு**.

## கடிதம் எழுதுக.

**உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், ''கால்முளைத்த கதைகள்'' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

சென்னை-1,
01-01-2020.

அன்புள்ள தோழி,

வணக்கம். நலம் நலமறிய ஆவல். என்னுடைய பிறந்த நாள் பரிசாக நீ அனுப்பிய எழுத்தாளர் இராமகிருஷ்ணன் எழுதிய ''கால் முளைத்த கதைகள்'' என்ற நூல் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. முப்பது பழங்குடியினர் சொன்ன கதைகளிலிருந்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

உலகம் தோன்றியது எப்படி? என்ற வினாவிற்கு இன்றுவரை தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. உலகம் தோன்றியதற்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன.

இந்நூலில் நாய் ஏன் பூனையைத் துரத்துகிறது? கொசு ஏன் கடிக்கிறது? வண்ணத்துப் பூச்சிகள் ஏன் பூக்களைச் சுற்றுகிறது? போன்ற தலைப்புகளில் கதைகள் உள்ளன. குழந்தைகள் மிகவும் விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற இனிய எளிய சொற்களால் சிறுசிறு கதைகள் அமைந்துள்ளன.

உன் பிறந்த நாளுக்கு இது போன்றதொரு நூலை உனக்கு அனுப்புகிறேன். மிக்க மகிழ்ச்சி.

இப்படிக்கு,
உன் அன்புத் தோழி,
த.சுதா.

| உறைமேல் முகவரி | அஞ்சல் தலை |
|---|---|
| செல்வி. வை. சுபஸ்ரீ,<br>3, தெற்கு மாசி வீதி,<br>மதுரை - 2. | |

## நயம் பாராட்டுக.

**விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்,**
**விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்**
**பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்**
**புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்**
**தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்**
**தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே**
**அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்**
**அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!** **- ம.இலெ.தங்கப்பா**

**திரண்ட கருத்து:**

பரந்து விரிந்த நீலவானிலும், ஆர்ப்பரிக்கும் ஆரவாரமிக்க கடலலைப் பரப்பிலும், விண்ணை முட்டி நிற்கும் அரிய பெரிய மலைகளிலும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளிலும், எங்கும் வற்றாது ஓடும் நீரருவியிலும், அடர்ந்த



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

மரங்களிலும் பசுமை நிறைப் புல்வெளிகளிலும், வளமிகு வயல்களிலும், விலங்கு, பறவைகளிலும் மட்டுமல்லாது காணும் பொருட்களிலெல்லாம் நிறைந்த மனதிலும் தெவிட்டிடாத பாட்டே, தூய்மையான ஊற்றே, அழகு என்னும் பேரொழுங்கே மக்களின் உடலிலும் உள்ளத்திலும் நிலையாய் என்றும் குடியிருக்க வேண்டுகிறேன்.

**மையக்கருத்து:**

விரிகின்ற வானம், பரந்த கடற்பரப்பு, விண்ணோங்கு மலை, பள்ளத்தாக்கில் விழுகின்ற அருவி, சோலை, காடு, வயல், புல்வெளி ஆகியவற்றின் இயற்கை அழகை அழகுறக் காட்டுகிறது இப்பாடல்.

**மோனைத் தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| **எ.கா.** | **வி**ரிகின்ற........ | **தெ**ரிகின்ற...... | **அ**ழகு... |
| | **வி**ண்ணோங்கு... | **தெ**விட்டாத..... | **அ**கத்திலும்... |

**எதுகைத் தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து அளவொத்து இருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

**எ.கா.** பு**ல்**வெளியில்.. ந**ல்**வயலில் **(சீர் எதுகை)**

**முரண்தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முரண்பாடான சொல்லோ, பொருளோ வருவது முரண் தொடை ஆகும்.

**எ.கா.** **மலையில், பள்ளத்தில்......** **முரண்தொடை**

நெடு**வானில்**, **கடற்**பரப்பில்

**இயைபுத்தொடை:**

இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றுபோல் வருவது இயைபுத்தொடையாகும்.

**எ.கா:** விரிகின்ற.......... கடற்பரப்**பில்**

விண்ணோங்கு......... தாக்**கில்**

பொழிகின்ற............. காட்**டில்**

புல்வெளியில்ம........ புள்**ளில்**

**அணி நயம்:**

இப்பாடலில், விண்ணோங்கு பெருமலையில் என்னும் தொடரில் ‘உயர்வு நவிற்சி அணி’ பயின்று வந்துள்ளது. மலையை வானுயர்ந்த என்று உயர்வுபடுத்தியுள்ளமையால் அது ‘உயர்வு நவிற்சி அணி’யாகும்.

**சுவை நயம்:**

இயற்கையின் அழகு மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதால் இதில் ‘உவகைச் சுவை’ பயின்று வந்துள்ளது.

## நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.

உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

**உலகத் தாய்மொழி நாள் விழா**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **இறை வணக்கம்** | : | மாணவர்கள் |
| **தமிழ்த்தாய் வாழ்த்து** | : | மாணவர்கள் |
| **வரவேற்புரை** | : | தமிழ் இனியன் |
| **தலைமையுரை** | : | புலவர் கவிமுகிலன் |
| **விழா சிறப்புரை** | : | முனைவர் சு.இராமன் |
| **வாழ்த்துரை** | : | முனைவர் ம.சுந்தரமூர்த்தி, இயக்குநர் |
| **நன்றியுரை** | : | க.மணி, தமிழாசிரியர் |

**நாட்டுப்பண்**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## மொழியோடு விளையாடு (பக்கம்.28)

### அந்தாதிச் சொற்களை உருவாக்குக.

அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.

**அத்தி** : திகைப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைப்பேசி, சிறப்பு, புதுமை

**குருவி** : விளக்கு, குரங்கு, குறும்பு, புங்கை, கைதி, திகைப்பு, புடவை, வைப்பு நிதி, திறமை, மைனா

**விருது** : துளசி, சிகப்பு, புதுசு, சுக்கு, குத்து, தும்பை, பைரவி, விருந்து, துண்டு

**இனிப்பு** : புதிது, துலக்கு, குடுமி, மிளகு, குடந்தை, தை மாதம்

**வரிசையாக** : கரும்பு, புலவி, விளக்கு, குடுவை, வைதேகி, கிழமை

---

### அகராதியில் காண்க.

1. **நயவாமை** - விரும்பாமை
2. **கிளத்தல்** - சிறப்பித்துக் கூறுதல்
3. **கேழ்பு** - உவமை, நன்மை
4. **செம்மல்** - தலைவன், இறைவன்
5. **புரிசை** - மதில், அரண்

---

### கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.

| வா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | வந்தேன் | வருகிறேன் | வருவேன் |
| நாங்கள் | வந்தோம் | வருகிறோம் | வருவோம் |
| நீ | வந்தாய் | வருகிறாய் | வருவாய் |
| நீங்கள் | வந்தீர்கள் | வருகின்றீர்கள் | வருவீர்கள் |
| அவன் | வந்தான் | வருகிறான் | வருவான் |
| அவள் | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| அவர் | வந்தார் | வருகிறார் | வருவார் |
| அவர்கள் | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| அது | வந்தது | வருகிறது | வரும் |
| அவை | வந்தன | வருகின்றன | வரும் |

**தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| தா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| **நான்** | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| **நாங்கள்** | தந்தோம் | தருகிறோம் | தருவோம் |
| **நீ** | தந்தாய் | தருகிறாய் | தருவாய் |
| **நீங்கள்** | தந்தீர்கள் | தருகின்றீர்கள் | தருவீர்கள் |
| **அவன்** | தந்தான் | தருகிறான் | தருவான் |
| **அவள்** | தந்தாள் | தருகிறாள் | தருவாள் |
| **அவர்** | தந்தார் | தருகிறார் | தருவார் |
| **அவர்கள்** | தந்தார்கள் | தருகிறார்கள் | தருவார்கள் |
| **அது** | தந்தது | தருகிறது | தரும் |
| **அவை** | தந்தன | தருகின்றன | தரும் |

| காண் | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| **நான்** | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| **நாங்கள்** | கண்டோம் | காண்கிறோம் | காண்போம் |
| **நீ** | கண்டாய் | காண்கிறாய் | காண்பாய் |
| **நீங்கள்** | கண்டீர்கள் | காண்கிறீர்கள் | காண்பீர்கள் |
| **அவன்** | கண்டான் | காண்கிறான் | காண்பான் |
| **அவள்** | கண்டாள் | காண்கிறாள் | காண்பாள் |
| **அவர்** | கண்டார் | காண்கிறார் | காண்பார் |
| **அவர்கள்** | கண்டார்கள் | காண்கிறார்கள் | காண்பார்கள் |
| **அது** | கண்டது | காண்கிறது | காணும் |
| **அவை** | கண்டன | காண்கின்றன | காணும் |

| பெறு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| **நான்** | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| **நாங்கள்** | பெற்றோம் | பெறுகிறோம் | பெறுவோம் |
| **நீ** | பெற்றாய் | பெறுகிறாய் | பெறுவாய் |
| **நீங்கள்** | பெற்றீர்கள் | பெறுகிறீர்கள் | பெறுவீர்கள் |
| **அவன்** | பெற்றான் | பெறுகிறான் | பெறுவான் |
| **அவள்** | பெற்றாள் | பெறுகிறாள் | பெறுவாள் |
| **அவர்** | பெற்றார் | பெறுகிறார் | பெறுவார் |
| **அவர்கள்** | பெற்றார்கள் | பெறுகிறார்கள் | பெறுவார்கள் |
| **அது** | பெற்றது | பெறுகிறது | பெறும் |
| **அவை** | பெற்றன | பெறுகின்றன | பெறும் |

| நீந்து | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| **நான்** | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| **நாங்கள்** | நீந்தினோம் | நீந்துகிறோம் | நிந்துவோம் |
| **நீ** | நீந்தினாய் | நீந்துகிறாய் | நீந்துவாய் |
| **நீங்கள்** | நீந்தினீர்கள் | நீந்துகிறீர்கள் | நீந்துவீர்கள் |
| **அவன்** | நிந்தினான் | நீந்துகிறான் | நீந்துவான் |
| **அவள்** | நீந்தினாள் | நீந்துகிறான் | நீந்துவாள் |
| **அவர்** | நீந்தினார் | நீந்துகிறார் | நீந்துவார் |
| **அவர்கள்** | நீந்தினார்கள் | நீந்துகிறார்கள் | நீந்துவார்கள் |
| **அது** | நீந்தியது | நீந்துகிறது | நீந்தும் |
| **அவை** | நீந்தின | நீந்துகின்றன | நீந்தும் |

| பாடு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| **நான்** | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| **நாங்கள்** | பாடினோம் | பாடுகிறோம் | பாடுவோம் |
| **நீ** | பாடினாய் | பாடுகிறாய் | பாடுவாய் |
| **நீங்கள்** | பாடினீர்கள் | பாடுகிறீர்கள் | பாடுவீர்கள் |
| **அவன்** | பாடினான் | பாடுகிறான் | பாடுவான் |
| **அவள்** | பாடினாள் | பாடுகிறாள் | பாடுவாள் |
| **அவர்** | பாடினார் | பாடுகிறார் | பாடுவார் |
| **அவர்கள்** | பாடினார்கள் | பாடுகிறார்கள் | பாடுவார்கள் |
| **அது** | பாடியது | பாடுகிறது | பாடும் |
| **அவை** | பாடின | பாடுகின்றன | பாடும் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| கொடு | | | |
|---|---|---|---|
| | **இறந்த காலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| **நான்** | கொடுத்தேன் | கொடுக்கிறேன் | கொடுப்பேன் |
| **நாங்கள்** | கொடுத்தோம் | கொடுக்கிறோம் | கொடுப்போம் |
| **நீ** | கொடுத்தாய் | கொடுக்கிறாய் | கொடுப்பாய் |
| **நீங்கள்** | கொடுத்தீர்கள் | கொடுக்கிறீர்கள் | கொடுப்பீர்கள் |
| **அவன்** | கொடுத்தான் | கொடுக்கிறான் | கொடுப்பான் |
| **அவள்** | கொடுத்தாள் | கொடுக்கிறாள் | கொடுப்பாள் |
| **அவர்** | கொடுத்தார் | கொடுக்கிறார் | கொடுப்பார் |
| **அவர்கள்** | கொடுத்தார்கள் | கொடுக்கிறார்கள் | கொடுப்பார்கள் |
| **அது** | கொடுத்தது | கொடுக்கிறது | கொடுக்கும் |
| **அவை** | கொடுத்தன | கொடுக்கின்றன | கொடுக்கும் |

## அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமாகத் தொடர் அமைக்க.

**(திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)**

எ.கா. **நான் திடலில் ஓடினேன் (தன்வினை)**
**திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் (பிறவினை)**

நான் **போட்டியில்** ஆடினேன். (தன் வினை)
நான் **போட்டியில்** பொம்மையை ஆட்டினேன். (பிறவினை)


நான் **மழையில்** நனைந்தேன். (தன் வினை)
நான் **மழையில்** துணியை நனைத்தேன். (பிறவினை)

நான் **வேகமாக** எழுதினேன். (தன் வினை)
நான் **வேகமாக** எழுதுவித்தேன். (பிறவினை)

நான் **மண்ணில்** நடந்தேன் (தன் வினை)
நான் **மண்ணில்** நடப்பித்தேன் (பிறவினை)

| எழுவாய் / பெயர் | வினை அடி | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| காவியா | வரை | **வரைந்தாள்** | **வரைவித்தாள்** |
| கவிதை | நனை | **நனைந்தேன்** | **நனைவித்தேன்** |
| இலை | அசை | **அசைந்தது** | **அசைவித்தது** |
| மழை | சேர் | **சேர்ந்தது** | **சேர்த்தது** |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



கூண்டிற்குள் சிக்கிய குயில்போலக்

குடுவைக்குள் சிக்கிய சிறுமீனோ!

கூட்டை விட்டுத் தன்னந்தனியாய்த் தானே முயன்று

துள்ளிக் குதிக்கிறது.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## நிற்க அதற்குத் தக.

**உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன், பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | **நான் எழுதிய கட்டுரைக்கு முதற்பரிசு கிடைத்தது. அனைவரும் பாராட்டினர்.** |
| புதன் | **பேருந்தில் பயணிக்கும் போது, என் இருக்கையை முதியவர் ஒருவருக்கு அமர அளித்தேன். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.** |
| வியாழன் | **விடுபட்ட வீட்டுப் பாடங்களை எழுதினேன்.** |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | **என் அப்பாவுடன் சந்தைக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிவர அவருக்கு உதவியாக இருந்தேன்.** |
| ஞாயிறு | **உள்ளூர் நூலகத்திற்குச் சென்று கதைப் புத்தகங்கள் படித்தேன்.** |

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| **உருபன்** | Morpheme | **ஒலியன்** | Phoneme |
| **ஒப்பிலக்கணம்** | Comparative Grammar | **பேரகராதி** | Lexicon |






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**உரைநடை உலகம்**

# இயல் ஒன்று

# திராவிட மொழிக்குடும்பம்

## சரியான விடையைத் தேர்க.

1. இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர்.
அ) குமரிலபட்டர் ஆ) ஹீராஸ் பாதிரியார் இ) அகத்தியலிங்கம் ஈ) கால்டு வெல்
[இ) அகத்தியலிங்கம்]

2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூல் வெளியான ஆண்டு.
அ) 1856 ஆ) 1855 இ) 1854 ஈ) 1578 [அ) 1856]

3. ஐரோப்பிய மொழியோடு தொடர்புடையது வடமொழி என்று முதலில் கூறியவர்.
அ) பிரான்சிஸ் எல்லிஸ் ஆ) வில்லியம் ஜோன்ஸ் இ) ஹோக்கன் ஈ) எமினோ
[ஆ) வில்லியம் ஜோன்ஸ்]

4. திராவிட மொழிகள் மொத்தம்
அ) 24 ஆ) 25 இ) 28 ஈ) 22 [இ) 28]

5. 'தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக்குடும்பத்திற்குரிய மொழி' - இது யார் கூற்று?
அ) கால்டுவெல் ஆ) ஜி.யு.போப் இ) எமினோ ஈ) எல்லீஸ் [அ) கால்டுவெல்]

6. கீழ்வருவனவற்றுள் நடு திராவிட மொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) கன்னடம் ஈ) துளு [ஆ) தெலுங்கு]

7. மூன்று எனும் எண்ணுப்பெயர் கன்னடத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) மூஜி ஆ) மூடு இ) மூரு ஈ) மூணு [இ) மூரு]

8. **கூற்று 1 :** திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை என்றவர் கால்டுவெல்
**கூற்று 2 :** திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்
அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1, 2 சரி ஈ) கூற்று 1, 2 தவறு
[இ) கூற்று 1, 2 சரி]

9. தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளை ஒரே இனமாகக் கருதித் 'தென்னிந்திய மொழிகள்' என்று பெயரிட்டவர்
அ) பிரான்சிஸ் எல்லிஸ் ஆ) ஹோக்கன் இ) மாக்ஸ்முல்லர் ஈ) எமினோ
[அ) பிரான்சிஸ் எல்லிஸ்]

10. இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை
அ) 6000க்கு மேல் ஆ) 3000 க்கு மேல் இ) 1300க்கு மேல் ஈ) 3100க்கு மேல்
[இ) 1300க்கு மேல்]

12. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மால்தோ, தோடா, கோண்டி ஆகிய மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் எனப் பெயரிட்டவர் யார்?
அ) ஹோக்கன் ஆ) எல்லிஸ் இ) வில்லியம் ஜோன்ஸ் ஈ) கால்டுவெல்
[அ) ஹோக்கன்]



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**13. திராவிட மொழிகளை தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என எதன் அடிப்படையில் பகுத்தனர்.**

அ) இட அமைப்பு ஆ) இயற்கை அமைப்பு
இ) ஒலி அடிப்படையில் ஈ) பரவிய நில அடிப்படையில்

**[ஈ) பரவிய நில அடிப்படையில்]**

---

**14. தமிழ் மொழியின் மிகப்பழமையான இலக்கியம் எது?**

அ) இதிகாசங்கள் ஆ) சங்க இலக்கியம் இ) காப்பியங்கள் ஈ) புதினங்கள்

**[ஆ) சங்க இலக்கியம்]**

---

**15. மலையாள மொழியின் பழமையான இலக்கண நூல் எது?**

அ) தொல்காப்பியம் ஆ) கவிராஜ மார்க்கம் இ) லீலா திலகம் ஈ) அகத்தியம்

**[இ) லீலா திலகம்]**

---

**16. ஆந்திர பாஷா பூஷணம் என்னும் இலக்கண நூல் தோன்றிய காலம்**

அ) 9ஆம் நூற்றாண்டு ஆ) 11 ஆம் நூற்றாண்டு இ) 5 ஆம் நூற்றாண்டு ஈ) 12 ஆம் நூற்றாண்டு

**[ஈ) 12 ஆம் நூற்றாண்டு]**

---

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

17. உலகில் குறிப்பிடத்தக்க பழமையான நாகரிகங்களுள் ------ ஒன்று. - **இந்திய நாகரிகமும்**

18. ----- ஆம் ஆண்டில் பாப், ராஸ்க், கிரிம் முதலானோரால் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. - 1816

20. திராவிட மொழிகளில் ---- தன்மையை ஒட்டிப் பால் பாகுபாடு அமைந்துள்ளது. - **பொருள்களின்**

21. இந்திய இலக்கணக்கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் என்ற நூலின் ஆசிரியர் ---- - **செ.வை.சண்முகம்**

22. தமிழ் ------ மொழியின் பண்புகள் பலவற்றைப் பேணிப்பாதுகாத்து வருகிறது. - **மூலத்திராவிட**

---

## குறுவினாக்கள்

**1. இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என்றழைப்பதேன்?**

➢ இந்தியாவில் பல்வேறு மொழிகளும் பல கிளை மொழிகளும் பேசப்படுவதால் இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என அழைக்கிறோம்.

---

**2. அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகள் யாவை?**

➢ எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகியன அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகளாகும்.

---

**3. தென்திராவிட மொழிகள் யாவை?**

➢ தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா ஆகியன தென்திராவிட மொழிகளாகும்.

---

**4. வடதிராவிட மொழிகள் யாவை?**

➢ குரூக், மால்தோ, பிராகுய் ஆகியன வடதிராவிட மொழிகளாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**5. ஹோக்கன் எவ்வெவ்மொழிகளை இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டார்?**

- தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மால்தோ, தோடா, கோண்டி முதலிய மொழிகளை இணைத்து ஹோக்கன் தமிழியன் என்று பெயரிட்டார்.

---

**6. திராவிட மொழிக்குடும்பம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?**

- மொழிகள் பரவிய நில அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
  - தென்திராவிட மொழிகள்
  - நடுத்திராவிட மொழிகள்
  - வடதிராவிட மொழிகள்

ஆகியவை திராவிட மொழிக்குடும்பமாகும்.

---

**7. திராவிட மொழிகளின் பழமையான இலக்கியங்களைக் கூறுக.**
**திராவிட மொழிகளின் பழமையான இலக்கியங்கள்:**

- தமிழ் - சங்க இலக்கியம்
- தெலுங்கு - பாரதம்
- கன்னடம் - கவிராஜ மார்க்கம்
- மலையாளம் - ராம சரிதம்

---

**8. இந்தியாவில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள் யாவை?**
**இந்தியாவில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள்:**

- இந்தோ - ஆசிய மொழிகள்
- திராவிட மொழிகள்
- ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
- சீன - திபெத்திய மொழிகள்

---

**9. தமிழ் குறித்து ஹீராஸ் பாதிரியார் கூறுவது யாது?**

- தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என மாற்றம் பெற்றது என்று ஹீராஸ் பாதிரியார் கூறுகிறார்.

---

**10. திராவிட மொழிகளின் பழமையான இலக்கண நூல்களைக் குறிப்பிடுக.**
**திராவிட மொழிகளின் பழமையான இலக்கண நூல்கள்:**

- தமிழ் - தொல்காப்பியம்
- மலையாளம் - லீலா திலகம்
- கன்னடம் - கவிராஜ மார்க்கம்
- தெலுங்கு - ஆந்திர பாஷா பூஷணம்

---

## சிறுவினாக்கள்

**1. திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாவர்?**

- கால்டுவெல், ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் முதலியோர் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**2. திராவிட மொழிகளின் பொதுப் பண்புகள் யாவை?**

- திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டுள்ளன.
- **சான்று :** கண் - தமிழ், கண்ணு - மலையாளம், கன்னடம், கன்னு - தெலுங்கு, குடகு, ஃகன் - குரூக், கெண் - பர்ஜி, கொண் - தோடா.
- திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே உள்ளன. மூன்று - தமிழ், மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி - துளு.
- குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.
  **எ.கா:** அடி- குறில், ஆடி - நெடில், வளி - குறில், வாளி - நெடில்.

---

**3. திராவிட மொழிகளின் பால் பாகுபாடு குறித்து விளக்குக.**

- திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது.
- திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது.
- அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால் காட்டும் விகுதிகள் இல்லை.
- தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.

---

**4. மொழியின் தோற்றம் குறித்து எழுதுக.**

- தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதன் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.
- தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.
- இவற்றின் மூலம் பருப்பொருட்களை மட்டுமே உணர்த்த முடிந்தது. நுண் பொருள்களை உணர்த்த முடியவில்லை.
- அதனால் ஒலியை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினான்.
- சைகையோடு சேர்ந்து பொருள் உணர்த்திய ஒலி காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமை பெற்று மொழியாக வளர்ந்தது.

---

**5. திராவிட மொழிக்குடும்பம் தோன்றிய வரலாற்றைக் கூறுக.**

- உலகில் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்று ஹரப்பா மொகஞ்சதாரோ அகழாய்வுக்குப் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.
- 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும் அதிலிருந்தே மற்றமொழிகள் தோன்றி வளர்ந்தன எனவும் அறிஞர்கள் கருதினர்.
- அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் வடமொழியை ஆராய்ந்து வடமொழி ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என்று குறிப்பிட்டார்.
- முதன்முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகள் தனி மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்று கூறினார்.
- ஹோக்கன் என்பார் திராவிட மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து அவை மாறுபட்டவை என்று கூறினார்.
- கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை, எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதைப் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- கால்டுவெல்லுக்குப் பின்னர் ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தனர்.

## நெடுவினா

**1. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை விளக்குக.**

- தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடைய மொழி.
- இலங்கை, இந்தோனேஷியா, பிஜித்தீவு, தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமை உடையது.
- தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழி.
- பிறமொழிக் கலப்பின்றித் தனித்து இயங்கும் மொழி.
- பிறமொழித்தாக்கம் குறைவாக உள்ள மொழி.
- சொல்வளமும், சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி.
- ஒரு பொருள் குறித்த பல சொற்களைப் பெற்ற மொழி.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழ்க்கல்வெட்டுகளே.
- தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்களிலிருந்தே பிற திராவிட மொழிகள் ‘ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி’ வடிவம் பெற்றிருக்கின்றன.
- எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்ட ஒரே திராவிட மொழி தமிழ்.
- திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழி.
- தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்ட மொழி.

**கவிதைப்பேழை**

## இயல் ஒன்று

## தமிழோவியம்

**– ஈரோடு தமிழன்பன்**

## சரியான விடையைத் தேர்க.

**1. ஈரோடு தமிழன்பனின் சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல்.**

அ) தமிழோவியம் ஆ) வணக்கம் வள்ளுவ இ) தமிழன்பன் கவிதைகள் ஈ) இனிமைத்தமிழ்

**[ஆ) வணக்கம் வள்ளுவ]**

**2. ‘இனிமையும் நீர்மையும் தமிழெனல்’ ஆகும். இத்தொடர் இடம் பெற்ற நூல்**

அ) தமிழோவியம் ஆ) பிங்கல நிகண்டு இ) தமிழ் விடு தூது ஈ) புறநானூறு

**[ஆ) பிங்கல நிகண்டு]**

**3. காலம் பிறக்கும் முன் பிறந்தது.**

அ) இலக்கியங்கள் ஆ) இலக்கணங்கள் இ) தமிழ் ஈ) தொல்காப்பியம்

**[இ) தமிழ்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. **தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகளுள் ஒன்று**
அ) இந்தியா ஆ) சிங்கப்பூர் இ) மொரிசியஸ் ஈ) கனடா **[ஆ) சிங்கப்பூர்]**

5. **தமிழோவியம் என்னும் கவிதை நூலின் ஆசிரியர் யார்?**
அ) தமிழ்த்தாத்தா உ.வே.சா. ஆ) ஈரோடு வெங்கடப்பர் மகன் இராமசாமி
இ) ஈரோடு தமிழன்பன் ஈ) பாரதிதாசன் **[இ) ஈரோடு தமிழன்பன்]**

6. **வணக்கம் வள்ளுவ என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கிய ஆண்டு**
அ) 2001 ஆ) 2002 இ) 2003 ஈ) 2004 **[ஈ) 2004]**

7. **உலகத் தாய்மொழி நாள்**
அ) ஜனவரி 21 ஆ) பிப்ரவரி 21 இ) மார்ச் 21 ஈ) ஏப்ரல் 21
**[ஆ) பிப்ரவரி 21]**

8. **‘காலமும்’ என்பதன் இலக்கணக் குறிப்பு**
அ) வினைமுற்று ஆ) உம்மைத்தொகை இ) முற்றும்மை ஈ) பெயரெச்சம்
**[இ) முற்றும்மை]**

9. **‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’’ என்று பாடியவர்**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) தாராபாரதி
**[அ) பாரதியார்]**

10. ஈரோடு தமிழன்பனின் தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் -----. -
அ) இலக்கிய வரலாறு ஆ) சிறுகதை இ) தமிழன்பன் கவிதைகள் ஈ) வணக்கம் வள்ளுவ
**[இ) தமிழன்பன் கவிதைகள்]**

11. மானிட மேன்மையைச் சாதித்திடக் ------ மட்டுமே போதுமே.
அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) தொல்காப்பியம் ஈ) திருக்குறள் **[ஈ) திருக்குறள்]**

## குறுவினாக்கள்

1. **தமிழோவியம் நூல் குறித்துக் கவிஞர் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள செய்தி யாது?**
   - ‘‘ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்’’ என்று தமிழோவியம் நூல் குறித்துக் கவிஞர் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

2. **ஏன் குறைகள் சொல்வதை விட்டுவிட வேண்டும்?**
   - விரல்களை மடக்கிக் கொண்டு வீணையில் இசை பொழிய முடியாததைப் போல, பிறர் குறைகள் பேசுவதைத் தவிர்த்துப் புதிய வடிவம் பெற்ற தமிழை வளர்க்க வேண்டும்.

3. **ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதை வடிவங்கள் யாவை?**
   - புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள், சென்ரியு கவிதைகள், லிமரைக்கூ கவிதைகள் ஆகிய கவிதை வடிவங்களில் ஈரோடு தமிழன்பன் கவிதைகள் எழுதியுள்ளார்.

4. **ஈரோடு தமிழன்பனின் கவிதைகள் எந்தெந்த மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன?**
   - தமிழன்பனின் கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



5. **தமிழ்மொழியின் தொன்மை குறித்து ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுவது யாது?**
   - காலம் பிறப்பதற்கு முன்பே தனிச்சிறப்புடன் பிறந்த மொழி தமிழ்மொழி. எந்தக் காலமும் நிலைபெற்று நிற்கும் மொழியும் தமிழ்மொழியே என ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுகிறார்.

6. **காப்பியங்களின் சிறப்புக் குறித்து ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுவது யாது?**
   - தமிழ் மொழியில் தோன்றிய காப்பியங்களுக்கு இணையான காப்பியங்கள் வேறு எந்த மொழியிலும் தோன்றவில்லை, என்பதை எண்ணி உள்ளம் மகிழ்கிறது என்று ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுகிறார்.

7. **குறளின் சிறப்புக் குறித்து தமிழன்பன் குறிப்பிடுவது யாது?**
   - குறள் கூறும் கருத்துகளைக் கற்று அதன்படி நடந்தால் மனித வாழ்வு மேன்மைபெறும் என்று ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுகிறார்.

8. **சமயங்கள் வளர்ச்சிபெற தமிழ் மொழியின் பங்கு யாது?**
   - ஒரு தாய் எப்படித் தனது குழந்தையைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பாளோ அதுபோல எல்லாச் சமயங்களையும் பாதுகாத்து வளர்த்த பெருமை தமிழ் மொழிக்கு உண்டு.

9. **சித்தர் பாடல்களின் சிறப்பு யாது?**
   - சமுதாயத்தின் தீமைகளை அறுக்கின்ற புதுப்புதுச் சிந்தனைகளைச் சித்தர் பாடல்கள் வழங்கின.

## சிறுவினா

1. **ஈரோடு தமிழன்பன் - ஆசிரியர் குறிப்பு வரைக.**
   - ஈரோடு தமிழன்பன் 28-09-1940இல் கோவை மாவட்டம் சென்னி மலையில் பிறந்தார்.
   - இவரது பெற்றோர் நடராஜன், வள்ளியம்மாள்.
   - இவரது இயற்பெயர் ஜெகதீசன்.
   - இவர் விடிவெள்ளி என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதினார்.
   - இவர் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களில் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.
   - ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
   - இவரது 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
   - இவரது 'தமிழன்பன் கவிதைகள்' நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது.
   - இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

2. **ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ-வின் பண்புகளைப் பற்றிக் கூறுக.**

**ஹைக்கூ:**
   - ஹைக்கூ ஜப்பானிய மொழிக்கவிதை.
   - மூன்று அடிகள் கொண்டது.
   - ஜென் தத்துவத்தோடும் இயற்கை மற்றும் மெய்யியலோடும் தொடர்பு கொண்டது.
   - கவித்துவம் கொண்டது.
   - 1974-இல் கவிக்கோ அப்துல் ரகுமான் தமிழில் முதன்முதலாக 'ஹைக்கூ' படைத்துள்ளார்.

**சென்ரியு:**
   - கவித்துவம் குறைந்து நகைச்சுவை உணர்வு மேலோங்கி இருந்தால் அது சென்ரியு.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- சமூகம், அரசியல் ஆகியவை குறித்து நகைச்சுவை உணர்வோடும், அங்கத உணர்வோடும் வெளிப்படுத்தும்.
- மூன்று அடிகள் கொண்டவை.
- தமிழில் முதன் முதலாக ஈரோடு தமிழன்பன் ‘சென்ரியு’ படைத்துள்ளார்.

**லிமரைக்கூ:**

- ஆங்கிலத்தில் லிமரிக் என்பது ஒரு கவிதை வடிவம்.
- ஐந்து அடிகளில் அமையும்.
- இந்தக் கவிதை வேடிக்கை, வினோதம், நகைச்சுவை முதலிய உணர்வோடு இயங்கக் கூடியது.
- தமிழில் முதன்முதலாக ஈரோடு தமிழன்பன் ‘லிமரைக்கூ’வைப் படைத்துள்ளார்.

## நெடுவினா

1. **தமிழோவியம் என்னும் கவிதை மூலம் ஈரோடு தமிழன்பன் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**தமிழின் தொன்மை:**

- காலம் பிறப்பதற்கு முன்பே தனிச் சிறப்புடன் பிறந்த மொழி நம் தமிழ்மொழி.
- எந்தக் காலமும் நிலைத்து நிற்கும் மொழியும் நம் தமிழ்மொழியே.

**இலக்கிய இலக்கணச் சிறப்பு:**

- தமிழ்மொழியில் தோன்றிய காப்பியங்களுக்கு இணையான காப்பியங்கள் வேறு எந்த மொழியிலும் பார்க்க முடியாது அத்தகைய சிறப்பு வாய்ந்தது.
- மனிதனின் வாழ்வியல் இலக்கணங்களைக் கூறும் குறளைக் கற்று அதன்படி நடந்தால் மனித வாழ்வு மேன்மை பெறும்.
- எல்லாச் சமயங்களையும் வளர்த்த பெருமை தமிழ்மொழிக்கே உண்டு.
- சமுதாய இருளைப் போக்கும் புது சிந்தனைகளைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.
- மனித வாழ்வியலின் அகவாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் பற்றிக் கூறும் சங்க இலக்கியங்களைப் பெற்ற மொழி தமிழ்மொழி.
- மனிதனின் அகப்புற வாழ்க்கை இத்தகையதாக இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தைக் கூறுகின்றன இலக்கண நூல்கள்.

**வேண்டுகோள்:**

- விரல்களை மடக்கிக் கொண்டு வீணையில் இசை வரவில்லை என்று கூறுபவனைப் போல, குறைகளைச் சொல்வதை விட்டுவிட்டு புதிய புதிய வடிவில் தமிழை வளர்க்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

**கவிதைப்பேழை**

## இயல் ஒன்று — தமிழ்விடு தூது

## சரியான விடையைத் தேர்க.

1. **தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள்**

அ) தூது ஆ) பள்ளு இ) கண்ணி ஈ) அந்தாதி **[இ) கண்ணி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. 1. வண்ணங்கள் - அ) ஒன்பது
2. குணங்கள் - ஆ) எட்டு
3. வனப்பு - இ) நூறு
4. நவரசம் - ஈ) பத்து

அ) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ ஆ) 1-ஈ, 2-இ, 3-அ, 4-ஆ
இ) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ ஈ) 1-அ, 2-ஆ, 3-இ, 4-ஈ **[அ) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ]**

3. **தவறானதைத் தேர்ந்தெடுக்க.**
அ) இராசசம் - சோம்பல் ஆ) வனப்பு - அழகு இ) தாமசம் - தாழ்மை ஈ) சத்துவம் - அமைதி
**[அ) இராசசம் - சோம்பல்]**

4. **தமிழ்விடு தூது நூலை முதலில் பதிப்பித்தவர்**
அ) தெ.பொ.மீ ஆ) உ.வே.சா இ) பரிமேலழகர் ஈ) மணக்குடவர்
**[ஆ) உ.வே.சா]**

5. **சிந்தாமணி - என்பதன் இலக்கணக்குறிப்பு**
அ) உருவகம் ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) வேற்றுமைத்தொகை
**[இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]**

6. **தமிழ்விடு தூது ______ இலக்கிய வகையைச் சார்ந்தது.**
அ) காப்பியம் ஆ) புதுக்கவிதை இ) தனிப்பாடல் ஈ) சிற்றிலக்கியம்
**[ஈ) சிற்றிலக்கியம்]**

7. **சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை ______ .**
அ) 96 ஆ) 113 இ) 105 ஈ) 64 **[அ) 96]**

8. **தமிழ்விடு தூதில் அமைந்துள்ள கண்ணிகளின் எண்ணிக்கை**
அ) 862 ஆ) 682 இ) 268 ஈ) 286 **[இ) 268]**

9. **தமிழ்விடுதூது ______ பாவினால் பாடப்பட்டது.**
அ) குறள் வெண்பா ஆ) கலி வெண்பா இ) இன்னிசை வெண்பா ஈ) பஃறொடை வெண்பா
**[ஆ) கலி வெண்பா]**

10. **வனப்பு என்பதன் பொருள்**
அ) அழகு ஆ) வரப்பு இ) வார்ப்பு ஈ) காட்டுப்பூ **[அ) அழகு]**

11. **வாயில் இலக்கியம் என அழைக்கப்படுவது**
அ) பள்ளு ஆ) பிள்ளைத்தமிழ் இ) தூது ஈ) அந்தாதி **[இ) தூது]**

12. **சிந்து என்பது ______.**
அ) ஒருவகை இசைப்பாடல் ஆ) சிதறடிக்காதே
இ) ஒருவகை சித்து விளையாட்டு ஈ) காவடியாட்டம் **[அ) ஒருவகை இசைப்பாடல்]**

13. **தமிழ்விடு தூதின் ஆசிரியர் யார்?**
அ) மதுரை சொக்கநாதர் ஆ) உ.வே.சா. இ) யாரெனத் தெரியாது ஈ) ஈரோடு தமிழன்பன்
**[இ) யாரெனத் தெரியாது]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



14. முத்திக்கனி இலக்கணக் குறிப்பு

அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உருவகம் ஈ) பண்புத்தொகை

**[இ) உருவகம்]**

15. தமிழ்விடுதூது இலக்கியத்தைப் பதிப்பித்த ஆண்டு

அ) 1930 ஆ) 1931 இ) 1929 ஈ) 1946 **[அ) 1930]**

## குறுவினாக்கள்

1. **முத்தமிழ்கள் யாவை?**
   - இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியன முத்தமிழ்களாகும்.

2. **மூவகைப் பாவினங்கள் யாவை?**
   - துறை, தாழிசை, விருத்தம் ஆகியவை மூவகைப் பாவினங்களாகும்.

3. **முற்றும் உணர்ந்த தேவர்கள் பெற்ற குணங்கள் யாவை?**
   - முற்றும் உணர்ந்த தேவர்கள் சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களைப் பெற்றுள்ளார்கள்.

4. **அடிப்படை வண்ணங்கள் யாவை?**
   - வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை ஆகிய ஐந்தும் அடிப்படை வண்ணங்களாகும்.

6. **அறுவகைச் சுவைகள் யாவை?**
   - இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகியன அறுவகைச் சுவைகளாகும்.

7. **எட்டுவகை வனப்புகள் யாவை?**
   - அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகியவை எட்டுவகை வனப்புகளாகும்.

8. **ஒன்பது சுவைகள் யாவை?**
   - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகியவை நவரசங்களாகும்.

9. **கண்ணி குறிப்பு வரைக.**
   - இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

10. **பத்துக் குணங்கள் யாவை?**
    - செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி ஆகியவை பத்துக் குணங்களாகும்.

11. **சிந்தாமணி உணர்த்தும் இரு பொருள்கள் யாவை?**
    - சிந்தாமணி என்பது சீவக சிந்தாமணி என்னும் இலக்கியத்தையும் சிதறாதமணி (சிந்தாமணி) என்ற பொருளையும் தருகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**12. தூது இலக்கியத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

- வாயில் இலக்கியம், சந்து இலக்கியம், என்னும் வேறு பெயர்களால் தூது இலக்கியம் அழைக்கப்படுகிறது.

---

**13. தூது இலக்கியம் குறிப்பு வரைக.**

- தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக மாலையை வாங்கி வருமாறு அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் கலிவெண்பாவால் இயற்றப்படுவது தூது இலக்கியம் ஆகும்.

---

**14. தமிழ்விடு தூது குறிப்பு வரைக.**

- மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளதே தமிழ்விடு தூதாகும்.

---

## சிறுவினா

**1. தமிழ்விடு தூது நூற்குறிப்பு வரைக.**

- தமிழ்விடு தூது 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- இது வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.
- இதன் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.
- இது மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது.
- இது கலிவெண்பாவால் இயற்றப்பட்டுள்ளது.
- 268 கண்ணிகளைக் கொண்டது.
- இதை 1930ல் உ.வே.சா. பதிப்பித்தார்.

---

## விரிவானம்

**இயல் ஒன்று**

**வளரும் செல்வம்**

## நெடுவினா

**1. 'வளரும் செல்வம்' உரையாடல் மூலம் நீ அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

தமிழ்மொழி பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்பதில்லை என்பது மரபு. அந்த வகையில் கலைச் சொல்லாக்கத்திற்கான பணிகள் இன்று முதன்மை பெற்றுள்ளன. இதுவே மொழி வளர்ச்சிக்கான வாயிலாகவும் உள்ளது. சொற்கள் புலப்படுத்தும் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை இத்துணைப் பாடத்தின் வழிக் காண்போம்.

**தமிழெண்கள்:**

கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கையிலான தமிழ்ச்சொற்கள் நமக்குத் தெரியும். ஆனால் 1/320, 1/160 ஆகிய எண்ணிக்கைகளுக்கான சொற்களான முந்திரி, அரைக்காணி என்பதைக் கால மாற்றத்தில் கைவிட்டு விட்டோம். நாம் நினைத்தால் அவற்றை மீட்டெடுக்கலாம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**கலைச்சொற்கள்:**

தாய் மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கையை விட வேற்று மொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும். எனவேதான் நம் வாழ்க்கையில் இடம் பெறும் அறிவியல் கருத்துகளுக்கான கலைச்சொற்களை எல்லாம் நம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அத்தகைய கலைச் சொற்களை ஒலி பெயர்ப்புச் செய்தோ மொழி பெயர்ப்புச் செய்தோ உருவாக்கலாம்.

**கடல்துறை:**

உலகில் தொன்மை மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம்மொழியில் கடல் சார்ந்த சொற்களில் எறிதிரை (எறுதிரான்) , கலன் (கலயுகோய்), நீர் (நீரியோஸ்), நாவாய் (நாயு), தோணி (தோணீஸ்) போன்ற தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இதுபோலப் பல்வேறு துறைசார்ந்த தமிழ்ச் சொற்களும் வேற்று மொழிகளுக்குச் சென்றுள்ளன.

**கவிதையியல்:**

கவிதை சார்ந்த சொற்களைத் தமிழிலும், கிரேக்க மொழியிலும் ஒப்பாகக் காண முடிகிறது. பா வகைகளுள் ஒன்று வெண்பா. அதன் ஓசை செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடல்கள் சாப்போ என அழைக்கப்படுகின்றன. பாவின் சுவைகளில் ஒன்று இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. கிரேக்கத்தில் துன்பச் சுவையுடைய பாடல்கள் இளிகியா என அழைக்கப்படுகின்றன.

**தமிழ்ச்சொற்கள் பிறமொழியில்:**

கிரேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கடல் வழியாக வருவதனைக் கிரேக்க நூலொன்று விளக்குகிறது. எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ் என்னும் நூலின் பெயரிலேயே தமிழ்ச்சொல் எறிதிரை இருப்பதைக் காணலாம். கடல் சார்ந்த பெரிய புலம் என்பதே எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ் என ஆகியுள்ளது. இதுபோலத் தொல்தமிழின் வளர்ச்சி தொடரவும் நிலைக்கவும் நாம் செயல்பட வேண்டும்.

**முடிவுரை:**

வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் துறை கலைச்சொற்கள் உடனுக்குடன் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து அத்துறைகளை மேலும் வளர்க்க வேண்டும். பிறமொழியிலுள்ள தத்துவம், அரசியல், மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிற துறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். நம் மொழியில் புதிய புதிய சொல்வளம் பெருக வேண்டும்.

---

## கற்கண்டு

## இயல் ஒன்று — தொடர் இலக்கணம்

### சரியான விடையைத் தேரர்க.

1. **செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை**

   அ) செய்வினை ஆ) செயப்பாட்டு வினை இ) தன்வினை **[ஆ) செயப்பாட்டு வினை]**

2. **அனிதா உரை படித்தாள் - இது எவ்வகைத் தொடர்?**

   அ) தன்வினைத்தொடர் ஆ) பிறவினைத் தொடர் இ) செய்வினைத் தொடர் **[இ) செய்வினைத் தொடர்]**

3. **பறிக்காதீர் - இதிலுள்ள எதிர்மறை இடைநிலை**

   அ) ஆ ஆ) க் இ) இல் **[அ) ஆ]**

4. **பதம் ------ வகைப்படும்.**

   அ) 6 ஆ) 4 இ) 2 [இ) 2]



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



5. **பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்**
   அ) சாரியை ஆ) விகாரம் இ) சந்தி **[ஆ) விகாரம்]**

6. **பகுபத உறுப்புகள் ---- வகைப்படும்.**
   அ) நான்கு ஆ) ஆறு இ) எட்டு [ஆ) ஆறு]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

6. சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லே ---- ஆகும். - **எழுவாய்**
7. ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தை ---- என்கிறோம். - **பயனிலை**
8. வினைப் பயனிலைக்கு அடையாக வருவது ----- ஆகும். - **வினையடை**
9. செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை -----. - **செய்வினை**
10. 'ஊரான்' - என்பதின் பகுதி ------. - **ஊர்**
11. 'படு' என்பதைப் போல -----, ----- முதலான துனை வினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன. - **உண், பெறு**

## குறுவினாக்கள்

1. **பெயரடை, வினையடை - சான்றுடன் விளக்குக.**
   - பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருவது பெயரடை.
     - எ.கா. அன்பரசன் நல்ல பையன்.
   - வினைப்பயனிலைக்கு அடையாக வருவது வினையடை.
     - எ.கா. மகிழன் மெல்ல வந்தான்.

2. **தன்வினை, பிறவினை - விளக்குக.**
   - எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை ஆகும்.
   - எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை ஆகும்.

3. **பகுபத உறுப்புகள் யாவை?**
   - பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகியன பகுபத உறுப்புகளாகும்.

4. **வந்தனன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
   - **வந்தனன் - வா (வ) + த் (ந்) + த் + அன் + அன்**
   - வா - பகுதி (வ - ஆனது விகாரம்)
   - த் (ந்) - சந்தி (ந் - ஆனது விகாரம்)
   - த் - இறந்தகால இடைநிலை
   - அன் - சாரியை
   - அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

6. **எழுவாய் என்றால் என்ன?**
   - சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம். **எ.கா. எட்வர்டு** வந்தான்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**7. பயனிலை என்றால் என்ன?**

- ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்.
  **எ.கா.**கனகாம்பரம் **பூத்தது.**

**8. செயப்படுபொருள் என்றால் என்ன?**

- எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே செயப்படுபொருள் ஆகும்.
- **எ.கா.** மீனா **கனகாம்பரத்தைச்** சூடினாள்.

**9. தோன்றா எழுவாய் என்றால் என்ன?**

- ஒரு தொடரில் பயனிலை மட்டும் வெளிப்படையாக வந்து எழுவாய் மறைந்து வருவது தோன்றா எழுவாய் என்கிறோம்.
  **எ.கா.** படித்தாய்
  - இதில் படித்தாய் என்பது பயனிலை. இதில் நீ என்ற எழுவாய் மறைந்து வந்துள்ளது.

**10. பெயர்ப் பயனிலையை விவரி?**

- ஒரு தொடரில் பெயர்ச்சொல் பயனிலையாக வந்தால் அது பெயர்ப் பயனிலை எனப்படும்.
  **எ.கா.** சொன்னவள் **கலா.**

**11. வினைப் பயனிலை என்றால் என்ன?**

- ஒரு தொடரில் வினைமுற்று பயனிலையாக வருவது வினைப் பயனிலை எனப்படும்.
- **எ.கா.**நான் **வந்தேன்.**

**12. வினாப் பயனிலை என்றால் என்ன?**

- ஒரு தொடரில் வினாச் சொல் பயனிலையாக வருவது வினாப் பயனிலை எனப்படும்.
  **எ.கா.** விளையாடுபவன் **யார்?**

**13. தமிழ் தொடர் அமைப்பின் சிறப்பை விவரி?**

- தமிழில் ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இந்த வரிசையில் தான் வரவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை.
- இதுவே தமிழ் தொடர் அமைப்பின் சிறப்பு ஆகும்.

**14. பெயரடை என்றால் என்ன?**

- எழுவாயாக வரும் பெயர்ச் சொல்லுக்கு அடையாக வருவது பெயரடை எனப்படும்.
  **எ.கா. நல்ல** நூல் ஒன்று படித்தேன்.

**15. வினையடை என்றால் என்ன?**

- வினைப் பயனிலைக்கு அடையாக வருவது வினையடையாகும்.
  **எ.கா.** எட்வர்டு **மெல்ல** வந்தான்.

**16. தன் வினை என்றால் என்ன?**

- எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.
  **எ.கா.** பந்து உருண்டது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**17. பிறவினை என்றால் என்ன?**

- எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.
- பிறவினைகள் **வி, பி** போன்ற விகுதிகளைக் கொண்டும் **செய், வை, பண்ணு** போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.
  **எ.கா.** படிக்க வைத்தார்.

**18. செய்வினைத் தொடர் என்றால் என்ன?**

- செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை செய்வினை எனப்படும்.
  **எ.கா.**பாட்டு பாடுகிறாள்.

**19. செயப்பாட்டு வினைத் தொடர் என்றால் என்ன?**

- செயப்படு பொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டு வினை எனப்படும்.
  **எ.கா.** பாட்டு கவிதாவால் படிக்கப்பட்டது.

**20. பதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- பதம் இருவகைப்படும்.
- அவை பகுபதம், பகாப்பதம் ஆகும்.

**21. பகுபதம் என்றால் என்ன?**

- பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.

**22. பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- பகுபதம் இரண்டு வகைப்படும்.
- அவை பெயர்ப் பகுபதம், வினைப்பகுபதம் ஆகும்.

**24. பகுதியைப் பற்றிக் கூறுக.**

- சொல்லின் முதலில் நிற்கும்.
- பகாப்பதமாக அமையும்.
- வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.

**25. விகுதி எவற்றை உணர்த்தி வரும்?**

- விகுதி சொல்லின் இறுதியில் நிற்கும்.
- திணை, பால், எண், இடங்களை உணர்த்தி வரும்.

**26. ஆண்பால், பெண்பால் விகுதிகள் யாவை?**

- ஆண்பால் விகுதிகள் - அன், ஆன்
- பெண்பால் விகதிகள் - அள், ஆள்

**27. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?**

- க, இய, இயர் ஆகியவை வியங்கோள் வினைமுற்று விகுதிகளாகும்.

**28. தொழிற்பெயர் விகுதிகள் யாவை?**

- தல், அல், ஐ, கை, சி , பு, அம், வை, கு, வு, தி, காடு, பாடு, மை, து என்பன தொழிற்பெயர் விகுதிகளாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**29. இடைநிலைகளைப் பற்றி விவரி.**

- இறந்தகால இடை நிலைகள் - த், ட், ற், இன்
- நிகழ்கால இடை நிலைகள் - கிறு, கின்று, ஆநின்று
- எதிர்கால இடை நிலைகள் - ப், வ், க்
- எதிர்மறை இடை நிலைகள் - ஆ, அல், இல்
- பெயர் இடை நிலைகள் - ஞ், ந், வ், ச், த்

**30. எவை எவை சாரியையாக வரும்?**

- அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் ஆகியவை சாரியையாக வரும்.

**31. எழுத்துப்பேறு என்றால் என்ன?**

- பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப் பேறு ஆகும்.
- சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு ஆகும்.

## கற்பவை கற்றபின் (பக்கம்.23)

### 1. தொடர்களை மாற்றி உருவாக்குக.

**அ) பதவியை விட்டு நீக்கினான் - இத்தொடரை பிறவினைத் தொடராக மாற்றுக.**
பதவியை விட்டு நீக்குவித்தான்

**ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர் - இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.**
மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

**இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.**
உண்ணும் தமிழ்த்தேனே.

**ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் - இத்தொடரைச் செயப்பாட்டுவினைத் தொடராக மாற்றுக.**
மூன்று மொழிக் குடும்பங்களாகத் திராவிட மொழிகள் பகுக்கப்பட்டுள்ளன.

**உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் - இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.**
நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தார்.

### 2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக.

**அ) மொழிபெயர் - தன்வினை, பிறவினைத் தொடர்களாக.**
மொழி பெயர்த்தான் - தன்வினை
மொழி பெயர்ப்பித்தான் - பிறவினை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**ஆ) பதிவுசெய் - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.**

ஆவணம் பதிவு செய்தார் - செய்வினை
ஆவணம் பதிவு செய்யப்பட்டது - செயப்பாட்டு வினை

**இ) பயன்படுத்து - தன்வினை, பிறவினைத் தொடர்களாக.**

பயன்படுத்தினான் - தன்வினை
பயன்படுத்தச்செய்தான் - பிறவினை

**ஈ) இயங்கு - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.**

இயங்கினான் - செய்வினை
இயக்கப்பட்டான் - செயப்பாட்டுவினை

## 3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவைக்)

அ) தமிழ் **செவ்விலக்கியங்களைக்** கொண்டுள்ளது.

ஆ) நாம் **தமிழிலக்கிய நூல்களை** வாங்க வேண்டும்.

இ) புத்தகங்கள் **வாழ்வியல் அறிவைக்** கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் **நம்மை** நல்வழிப்படுத்துகின்றன.

## 4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் **இனிய** வணக்கம்.

ஆ) அவன் **நல்ல** நண்பனாக இருக்கிறான்.

இ) **பெரிய** ஓவியமாக வரைந்து வா.

ஈ) **கொடிய** விலங்கிடம் பழகாதே.

## 5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

அ) ஊர்தி **மெதுவாகச்** சென்றது.

ஆ) காலம் **வேகமாக** ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை **அழகாகக்** காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் **பொதுவாகக்** காட்டு.

## 6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.

**அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக)**

நம் முன்னோர் எத்தகைய வாழ்வு நடத்தினர்? (அ) இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர்கள் யாவர்?

**ஆ) இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக)**

இசையுடன் அமைவது பாடல்.

**இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக)**

நீ இதைச் செய்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## 7. வேர்ச்சொற்களை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.

**அ) தா (உடன்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)**

முருகன் பொருளைத் தந்தான்.

முருகன் பொருளைத் தருவித்தான்.

**ஆ) கேள் (வினாத் தொடர்)**

கேட்பவர் யார்? (அ) கேட்டாயா?

**இ) கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர்)**

கவின் கொடுத்தான்

கவின் கொடு

**ஈ) பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)**

படம் பார்த்தான்

படம் பார்க்கப்பட்டது

படம் பார்க்கச் செய்தார்

## 8. சிந்தனை வினா

**அ) அவை யாவும் இருக்கின்றன.**

**அவை யாவையும் இருக்கின்றன.**

**அவை யாவும் எடுங்கள்.**

**அவை யாவையும் எடுங்கள்.**

**அவை யாவற்றையும் எடுங்கள்.**

**மேற்கண்ட சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.**

சொற்றொடர்கள் சரியானவை.

யாவும் - யாவையும் என்ற சொற்களில் ஏதோ வேறுபாடு உள்ளது போலத் தோன்றுகிறது.

யாவும் என்ற சொல் தருகிற எல்லாம் என்ற பொருளையே யாவையும், யாவற்றையும் என்ற சொற்கள் தருகின்றன. வேறு எதுவும் விடுபடவில்லை. ஐ என்ற வேற்றுமை உருபும் அற்று என்ற சாரியையும் சேர்வதால் எல்லாம் என்ற பொருள் தருவதை முழுமைப்படுத்தியதைப் போல் தோன்றுகிறது, அதனைத் தவிர வேறொன்றும் இல்லை.

**ஆ) நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள். அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்கவிருக்கிறார்கள். அதற்காக அந்நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.**

**'தமிழ் மாருதம்' வார இதழ் வெளியீட்டு விழா**

அன்புடையீர்,

வணக்கம், வருகிற தைத்திங்கள் முதல்நாள் முதல் 'தமிழ் மாருதம்' எனும் வார இதழ் வெளிவர இருக்கிறது. செந்தமிழ்க் கட்டுரைகள், புதுக்கவிதைகள், மரபுக்கவிதைகள் எனப் பலதுறை சார்ந்த பகுதிகளுடன் மிளிரவிருக்கின்றது. மேலும் பல துறைகளைச் சார்ந்த செய்திகளைக் கொண்டு பன்முகப் பொலிவுடன் வெளிவர இருக்கிறது. அதில் நீங்கள் விளம்பரம் செய்தால் மிகுந்த பயனைத் தருவதாக இருக்கும். எனவே தமிழ் மாருதத்தில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

சொற்களின் பெயர், வினை வேறுபாட்டை அறிவதால் எந்தச் செய்தியைச் சொல்லப் போகிறோமோ, அதற்கு ஏற்ற சொற்களைத் தேர்வு செய்ய முடிகிறது. கருத்துக்கு ஏற்ப தெளிவான பொருள் மயக்கமில்லாத சொற்களைத் தேர்வு செய்வதால். வாக்கியங்களை வகைப்படுத்தி எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமைய உரைக்க முடிகிறது.

சொற்றொடர் எழுதும்போது தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றையும் அறிந்து எழுதுவதால் பொருள் பொருத்தமுடன் எழுத முடிகிறது.

---

**ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா?**

வந்திருப்பவர் அனைவரும் - எழுவாய்
இருக்கையில் அமருமாறு - செயப்படுபொருள்
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் - பயனிலை

எழுவாய்க்கு ஏற்ற பயனிலை இங்கு இல்லை. பொருள் வேறுபாடின்றித் தொடர் அமைந்திருக்கிறது. ஆனால் மொழி மரபு பேணப்படவில்லை.

---






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# இயல் மூன்று

# உள்ளத்தின் சீர்

## மதிப்பீடு (பக்கம்.81)

### பலவுள் தெரிக.

1. **பொருந்தாத இணை எது?**

அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

**[ஆ) திருவாரூர் - கரிக்கையூர்]**

2. **முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.**

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

**[ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்]**

3. **பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் தொடர்-**

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

**[இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.]**

4. **ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்**

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள் **[ஈ) தொகைச்சொற்கள்]**

5. **சொற்றொடர்களை முறைப்படுத்துக.**

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

1) ஆ - அ - இ 2) ஆ - இ - அ 3) இ - ஆ - அ 4) இ - அ - ஆ **[1) ஆ - அ - இ]**

### குறுவினா

1. **நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**

➢ நாங்கள் வாழும் பகுதியில் ஏறு தழுவுதல் மாடு பிடித்தல், மஞ்சு விரட்டு, காளை விரட்டு, காளை விடுதல், மாடு விடுதல், ஏறு விடுதல், சல்லிக்கட்டு என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**2. தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?**

- தமிழர்களின் மேன்மையான பண்பாட்டு வாழ்க்கையை அறிய அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.
- அகழாய்வுகளின் மூலம் கடந்த காலத்தைத் தெரிந்து கொள்ளலாம். அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறை சாற்றும். ஆதலால் அகழாய்வு தேவை.

**3. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.**

**ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்கள்:**

- ஏறுதழுவுதலைக் கலித்தொகை - 'காளைகளின் பாய்ச்சல்' எனவும்,
- சிலப்பதிகாரமும், புறப்பொருள் வெண்பாமாலையும் - ஏறுகோள் எனவும்
- கண்ணுடையம்மன் பள்ளு - எருதுகட்டி எனவும் குறிப்பிடுகின்றன.

**4. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

- **இடம்** : மணிமேகலை, விழாவறை காதையில் இடம் பெற்றுள்ளது.
- **விளக்கம்** : இந்திர விழாவைக் கொண்டாடுவதற்காகப் புகார் நகரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை எடுத்துவிட்டுப் புதிய மணலைப் பரப்புங்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

**5. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.**

- பட்டிமண்டபம் என்பது தான் இலக்கிய வழக்கு. ஆனால், இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள்.
- பேச்சுவழக்கையும் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே இரண்டும் ஒன்றுதான்.

**6. ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.**

- சேலம் மாவட்டம் கருவந்துறை, நீலகிரி மாவட்டம் கரிக்கையூர், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டி, தேனி மாவட்டம் மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவு - முதலிய இடங்கள் ஏறுதழுவுதல் குறித்த தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களாகும்.

## சிறுவினா

**1. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.**

- ஏறுதழுவுதல் முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடு இணைந்தது; மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடு தொடர்புடையது;
- பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடு பிணைந்தது;
- இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

**2. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?**

- முல்லைநில மக்கள் பங்கேற்கும் ஏறுதழுவுதல் அவர்களின் வீரத்தினை மெய்ப்பிக்கக் கூடிய அடையாளமாகத் திகழ்கிறது.
- மருத நிலத்து வேளாண் மக்கள் உழவுத் தொழில் செய்ய உதவிய மாடுகளைத் தம்மோடு இணைத்துக் கொண்டு, அதனைப் போற்றி வணங்கினர்.
- பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்திருந்தது.
- மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் மக்கள் அனைவரும் மாட்டுப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடினர்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**3. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.**

- மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக் கொண்டு சிறப்பாய் வாழ்வதற்கும் அகழாய்வு துணை நிற்கின்றது.
- நம் முன்னோர்கள் அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள்.
- தமிழர்களின் உணவு, உடை, உறைவிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.
- அகழாய்வு அறிவியலை ஆதாரமாகக் கொண்டது.
- கடந்தகாலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால்தான், நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்தி வாழ்வில் வெற்றிபெற முடியும்.
- இதற்கு அகழாய்வு அவசியமாகிறது.

---

**4. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

**எங்கள் ஊர் விழா முன்னேற்பாடுகள்**

- எங்கள் ஊர் மாரியம்மன் கோயில் திருவிழா சிறப்பாக நடைபெறும். விழா முன்னேற்பாடுகளுக்காக ஊர்ச்சபையின் கூட்டம் நடைபெறும்.
- ஊர்த்தலையாரி பறையறைந்து தெருக்கள்தோறும் சென்று செய்தியைக் கூறுவார். அழைப்பிதழ் அச்சடித்து அனைவருக்கும் கொடுப்பர்.
- விழாநாள் அன்று காப்புக் கட்டுதல், கொடியேற்றம் நிகழும்.
- ஊர் முழுவதும் வேப்பிலை, மாவிலைத் தோரணங்கள், வண்ணக் கொடிகள் கட்டப்படும்.
- கலை நிகழ்ச்சிகள் பலவும் நடத்தப்படும். வாணவேடிக்கையும் அம்மன் வீதியுலாவும் நிகழும்.
- விழா நாட்களில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.
- மக்கள் ஒற்றுமையுடன் அம்மனை வழிபட்டு மகிழ்வர்.

**இந்திரவிழா முன்னேற்பாடுகள்**

- தோரணம் கட்டிய தெருக்களில் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் பலவகை மங்கலப் பொருட்களால் முறையாக அழகுபடுத்துவர்.
- குலை முற்றிய பாக்குமரத்தையும், வாழை மரத்தையும், வஞ்சிக் கொடியையும், பூங்கொடிகளையும், கரும்பையும் நட்டு வைத்தார்கள்.
- திண்ணையில் வரிசையாக இருக்கும் தங்கத் தூண்களில் முத்துமாலைகளைத் தொங்கவிடுவார்கள்.
- தெருக்களிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புவார்கள்.
- பெரிய மாடங்களின் வாயில்களில் துகில் கொடிகளையும், கம்புகளில் கட்டிய கொடிகளையும் கட்டி வைப்பார்கள்.
- அவரவர் சமயத்திற்கு உரிய உட்பொருளறிந்து வாதிடுவோர் பட்டிமண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுவார்கள்.
- குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் மரங்கள் தாழ்ந்து நிழல்தரும் ஊர் மன்றங்களிலும் நல்லன பற்றியச் சொற்பொழிவுகள் நடைபெறும்.
- பகைவர்களிடம் கோபமும் பூசலும் கொள்ளாது விலகி நிப்பார்கள்.

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## நெடுவினா

1. **ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.**

**முன்னுரை:**

வீரத்திற்கும், விளைச்சலுக்கும், செழிப்பிற்கும், செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப்படுத்தப்பட்டவை மாடுகள். முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர்தம் வாழ்வோடு பின்னிப்பிணைந்து பண்பாடாகியுள்ளது ஏறுதழுவுதல். இதைத் தமிழர் அறத்தோடு நடத்திய பாங்கைக் காண்போம்.

**இலக்கியங்களில் ஏறுதழுவுதல்:**

சங்க இலக்கியமாகிய கலித்தொகையிலும், காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரத்திலும், சிற்றிலக்கியமாகிய பள்ளுவிலும், இலக்கண நூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையிலும், தொன்மை சார்ந்த நடுகற்களிலும், ஓவியங்களிலும், ஏறுதழுவுதல் பற்றிய சான்றுகள் காணக் கிடைக்கின்றன.

**சிந்துவெளியில் ஏறுதழுவுதல்:**

சிந்துவெளி நாகரிக வரலாற்றில் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. சிந்துவெளி அகழாய்வில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல்முத்திரை தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறுதழுவுதலைக் குறிப்பதாக மகாதேவன் குறிப்பிடுகிறார்.

**வேறு பெயர்கள்:**

ஏறுதழுவுதல் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில், வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அது மாடு பிடித்தல், மாடு அணைத்தல், மாடு விடுதல், மஞ்சு விரட்டு, வேலி மஞ்சு விரட்டு, எருது கட்டி, காளை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு என்பனவாகும்.

**வேளாண்குடிகளின் விளையாட்டு:**

வேளாண் குடிகளின் வாழ்வோடும், உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறு தழுவுதலாகும்.

**மேலைநாடுகளில் காளைச் சண்டை:**

மேலை நாடுகளில் குறிப்பாக, தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில் காளைகளைக் கொன்று, அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.

காளையை அடக்கும் வீரன் வென்றாலும், தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை கொல்லப்படுதலும் உண்டு.

**வன்மமும் போர் வெறியும்:**

மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும், போர் வெறியையும் வெளிப்படுத்துவதுபோல் இருக்கிறது.

**தமிழ்நாட்டில் ஏறுதழுவுதல்:**

தமிழகத்தில் நடைபெறும் ஏறுதழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும், முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும், வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

**முடிவுரை:**

தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறுதழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையுடையது. பண்டைய வீரவுணர்வை நினைவூட்டும் ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டையும், இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டுக் குறியீடு ஆகும். நம் முன்னோரின் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. அதற்கு ஓய்வு என்பதே கிடையாது. உள்ளங்கையில் உலகத்தை அளந்து பார்க்கும் காலகட்டத்தில் மண்ணைத் தோண்டி ஆய்வு செய்வதால் என்ன பயன் என்று எண்ணுகின்றனர் பலர். ஆனால் கடந்த காலத்தை ஆராய்ந்து அறிந்துகொண்டால்தான் நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம். வருங்காலம் வளமாக அமைவதற்கும் வலிமையான கட்டமைப்பை உருவாக்கவும் நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவைக் கையகப்படுத்தித் தொகுத்துப் பார்க்க வேண்டும்.

**மண்ணை ஆய்வதா? விண்ணை ஆய்வதா?**

செயற்கைக் கோளில் பறந்து செவ்வாயில் குடியேற வேண்டிய நேரத்தில் மண்ணைத் தோண்டி எலும்புகளையும் முதுமக்கள் தாழிகளையும் செல்லாத காசுகளையும் ஆய்வு செய்வதால் நம் அறிவையும் ஆற்றலையும் நேரத்தையும் வீணாக்குகிறோம் என்று எண்ணுபவர்களே கேளுங்கள்.

மண்ணைத் தோண்டிப் பார்ப்பது எலும்புகளைச் சேகரித்து எண்ணிப் பார்ப்பதற்கன்று, நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கு. அரிக்கமேடு அகழாய்வு ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பை உறுதிபடுத்துகிறது. ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்த முதுமக்கள் தாழிகள் மூலம் நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தார்கள். தமிழரின் உணவு, உடை, உறைவிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என நமக்கு உணர்த்துகிறது.

**பயன்படுத்து; தூக்கி எறி!**

இன்றைக்கு நாம் ஒரு புதிய நாகரிகச் சூழலைப் பழகிக் கொண்டிருக்கிறோம். ஒரு பொருளை ஒருமுறை பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிவது. எழுதுகிற பேனா, தண்ணீர்ப் புட்டி, கணினி, செல்லிடபேசி போன்றவற்றை ஒருமுறை பயன்படுத்திவிட்டு தூக்கி எறிவதால் மின்சாதனக் குப்பைகள் மலையெனக் குவிந்து சுற்றுச் சூழலைச் சிதைத்து, புற்றுநோயை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

பயன்படுத்து; தூக்கி எறி என்ற பழக்கம் அடி மனதில் ஊறி, இன்று வளர்த்த தாய் தந்தையரையும் கூட பயன்படுத்திவிட்டு, முதியோர் இல்லத்தில் தூக்கி எறிகிற மூடத்தனம் உருவாகியிருக்கிறது.

**மீண்டும் பயன்படுத்துவோம்:**

நமது முன்னோர்கள் கண்டுபிடித்துப் பயன்படுத்திய சுடுமண்ணாலும், உலோகத்தாலும் செய்யப்பட்ட பொருள்கள் பல தலைமுறைகளைக் கடந்தும் பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. பழுதுபட்டால் சரிசெய்து மீண்டும் பயன்படுத்துவோம்.

**மக்கள் அறிவியல்:**

அறிவியலில் இரண்டு வகையுண்டு. ஒன்று வணிக அறிவியல், மற்றொன்று மக்கள் அறிவியல். வணிக அறிவியல் முதலீட்டைப் பெருக்குவதற்காகப் பொருட்களைக் கண்டுபிடிக்கிறது. அதனை விற்பனை செய்கிறது. அதன் விளைவுதான் நெகிழிக் குப்பைகள்.

ஆனால், அகழாய்வில் கிடைத்த சுடுமண், கல், இரும்பு, செம்பு ஆகியவற்றாலான புழங்குப் பொருள்கள், கருவிகள் பல நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் இருந்தன.

இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது. இதனை அறிந்து கொண்டோம். இதுவே மக்கள் அறிவியல்.

**முடிவுரை:**

மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக்கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணை நிற்கின்றது. எனவே, அகழாய்வைத் தொடர்வோம்; தொன்மை வரலாற்றை மீட்போம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## மொழியை ஆள்வோம் (பக்கம்.82)

### பொன்மொழிகளை மொழிபெயர்க்க.

1. **A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi**
   ஒரு நாட்டின் பண்பாடானது மக்களின் இதயங்களிலும் ஆன்மாவிலும் தங்கியுள்ளது - மகாத்மா காந்தி

2. **The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru**
   மக்களின் கலையானது அவர்களின் உண்மையான மனதின் கண்ணாடியாகும். - ஜவஹர்லால் நேரு

3. **The biggest problem is the lack of love and charity - Mother Teresa**
   அன்புக்குறைவும் இரக்கமின்மையும் தான் இன்றைய மிகப் பெரிய பிரச்சினையாகும். - அன்னை தெரசா

4. **You have to dream before your dreams can come true - A.P.J.Abdul Kalam**
   உங்கள் கனவு நனவாகும் வரை கனவு கண்டு கொண்டே இருங்கள் - ஏ.பி.ஜே.அப்துல் கலாம்.

5. **Winners don't do different things; they do things differently - Shiv Khera**
   வெற்றியாளர்கள் வேறுபட்ட செயல்களைச் செய்வதில்லை. அவர்கள் செயல்களை வித்தியாசமாகச் செய்கிறார்கள் - சிவ்கேரா.

### வடிவம் மாற்றுக.

**பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.**

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது. - 4
2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. - 2
3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன. - 3
4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்து கொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன. - 1

**விடை:**

**தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்து கொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கே தான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.**

### மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. மேடும் பள்ளமும்
   புறவழிச் சாலைகள் மேடும் பள்ளமுமாக இருக்கின்றன.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **நகமும் சதையும்**
நல்ல நண்பர்கள் **நகமும் சதையும்** போல இணை பிரியாது இருப்பார்கள்.

3. **முதலும் முடிவும்**
கந்தன் செய்த தவறுக்கு வருந்தி, **முதலும் முடிவுமாக** மன்னிப்பு கோரினார்.

4. **கேளிக்கையும் வேடிக்கையும்**
திருவிழாவில் **கேளிக்கையும் வேடிக்கையும்** நிறைந்து காணப்படும்.

5. **கண்ணும் கருத்தும்**
எதைச் செய்தாலும் **கண்ணும் கருத்துமாகச்** செய்தல் நல்லது.

## தொகுப்புரை எழுதுக.

**பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.**

**தொகுப்புரை**

**எங்கள் பள்ளியில் ஜூன் மாதம் இலக்கிய மன்ற விழா நடைபெற்றது.**

பள்ளி மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் இலக்கிய மன்ற விழா இனிதே தொடங்கியது. தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவர் மாணவர் குமார் வந்தோரை வரவேற்றார். தமிழாசிரியர் இலக்கியமன்ற நிகழ்வுகளையும் சிறப்பையும் எடுத்துரைத்தார். மாணவர்கள் கலை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புற நடனம் போன்றவற்றை அரங்கேற்றினர். சிறப்பு விருந்தினர் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து பள்ளித் தலைமையாசிரியர் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார். இலக்கியமன்றத் துணைத் தலைவர் நன்றியுரை வழங்க நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

1. **பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.**
அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?
ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?
இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?
ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது? **[காங்கேயம் மாடுகள்]**

2. **பொருந்தாத சொல்லைக் கண்டறிக.**
அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா **[இ) இலங்கை]**

3. **பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன.**
அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன
இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன
**[அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. **தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன - இது எவ்வகைத் தொடர்?**
அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத் தொடர் இ) செய்தித் தொடர் ஈ) உணர்ச்சித்தொடர்
**[இ) செய்தித் தொடர்]**

## மொழியோடு விளையாடு (பக்கம்.84)

### பொருள் எழுதித் தொடரமைக்க.

**எ.கா.**

| | | | |
|---|---|---|---|
| | **அலை** - | கடலலை - | இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாகவுள்ளது. |
| | **அழை** - | வரவழைத்தல் - | என் நண்பர்களை வரவழைத்துள்ளேன். |
| 1. | **கரை** - | ஆற்றின் ஓரம் - | ஆற்றின் கரையோரம் முதலை ஒதுங்கியது. |
| | **கறை** - | மாசு - | துணிகள் கறையாக உள்ளன. |
| 2. | **குளவி** - | பூச்சி - | குளவி கொட்டியதால் குழந்தை அழுதது. |
| | **குழவி** - | குழந்தை - | குழந்தைப் பருவம் மிகவும் இனிமையானது. |
| 3. | **வாளை** - | மீன் - | வாளை மீன் சாப்பிடுவதற்குச் சுவையாக இருக்கும். |
| | **வாழை** - | மரம் - | வாழை மரத்தின் அனைத்துப் பகுதிகளும் பயன்தரக்கூடியன. |
| 4. | **பரவை** - | கடல் - | கடலுக்குப் பரவை என்ற பெயர் உண்டு. |
| | **பறவை** - | பறப்பன - | பறக்கின்ற காரணத்தால் பறவை என்ற பெயர் வந்தது. |
| 5. | **மரை** - | மான் - | மரை எனப்படும் மான் துள்ளி ஓடும். |
| | **மறை** - | வேதம் - | தமிழின் மறை நூல் திருக்குறள். |

### அகராதியில் காண்க.

**இயவை** - வழி
**சந்தப்பேழை** - அழகிய பெட்டி
**சிட்டம்** - அறிவு
**தகழ்வு** - வீண் ஆடம்பரம்
**பௌளி** - பண் வகை

### பொருள்தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக.

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதியபுதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதியாக அத் தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமைய வேண்டும்.

**காலங்களில்** தெருவில் **வைக்காதீர்கள் காப்புக்** கம்பிகள் **கவனக்** குறைவுடன் **ஆகியவற்றின்** மீது **காலை** அறுந்த **மழை** மின் கம்பிகள்.

1. வைக்காதீர்கள்
2. **காலை** வைக்காதீர்கள்
3. **கவனக்குறைவுடன் காலை** வைக்காதீர்கள்
4. **அறுந்த மின் கம்பிகள் மீது கவனக்குறைவுடன் காலை** வைக்காதீர்கள்.
5. **மழைக்காலங்களில் காப்புக் கம்பிகள், அறுந்த மின் கம்பிகள் ஆகியவற்றின் மீது கவனக்குறைவுடன் கால்களை** வைக்காதீர்கள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 . ஏ | | 2. இ | ந் | 3. தி | ர | 4. வி | ழா | |
| று | 5. த | வ | | ர | | தை | | 6. சா |
| 7. த | வ | ளை | 8. ஓ | ட் | ட | ம் | | ல |
| ழு | | | ரை | 9. சி | | 10. வி | தி | |
| வு | ய் | 11. ஆ | | ர் | னா | த | த் | 12. சா |
| த | | | | கா | | 13 மா | 14. வ | டி |
| ல் | | ர் | 15. க | க் | ளை | 16 கா | | க |
| | ள் | 17. யா | னி | 18. த | | | 19. கோ | ள் |

**இடமிருந்து வலம்**

2. விழாவறை காதை குறிப்பிடும் விழா (6)
5. சரி என்பதற்கான எதிர்ச்சொல் தரும் எழுத்துகள் இடம் மாறியுள்ளன. (3)
7. பொங்கல் விழாவையொட்டி நடத்தப்படும் சிறுவர்களுக்கான போட்டிகளில் ஒன்று (7)
10. ஊழ் என்பதற்குத் தற்காலப் பயன்பாட்டில் உள்ள சொல் (2)
13. மா + அடி -இதன் புணர்ந்த வடிவம் (3)
19. கொள்ளுதல் என்பதன் முதல்நிலை திரிந்த சொல் (2)

**வலமிருந்து இடம்**

9. தூய்மையற்ற குருதியை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய் (2)
11. ஆராய்ச்சி என்பதன் சொற்சுருக்கம் (3)
12. மணிமேகலைக் காப்பியத்தின் ஆசிரியர் (5)
16. சல்லிக்கட்டு விளையாட்டுக்கு உரிய விலங்கு (2)
18. தனி + ஆள் - சேர்த்து எழுதுக. (4)

**மேலிருந்து கீழ்**

1. தமிழர்களின் வீர விளையாட்டு (7)
2. இவள் + ஐ - சேர்ந்தால் கிடைப்பது (3)
3. மரத்தில் காய்கள் ......... ஆகக் காய்த்திருந்தன. (4)
4. ஆடிப்பட்டம் தேடி (2)
5. உரிச்சொற்களுள் ஒன்று (2)
6. ........ சிறந்தது (2)
8. நேரத்தைக் குறிப்பிடும் வானியல் சொல் (2)
12. அகழாய்வில் கிடைத்த கொள்கலன்களுள் ஒருவகை (4)
15. காய் பழுத்தால் ....... (2)

**கீழிருந்து மேல்**

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக் கூடாது. (3)
17. யா முதல் வரும் வினாப்பெயர் (2)
18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4)

**விடைகள்**

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் | மேலிருந்து கீழ் | கீழிருந்து மேல் |
|---|---|---|---|
| 2. இந்திர விழா<br>5. தவறு<br>7. தவளை ஓட்டம்<br>10. விதி<br>13. மாவடி<br>19. கோள் | 9. சிரை<br>11. ஆய்வு<br>12. சாத்தனார்<br>16. காளை<br>18. தனியாள் | 1. ஏறு தழுவுதல்<br>2. இவளை<br>3. திரட்சி<br>4. விதை<br>5. தவ<br>6. சால<br>8. ஓரை<br>12. சாடிகள்<br>15. கனி | 14. வத்தி<br>17. யார்<br>18. தக்கார் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

காலை எழுந்து கோலமிடும் பாரம்பரிய வழக்கத்தையும்,

காவல் தெய்வத்தை வணங்கிடும் கலாச்சாரத்தையும்,

காளைகளைப் பேணிப் பாதுகாக்கும் மனித நேயத்தையும்,

நாதஸ்வரக் கலையையும், நாட்டியக் கலையையும்,

அழியாமல் பாதுகாக்கும் பண்பும்,

பாரம்பரிய விழாக்களைக் கலைகளுடன் கொண்டாடும் பண்பும்,

தமிழரின் சொத்துக்களாகும்.



---

## நிற்க அதற்குத் தக.

**நான் பாராட்டுப் பெற்ற சூழல்கள்**

அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்த போது.

ஆ) கட்டுரை ஏடுகளைக் கீழே தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்தபோது.

**இ) மாநில அளவில் பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெற்ற போது.**

**ஈ) சாலை ஓரத்தில் அடிபட்டு உயிருக்குப் போராடிய குருவியைக் காப்பாற்றியபோது.**

---

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| அகழாய்வு | Excavation | கல்வெட்டியல் | Epigraphy |
| நடுகல் | Hero Stone | பண்பாட்டுக் குறியீடு | Cultural Symbol |
| புடைப்புச் சிற்பம் | Embossed sculpture | பொறிப்பு | Inscription |



www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**உரைநடை உலகம்**

# இயல் மூன்று

# ஏறு தழுவுதல்

## சரியான விடையைத் தேர்க.

1. ஏறுதழுவுதல் பற்றி குறிப்பிடும் சங்க நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை **[இ) கலித்தொகை]**

2. காளைச் சண்டையைத் தேசிய விளையாட்டாகக் கொண்ட நாடு
அ) இலங்கை ஆ) ஸ்பெயின் இ) ஆஸ்திரேலியா **[ஆ) ஸ்பெயின்]**

3. 'கருவந்துறை' எனும் ஊரில் எருதோடு போராடி இறந்தவர்.
அ) பெரியபயல் ஆ) சங்கன் இ) கோவுர **[ஆ) சங்கன்]**

4. காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட மாவட்டம்.
அ) நீலகிரி ஆ) சேலம் இ) கரூர் **[இ) கரூர்]**

5. ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடும் இலக்கண நூல்
அ) புறப்பொருள் வெண்பாமாலை ஆ) தொல்காப்பியம் இ) நன்னூல்
**[அ) புறப்பொருள் வெண்பாமாலை]**

6. எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட எருது பொருதார் கல் உள்ள மாவட்டம்.
அ) மதுரை ஆ) சேலம் இ) தேனி **[ஆ) சேலம்]**

7. தமிழர்களின் வீர விளையாட்டுகளுள் ஒன்று ______.
அ) கிட்டிப்புள் ஆ) மட்டைப்பந்து இ) ஏறுதழுவுதல் ஈ) காளைச்சண்டை
**[இ) ஏறுதழுவுதல்]**

8. ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடும் சிற்றிலக்கியம்
அ) பிள்ளைத்தமிழ் ஆ) பள்ளு இ) குறவஞ்சி ஈ) தூது **[ஆ) பள்ளு]**

9. சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற ______ குறிக்கும்.
அ) வளையத்தினை ஆ) மூக்கணாங்கயிற்றை இ) பரிசுப் பொருளை ஈ) கழுத்து வடத்தை
**[அ) வளையத்தினை]**

## பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **விடைகள்:** |
| 10. மூன்று எருதுகளைப் பலர் விரட்டுவது | - | சேலம் | - | 10. நீலகிரி |
| 11. திமிலுடன் கூடிய காளையை அடக்குவது | - | தேனி | - | 11. மதுரை |
| 12. திமிலுடன் கூடிய காளை | - | மதுரை | - | 12. தேனி |
| 13. எருது பொருதார் கல் | - | நீலகிரி | - | 13. சேலம் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

14. எருதுகட்டி எனும் மாடு தழுவுதல் நிகழ்வை ------ பதிவு செய்துள்ளது. - **கண்ணுடையம்மன் பள்ளு.**

15. தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் ---- தொன்மையுடையது. - **இரண்டாயிரம் ஆண்டுகாலத்**

16. சிந்துவெளி கல் முத்திரை ஏறுதழுவுதலைக் குறிப்பதாகத் தெரிவித்தவர் ----. - **ஐராவதம் மகாதேவன்**

17. சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று ---- என அழைக்கப்படுகிறது. - **ஜல்லிக்கட்டு**

18. சிந்துவெளி நாகரிக வரலாற்றில் ----- முக்கியப் பங்கு வகிக்கின்றது. - **காளை**

19. காளையைத் தெய்வமாக வழிபட்டதை ---- கிடைக்கப்பெற்ற சான்றுகள் மூலம் அறிகிறோம். - **அகழாய்வில்**

20. தமிழக ஏறுதழுவுதலில் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு ---- செய்வர். - **வழிபாடு**

21. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று ----- கருதப்படுகிறது. - **காங்கேயம்**

## குறுவினா

1. **ஏறுதழுவுதல் எந்தெந்த பெயர்களில் அழைக்கப்படுகிறது?**
   - ➢ மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சு விரட்டு, எருது கட்டி, காளை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு ஆகிய பெயர்களால் ஏறுதழுவுதல் அழைக்கப்படுகிறது.

2. **மேலை நாடுகளில் நடத்தப்பெறும் காளை விளையாட்டு குறித்து எழுதுக.**

   **<u>மேலை நாடுகளில் நடத்தப்பெறும் காளை விளையாட்டு:</u>**
   - ➢ மேலை நாடுகளில் குறிப்பாக, தேசிய விளையாட்டாகக் காளை சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில் காளையைக் கொன்று அடக்குபவன் வீரனாகக் கருதப்படுவான்.
   - ➢ அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.
   - ➢ சில நாட்டு விளையாட்டுகளில் காளைகள் கொல்லப்படுதலும் உண்டு.

3. **மாட்டுப் பொங்கல் குறித்து எழுதுக.**
   - ➢ தமிழக உழவர்கள் தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு, அறுவடைக்குப் பெரிதும் துணை நின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே 'மாட்டுப் பொங்கல்' ஆகும்.

4. **ஏரில் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டன?**
   - ➢ ஏரில் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள் ஏர் மாடுகள், எருதுகள், ஏறுகள் என்றெல்லாம் அழைக்கப்பட்டன.

5. **எங்கெங்கு உள்ள அரண்மனைச் சித்திரங்களில் காளைப்போர் குறித்த செய்திகள் உள்ளன?**
   - ➢ எகிப்தில் உள்ள பெனி-ஹாசன் சித்திரங்களிலும் கிரீட் தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களிலும் காளைப் போர் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.

6. **தமிழர் வரலாறு எத்தகையது?**
   - ➢ தமிழர் வரலாறு பண்பாட்டுத் தொன்மையும், இலக்கிய வளமையும் வாய்ந்தது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**7. காளைகளின் பாய்ச்சல் குறித்துக் கலித்தொகை கூறுவது யாது?**

- திமில் பெருத்த காளைகள் பல காலாலே தரையைக் கிளறிப் புழுதியை எழுப்பின.
- சில நிலத்தை நொறுக்கின.
- சில தம்முள் முரண்பட்டு ஒன்றோடொன்று எதிர்த்துக் கொண்டன.
- சில மண்டியிட்டுப் பாய்ந்தன.
  - எனக் காளைகளின் பாய்ச்சல் குறித்துக் கலித்தொகை குறிப்பிடுகிறது.

**8. ஏறு தழுவுதல் களம் குறித்துக் கலித்தொகை குறிப்பிடுவது யாது?**

- எழுந்தது துகள்
- ஏற்றனர் மார்பு
- கவிழ்ந்தன மருப்பு
- கலங்கினர் பலர்
  - என்று முல்லைக்கலி ஏறுதழுவுதல் களம் குறித்துக் கூறுகிறது.

**9. மருத நிலத்துப் போர் வீரர்கள் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளனர்?**

- மருத நிலத்துப் போர் வீரர்கள், மிடுக்குடனும், வீரத்துடனும் ஏறுதழுவுதல் களத்திற்குச் செல்லும் காளைகளுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளனர்.

**10. ஏறுகோள் குறித்துக் கூறும் இலக்கியங்கள் யாவை?**

- கலித்தொகை, சிலப்பதிகாரம், பள்ளு போன்ற இலக்கியங்கள் ஏறுகோள் குறித்துக் கூறுகின்றன.

**11. சிந்துவெளி கல் முத்திரை குறித்து எழுதுக.**

- சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவுதல் கல் முத்திரை ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

**12. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை எழுதுக.**

- ஏறுதழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளில் தொழில் உற்பத்தியோடும், பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது.
- இதுவே, வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

## சிறுவினா

**1. சல்லிக்கட்டு - குறிப்பு வரைக.**

- 'சல்லிக்கட்டு' பேச்சுவழக்கில் திரிபுற்று 'ஜல்லிக்கட்டு' என அழைக்கப்படுகிறது.
- சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும்.
- புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் தற்போதும் உள்ளது.
- அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களைத் துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கமும் இருந்தது.
- மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பண முடிப்பு சொந்தமாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## நெடுவினா

**1. ஏறுதழுவுதல் குறித்து இலக்கியங்கள் கூறுவனவற்றை விவரிக்க.**

- சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முல்லைநில ஆயர்கள் பங்கேற்கும் இந்நிகழ்வு, அவர்களின் வீரத்தினை மெய்ப்பிக்கக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது.

**எழுந்தது துகள்**
**ஏற்றனர் மார்பு**
**கவிழ்ந்தன மருப்பு**
**கலங்கினர் பாலர்**

என்று, காளைகளின் பாய்ச்சல் பற்றிக் கலித்தொகை கூறுகிறது.

- திமில் பெருத்த காளைகள் பல காலாலே தரையைக் கிளறி, புழுதியை எழுப்பின.
- இந்தக் காளைகள் மிடுக்குடனும் வீரத்துடனும் போருக்குச் செல்லும் மருதநிலத்துப் போர் வீரர்களை நிகர்த்தனவாக இருந்தன.
- கலித்தொகை தவிர, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலும் புறப்பொருள் வெண்பாமாலை எனும் இலக்கண நூலிலும் 'ஏறுகோள்' குறித்துக் கூறப்பட்டுள்ளது.
- ஏறுதழுவுதல் பற்றிப் பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திலும் குறிப்புகள் உள்ளன.
- எருதுகட்டி எனும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

---

**கவிதைப்பேழை**

## இயல் மூன்று — மணிமேகலை

**– சீத்தலைச் சாத்தனார்**

## சரியான விடையைத் தேர்க.

**1. பொருத்துக.**

1. வசி - அ. குற்றம்
2. செற்றம் - ஆ. மழை
3. கலாம் - இ. சினம்
4. தோம் - ஈ. போர்

அ) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ　　ஆ) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ

இ) 1-ஆ, 2-ஈ, 3-இ, 4-அ　　ஈ) 1-அ, 2-ஆ, 3-இ, 4-ஈ　　**[அ) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ]**

---

**2. மணிமேகலையில் உள்ள காதைகளின் எண்ணிக்கை**

அ) 30　　ஆ) 20　　இ) 25　　ஈ) 36　　**[அ) 30]**

---

**3. காலத்தைக் கணக்கிட்டுச் சொல்பவர்கள்**

அ) சமயவாதிகள்　　ஆ) காலக்கணிதர்　　இ) சமயக்கணக்கர்　　ஈ) கணக்கு எழுதுபவர்

**[ஆ) காலக்கணிதர்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. இந்திரவிழா எத்தனை நாட்கள் நடைபெறுகின்றன?
அ) 28 ஆ) 30 இ) 25 ஈ) 12 **[அ) 28]**

5. கொம்புகளில் கட்டப்படும் கொடி
அ) கதலிகைக்கொடி ஆ) காழூன்று கொடி இ) வேதிகைக்கொடி ஈ) வேதிகை
**[ஆ) காழூன்று கொடி]**

6. 'பத்தி வேதிகை பசும்பொன் தூணத்து' - கோடிட்ட சொல்லின் பொருள்.
அ) மாலை ஆ) திண்ணை இ) மன்றம் ஈ) வேதியியல்
**[ஆ) திண்ணை]**

7. மணிமேகலையின் ஆசிரியர் யார்?
அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) சேக்கிழார் ஈ) கம்பர்
**[ஆ) சீத்தலைச் சாத்தனார்]**

8. மணிமேகலை ______ சமய சார்புடையக் காப்பியம்.
அ) சமணம் ஆ) சைவம் இ) பௌத்தம் ஈ) வைணவம்
**[இ) பௌத்தம்]**

9. கூலம் என்பதன் பொருள்
அ) தானியம் ஆ) கூலி இ) மழை ஈ) முத்து **[அ) தானியம்]**

10. பாடை மாக்கள் என்பது யாரைக் குறிக்கிறது?
அ) இறந்தவர்கள் ஆ) வணிகர்கள்
இ) அயல்மொழி பேசுபவர்கள் ஈ) பல மொழி பேசும் மக்கள்
**[ஈ) பல மொழி பேசும் மக்கள்]**

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

11. மணிமேகலையில் நும் பாடப்பகுதி இடம்பெற்றுள்ள காதை ------. - **விழாவறை காதை**
12. ஆற்றின் நடுவே இருக்கும் மணல் திட்டு ----- எனப்படுகிறது. - **துருத்தி**
13. பெண்மையை முதன்மைப் படுத்தும் புரட்சிக் காப்பியம் -----. - **மணிமேகலை**
14. 'விழவுமலி மூதூர்' -இதில் மூதூர் என்பது ----- நகர். - **புகார்**
15. பட்டிமன்றம் என்பதன் இலக்கிய வழக்கு -----. - **பட்டிமண்டபம்**

## குறுவினாக்கள்

1. **எண்பேராயத்தில் உள்ள வீரர்கள் யாவர்?**
   - கரணத்தியலவர், கரும விதிகள், கனகச்சுற்றம், கடைக்காப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் ஆகியோர் எண் பேராயத்தில் உள்ள வீரர்களாவர்.

2. **முரசறைவோன் அறிவித்த வாழ்த்துச் செய்தி யாது?**
   ''பசியும் பிணியும் பகையும் நீங்கி
   வசியும் வளனும் சுரக்க''
   - என்பதே முரசறைவோன் அறிவித்த வாழ்த்துச் செய்தி ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**3. இளங்கோவடிகள் சாத்தனாரை எவ்வாறு பாராட்டியுள்ளார்?**

- தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்றெல்லாம் இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

**4. குறிப்பு வரைக. 1. கதலிகைக்கொடி, 2. காழூன்று கொடி**

**கதலிகைக்கொடி:**

- சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டப்பட்டது கதலிகைக்கொடியாகும்.

**காழூன்று கொடி:**

- கொம்புகளில் கட்டும் கொடி காழூன்று கொடியாகும்.

**5. சமயவாதிகளின் சிறப்பு யாது?**

- மெய்ப்பொருள் உணர்த்தும் உலகியல், தத்துவம், வீடுபேறு ஆகிய பொருள்களை அவரவர் இயற்கைத் தன்மைக்கு ஏற்ப விளக்கும் சிறப்புக்கு உரியவர்களே சமயவாதிகள் ஆவர்.

**6. அரசவையில் யார் யார் குழுமியிருந்தனர்?**

- அரசவையில் ஐம்பெருங்குழு, எண்பேராயம், சமயவாதிகள், காலக்கணிதர்கள், கடவுளர், அயல்நாட்டினர் எனப் பலரும் குழுமியிருந்தனர்.

## சிறுவினாக்கள்

**1. இந்திர விழா நிகழ்வதற்குச் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளாக முரசறைவோன் அறிவித்தவற்றை விளக்குக.**

- தோரணம் கட்டிய தெருக்களிலும் குற்றமில்லாத மன்றங்களிலும் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் பலவகையான மங்கலப் பொருள்களை முறையாக அழகுபடுத்துங்கள்.
- குலை முற்றிய பாக்கு மரத்தையும் வாழை மரத்தையும் வஞ்சிக்கொடியையும் பூங்கொடிகளையும் கரும்பையும் நட்டு வையுங்கள்.
- தெருத் திண்ணையில் வரிசை வரிசையாக இருக்கும் தங்கத் தூண்களில் முத்து மாலைகளைத் தொங்கவிட்டு அழகு படுத்துங்கள் என்று முரசறைவோன் அறிவித்தான்.

**2. இந்திர விழாவைக் காண வந்தோர் யாவர்?**

- மெய்ப்பொருள் உணர்த்தும் உலகியலை விளக்குபவராகிய சமயவாதிகள் கூடியிருந்தனர்.
- காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும் காலக்கணிதர் கூடியிருந்தனர்
- தம் தேவருடலை மறைத்து மக்கள் உருவில் வந்திருக்கும் கடவுளர்.
- பலமொழி பேசும் அயல்நாட்டினர்.
- அரசர்க்குரிய ஐம்பெருங்குழு, எண்பேராயத்தினர் முதலானோர் இந்திரவிழாவைக் காண வந்திருந்தனர்.

**3. சீத்தலைச் சாத்தனார் குறிப்பு வரைக.**

- மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
- சாத்தன் என்பது இயற்பெயர்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- இவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்று கூறுவர்.
- கூலவாணிகம் செய்தவர் இக்காரணத்தால் இவர் மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்பெற்றார்.
- சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர்.
- தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

## நெடுவினா

1. **மணிமேகலையின் விழாவறை காதை செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**இந்திரவிழாவைக் காண வந்தோர்:**

மெய்ப்பொருள் உணர்த்தும் உலகியலை விளக்குபவராகிய சமயவாதிகள், காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும் காலக்கணிதர், தம் தேவருடலை மறைத்து மக்கள் உருவில் வந்திருக்கும் கடவுளர், பலமொழி பேசும் அயல்நாட்டினர், அரசர்க்குரிய ஐம்பெருங்குழு, எண்பேராயத்தினர் முதலானோர் இந்திரவிழாவைக் காணக் கூடியிருந்தனர்.

**விழா முன்னேற்பாடுகள்:**

- தோரணம் கட்டிய தெருக்களில் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் பலவகை மங்கலப் பொருட்களை முறையாக அழகுபடுத்தி வையுங்கள்.
- குலை முற்றிய பாக்குமரத்தையும், வாழை மரத்தையும், வஞ்சிக் கொடியையும், பூங்கொடிகளையும், கரும்பையும் நட்டு வையுங்கள்.
- திண்ணையில் வரிசையாக இருக்கும் தங்கத் தூண்களில் முத்துமாலைகளைத் தொங்கவிடுங்கள்.
- தெருக்களிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள்.
- பெரிய மாடங்களின் வாயில்களில் துகில் கொடிகளையும், கம்புகளில் கட்டிய கொடிகளையும் கட்டி வையுங்கள்.

**பட்டி மண்டபம் ஏறுமின்:**

- குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் மரங்கள் தாழ்ந்து நிழல்தரும் ஊர் மன்றங்களிலும் நல்லன பற்றிச் சொற்பொழிவாற்றுங்கள்.
- அவரவர் சமயத்திற்கு உரிய உட்பொருளறிந்து வாதிடுவோர் பட்டிமண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்.

**சினமும் பூசலும் கைவிடுக:**

- பகைவர்களிடம் கோபமும் பூசலும் கொள்ளாது விலகி நில்லுங்கள்.

**விழா நடைபெறும் நாட்கள்:**

- விழா நடைபெறும் இருபத்தெட்டு நாட்களிலும் தேவரும் மக்களும் ஒன்றுபட்டு மகிழ்வுடன் உலாவருவர் என்பதை நன்கு அறியுங்கள்.

**வாழ்த்தி அறிவித்தல்:**

- நான்கு வகைப் படையினரும் சூழ்ந்துவர அகன்ற முரசினை அறைந்து,

**'பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்க'**

- என வாழ்த்தி விழா பற்றிய செய்திகளைப் புகார் நகர மக்களுக்கு முரசறைவோன் அறிவித்தான்.

**விரிவானம்**

## இயல் மூன்று அகழாய்வுகள் (பட்டிமன்றம்)

### நெடுவினா

1. **வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்து உங்களது கருத்துகளைத் தொகுக்க.**
   - மக்கள் அறிவியல் என்கிற மகத்தான சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கும் நமது பண்பாட்டின் மேன்மைகளை இன்றைய தலைமுறை எடுத்துக் கொண்டு சிறப்பாய் வாழ்வதற்கும் அகழாய்வு துணை நிற்கின்றது.
   - நம் முன்னோர்கள் அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள்.
   - தமிழர்களின் உணவு, உடை, உறைவிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.
   - அகழாய்வு அறிவியலை ஆதாரமாகக் கொண்டது.
   - கடந்தகாலத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டால்தான் நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திட முடியும்.
   - இதற்கு அகழாய்வு அவசியமாகிறது.

**கற்கண்டு**

## இயல் மூன்று வல்லினம் மிகும் இடங்கள்

### சரியான விடையைத் தேர்க.

1. **ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் - சான்று**

   அ) ஓடிப்போனார் ஆ) புலித்தோல் இ) நிலாச்சோறு ஈ) உலகப்பந்து

   **[ஆ) புலித்தோல்]**

2. **விகாரப் புணர்ச்சியின் வகைகள்**

   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு **[ஆ) மூன்று]**

3. **வல்லினம் மிகுந்துவருதல் ---- விகாரப் புணர்ச்சியின் பாற்படும்.**

   அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) மிகுதல் **[அ) தோன்றல்]**

4. **கூற்று 1 :** மிக எனும் சொல்லின்பின் வல்லினம் மிகாது.

   **கூற்று 2 :** சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்.

   அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1, 2 தவறு இ) கூற்று 1, 2 சரி ஈ) கூற்று 1 தவறு 2 சரி

   **[ஈ) கூற்று 1 தவறு 2 சரி]**

5. **கடைப்பிடித்தல் - இச்சொல்லின் பொருள்.**

   அ) கடையைப் பிடித்தல் ஆ) வாழ்தல் இ) பின்பற்றுதல் ஈ) நிலைநிறுத்துதல்

   **[இ) பின்பற்றுதல்]**

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## குறுவினா

1. **விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.

2. **வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் எதற்குத் தேவைப்படுகிறது?**
   - சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும்,
   - பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும்,
   - பேச்சின் இயல்பைப் பேணவும்,
   - இனிய ஓசைக்காகவும், வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

## வல்லினம் மிகும் இடங்களுக்குச் சான்று தருக.

1. **அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின் வல்லினம் மிகும்.**
   அ + சட்டை = அச்சட்டை
   இ + சட்டை = இச்சட்டை

2. **அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.**
   அந்த + காலம் = அந்தக் காலம்
   இந்த + காலம் = இந்தக் காலம்

3. **'எ' என்னும் வினா எழுத்தின் பின் வல்லினம் மிகும்.**
   எ + திசை = எத்திசை

4. **எந்த என்னும் வினாச் சொல்லின் பின் வல்லினம் மிகும்.**
   எந்த + பணம் = எந்தப் பணம்

5. **இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**
   கதவை + திற = கதவைத் திற

6. **நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**
   ஊருக்கு + செல் = ஊருக்குச் செல்

7. **என, ஆக என்னும் சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும்.**
   என + கேட்டார் = எனக் கேட்டார்
   வருவதாக + கூறினார் = வருவதாகக் கூறினார்.

8. **அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**
   அதற்கு + கொடு = அதற்குக் கொடு
   இதற்கு + கொடு = இதற்குக் கொடு
   எதற்கு + கேட்கிறாய் = எதற்குக் கேட்கிறாய்

9. **தனி, இனி ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும்.**
   தனி + சிறப்பு = தனிச் சிறப்பு
   இனி + காண்போம் = இனிக் காண்போம்

10. **மிக என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும்.**
    மிக + சிறிது = மிகச் சிறிது

11. **எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.**
    எட்டு + தொகை = எட்டுத் தொகை
    பத்து + பாட்டு = பத்துப் பாட்டு

12. **ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.**
    தீ + பெட்டி = தீப்பெட்டி

13. **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.**
    ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

14. **வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலைமொழியாக இருந்து புணரும்போது வல்லினம் மிகும்.**
    கேட்டு + கொண்டான் = கேட்டுக் கொண்டான்

15. **அகர இகர ஈற்று வினையெச்சங்களின் பின் வல்லினம் மிகும்.**
    ஆட + சொன்னான் = ஆடச் சொன்னான்.
    ஓடி + போனான் = ஓடிப் போனான்.

16. **ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.**
    புலி + தோல் = புலித் தோல்

17. **திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.**
    கிழக்கு + பக்கம் = கிழக்குப் பக்கம்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



18. **இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.**
மல்லிகை + பூ = மல்லிகைப் பூ

19. **உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.**
முத்து + பல் = முத்துப் பல்

20. **சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.**
சால + பேசினான் = சாலப் பேசினான்
தவ + சிறிது = தவச் சிறிது

21. **தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும்.**
நிலா + சோறு = நிலாச் சோறு
கனா + கண்டேன் = கனாக் கண்டேன்

22. **சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்.**
வாழ்க்கை + படகு = வாழ்க்கைப் படகு

## கற்பவை கற்றபின் (பக்கம்.80)

### 1. வல்லினம் மிகலாமா?

அ) பெட்டிச்செய்தி
ஆ) விழாக்குழு
இ) கிளிப்பேச்சு
ஈ) தமிழ்த்தேன்
உ) தைப்பூசம்
ஊ) கூடக்கொடு
எ) கத்தியை விடக்கூர்மை
ஐ) கார்ப்பருவம்

**வல்லினம் மிகும்**

### 2. தொடர் தரும் பொருளைக் கூறுக.

**அ) சின்னக்கொடி** - சின்னத்தை உடைய கொடி
**சின்ன கொடி** - சிறிய கொடி

**ஆ) தோப்புக்கள்** - தோப்பில் இறக்கப்பட்ட கள்
**தோப்புகள்** - மா, பலா, வாழைத் தோப்புகள்

**இ) கடைப்பிடி** - பின்பற்று
**கடைபிடி** - ஒரு கடையைப் பிடி

**ஈ) நடுக்கல்** - நடுவில் உள்ள கல்
**நடுகல்** - நடப்பட்ட கல்

**உ) கைம்மாறு** - பிரதிபலன்
**கைமாறு** - ஒருவரிடமிருந்து மற்றொருவர்க்கு மாற்றுவது

**ஊ) பொய்ச்சொல்** - பொய்யாகச் சொன்ன சொல்
**பொய் சொல்** - பொய்யைச்சொல்

### 3. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்ற_ பொருள்களும் உறுதிப்படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர்_ செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்குக் குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலான பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பைப் பயன்படுத்திச் செய்த_ கோடாரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானைத் தந்தத்தினால் செய்த_ சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



வாழ்வியல்

# இயல் மூன்று

## திருக்குறள்

– திருவள்ளுவர்

### சரியான விடையைத் தேர்க.

1. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - இக்குறளில் பயின்று வரும் அணி.
அ) உவமை அணி ஆ) உருவக அணி இ) ஏகதேச உருவக அணி ஈ) பிறிது மொழிதலணி
**[இ) ஏகதேச உருவக அணி]**

2. கீழ்வருவனவற்றுள் திருவள்ளுவரின் சிறப்புப் பெயர் அல்லாதது எது?
அ) பெருநாவலர் ஆ) மாதானுபங்கி இ) நான்முகனார் ஈ) செந்நாப்புலவர்
**[ஈ) செந்நாப்புலவர்]**

3. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு?
அ) 1812 ஆ) 1814 இ) 1816 ஈ) 1818 **[அ) 1812]**

4. பேதை தொழில் எது?
அ) தீய குணம், குற்றம் ஆ) நாணாமை, நாடாமை
இ) ஓதி உணர்தல், பிறர்க்குரைத்தல் ஈ) நன்றி மறத்தல், சிறுமை **[ஆ) நாணாமை, நாடாமை]**

5. உவமையணி இடம்பெற்றுள்ள திருக்குறளைத் தேர்க.
அ) பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்
ஆ) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.
இ) சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.
ஈ) ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.
**[ஈ) சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.]**

6. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர்.
அ) மு.வரதரசன் ஆ) நாமக்கல் கவிஞர் இ) முதற்பாவலர் ஈ) பரிப்பெருமாள்
**[ஈ) பரிப்பெருமாள்]**

7. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு - இக்குறள் இடம்பெற்ற அதிகாரம்?
அ) வினைத்தூய்மை ஆ) தீ நட்பு இ) பழமை ஈ) தீவினை அச்சம்
**[ஆ) தீ நட்பு]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

8. **பிறஅறநூல்களைப்போல் அல்லாமல் ------- பேணும் நூல் திருக்குறள்.**
அ) வாழ்வியல் ஆ) உலகியல் இ) பண்பாடு ஈ) பொது அறம்
**[ஈ) பொது அறம்]**

9. **திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்**
அ) தருமர் ஆ) பரிமேலழகர் இ) மணக்குடவர் ஈ) நச்சர் **[இ) மணக்குடவர்]**

10. **திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம்**
அ) நட்பு ஆ) கல்வி இ) பேதைமை ஈ) குறிப்பறிதல்
**[ஈ) குறிப்பறிதல்]**

11. **கீழ்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.**
அ) தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் திருக்குறள்
ஆ) திருக்குறளில் கோடி என்ற சொல் எட்டு இடங்களில் இடம் பெற்றுள்ளது.
இ) திருக்குறளின் வேறு பெயர்கள் முதுமொழி, பொருளுறை
ஈ) திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் போப்.
**[ஆ) திருக்குறளில் கோடி என்ற சொல் எட்டு இடங்களில் இடம் பெற்றுள்ளது]**

## குறுவினா

1. **வினைவேறு சொல் வேறு பட்டார் தொடர்பு எத்தகையது?**
**வினைவேறு சொல் வேறு பட்டார் தொடர்பு:**
➢ செயல்வேறு சொல்வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

2. **பேதையின் செயல்கள் யாவை?**
➢ தகாத செயலுக்கு வெட்கப்படாமை, தக்கவற்றை நாடாமை, பிறரிடம் அன்பு இன்மை, ஏதொன்றையும் பாதுகாக்காமை ஆகியவை பேதையின் செயல்களாகும்.

3. **ஒருவருக்கு ஆன்ற பெருமை தருவது எதுவென வள்ளுவர் கூறியுள்ளார்?**
➢ எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால், கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

4. **தீரா இடும்பை தருவது எது?**
➢ ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும், தேர்வு செய்தபின் அவரைப் பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பத்தைத் தரும்.

5. **தகுதியான் வென்றுவிட வேண்டியவர் யார்?**
➢ செருக்கினால் துன்பம் தந்தவரைப் பொறுமையால் வெல்ல வேண்டும்.

6. **பிறர் நமக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தால் என்ன செய்ய வேண்டும்?**
➢ பிறர் நமக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் அதற்கு வருந்தி அவருக்கு அறம் அல்லாத செயல்களைச் செய்யாமல் இருப்பது நன்று.

7. **மறந்தும் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக் கூடாது ஏன்?**
➢ மறந்தும் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக் கூடாது. அவ்வாறு நினைத்தால் அறக்கடவுள் நமக்குக் கெடுதல் செய்ய நினைக்கும்.

8. **தலைசிறந்த செல்வம் எது?**

- செல்வத்தில் சிறந்தது செவியால் கேட்டறியும் கேள்விச் செல்வம். அது பிற வழிகளில் வரும் செல்வங்களைவிடத் தலைசிறந்தது.

9. **யாருடைய வாயிலிருந்து அடக்கமான சொற்கள் வரும்?**

- நுட்பமான கேள்வியறிவு உடையவரிடமிருந்தே அடக்கமான சொற்கள் வரும். நுட்பமான கேள்வியறிவு இல்லாதவர் அடக்கமான சொற்களைப் பேசுவது அரிது.

10. **செவியின் சுவை உணராது நாவின் சுவையை உணர்பவர் பற்றி வள்ளுவர் கூறும் கருத்து யாது?**

- கேட்பதன் சுவையை உணராமல், நாவின் சுவை மட்டும் உணர்பவர் இறந்தால்தான் என்ன! இருந்தால்தான் என்ன! என்று வள்ளுவர் கூறுகிறார்.

11. **ஒருவரின் குணத்தை எதன் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டும்?**

- ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து பார்த்து அவற்றுள் மிகுதியானதைக் கொண்டு அவருடைய குணத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டும்.

12. **வாழ்வில் உயர நினைப்பவர் செய்ய வேண்டியது யாது?**

- வாழ்வில் உயர நினைப்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைச் செய்யாமல் விட்டுவிடுதல் வேண்டும்.

13. **பச்சை மண்பானையில் நீரை ஊற்றி வைப்பது எதைப்போன்றது?**

- தீய செயல்களால் பொருளைச் சம்பாதிப்பது பச்சை மண்பானையில் நீரைச் சேமித்து வைப்பதற்குச் சமம். இறுதியில் பயன்படாது போய்விடும்.

14. **பேதையைப் போலப் பேதை யாரும் இல்லை என வள்ளுவர் கூறக் காரணம் யாது?**

- படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவருக்குக் கூறியும் தான், அதன்படி செயல்படாத பேதையைப் போலப் பேதை யாருமில்லை என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

15. **வள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

- வள்ளுவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

16. **திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

- திருக்குறளுக்கு முப்பால், பொதுமறை, பொய்யாமொழி,வாயுறை வாழ்த்து, தெய்வ நூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல பெயர்கள் உண்டு.

## சிறுவினா

1. **ஏகதேச உருவக அணியை விளக்குக.**

**ஏகதேச உருவக அணி:**

செய்யுளில் கூற எடுத்துக்கொண்ட பொருள்களில் ஒன்றை உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ''ஏகதேச உருவக அணியாகும்''.

எ.கா. **'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்'**

**விளக்கம்:**

கருமத்தைக் கட்டளைக் கல்லாக உருவகம் செய்த வள்ளுவர் பெருமை, சிறுமைகளை உருவகம் செய்யவில்லை. எனவே, இது ஏகதேச உருவக அணி.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **சொற்பொருள் பின்வரு நிலையணியை சான்றுடன் விளக்குக.**

- செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது ‘‘சொற்பொருள் பின்வரு நிலையணி’’ ஆகும்.

  **எ.கா. ‘குணம் நாடிக்குற்றமும் நாடி அவற்றுள்**
  **மிகைநாடி மிக்க கொளல்’**

- ‘நாடி’ எனும் சொல் ‘ஆராய்ந்து’ என்னும் பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே இது ‘சொற்பொருள் பின்வருநிலையணி’ ஆகும்.

---

## கற்பவை கற்றபின் (பக்கம்.91)

### பலவுள் தெரிக.

1. **படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.**



அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

**[இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாந் தலை.]**

---

2. **பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**பாடல்**

**ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்**
**ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய் - மாண்பற்ற**
**காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்**
**பாரதி சின்னப் பயல்.**

**குறள்**

அ) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

இ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

**[ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல். ]**

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.**

| | |
|---|---|
| பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |
| தத்தம் கருமமே கட்டளைக்கல் | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல |

**விடை**

| | |
|---|---|
| பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | **சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல** |
| தத்தம் கருமமே கட்டளைக்கல் | **ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல்** |
| அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | **அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும்** |

**4. தீரா இடும்பை தருவது எது?**

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை **[அ) ஆராயாமை, ஐயப்படுதல்]**

**5. சொல்லுக்கான பொருளைத் தொடரில் எழுதுக.**

அ) நுணுங்கிய கேள்வியர் - நுட்பமான கேள்வியறிவு உடையவர்.

**நுட்பமான கேள்வியறிவு உடையவர் இனிமையாகப் பேசுவர்.**

ஆ) பேணாமை - பாதுகாக்காமை

**ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாக்காமைக்காகத் துன்பம் அடைவர்.**

இ) செவிச்செல்வம் - கேட்பதால் பெறும் அறிவு

**கேட்பதால் பெறும் அறிவு பன்மடங்கு நன்மையைத்தரும்.**

ஈ) அறனல்ல செய்யாமை - அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்.

**நாம் எப்பொழுதும் அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் நல்லது.**

## குறுவினா

**1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?**

- நம்மை இகழ்பவரிடம் நாம் நிலம் போலப் பொறுமை காக்க வேண்டும்.

**2. தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.**
**- இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

- தீயவை தீயனவற்றையே தருதலால் தீயைவிடக் கொடியதாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்ச வேண்டும்.

**3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல்.**
**- இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.**

- இக்குறளில் 'ஒற்று' எனும் சொல் 'ஒற்றொற்றி' - 'ஒற்றினால் ஒற்றி' என இணைந்து இனிய ஓசையுடன் அரிய பொருளைத் தந்து நயம்படவுள்ளது.
- **மோனை நயம் :** ஒற்றொற்றி - ஒற்றினால் என முதல் எழுத்து ஒன்றி வந்துள்ளது.
- **எதுகை நயம் :** ஒற்றொற்றி - ஒற்றினால் என இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது.

**4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?**

- சொல் வேறாகவும் செயல் வேறாகவும் இருப்பவர் நட்பு கனவிலும் இனிக்காததாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகி விட்டது! கொஞ்ச நேரம் போனதும் ஒருவன் சொன்னான், ''எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!''

பக்கத்திலிருந்தவன் ''அடப்பாவி! பேசிட்டியே!'' என்றான்.

உடனே மூன்றாவது ஆள், ''நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!'' என்றான்.

நான்காவது ஆள், ''நல்லவேளை! நான் மட்டம் பேசவில்லை!'' என்றான்.

இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்துபோனது.

1. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
   அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
   அறனல்ல செய்யாமை நன்று.

3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
   பேதையின் பேதையார் இல்.

**பொருத்தமான குறள்:**

**3. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்.**

**காரணம்:**

மௌன விரதத்தைக் கடைப்பிடித்தபோது, பிறருக்கு அறிவுரை கூறித் தன்னைப் புத்திசாலி எனக் காட்டிக் கொள்வதைப் போலத் தம் அறியாமையை வெளிப்படுத்தி விட்டார்கள்.

---

| திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சிச் செய்திகள் |
|---|
| ➢ திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு - 1812. |
| ➢ திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகர ஒற்றில் முடிகிறது. |
| ➢ திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல். |
| ➢ திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் - தஞ்சை ஞானப்பிரகாசர். |
| ➢ திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் - மணக்குடவர். |
| ➢ திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம் பெற்றுள்ளது. |
| ➢ ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது. |
| ➢ திருக்குறளை ஆங்கிலத்தில் முதலில் முழுமையாக மொழிபெயர்த்தவர் - ஜி.யு.போப். |
| ➢ திருக்குறள் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் ஐந்து

# கசடற மொழிதல்

## மதிப்பீடு (பக்கம்.144)

### பலவுள் தெரிக.

1. **பொருத்தமான விடையைத் தேர்க.**

அ) சிறுபஞ்ச மூலம் - 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
இ) சீவகசிந்தாமணி - 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்

க) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 உ) அ-2, ஆ-3, இ-1, ஈ-4
ங) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 ச) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

**[க) அ-3, ஆ-4, இ-1, ஈ-2]**

2. **மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.**

| அ) | ஆ) | இ) | ஈ) | |
|---|---|---|---|---|
| கலைக்கூடம் | கடி | வினவினான் | இன் | **ஈ) இன்** |
| திரையரங்கம் | உறு | செப்பினான் | கூட | **கூட** |
| ஆடுகளம் | கூர் | உரைத்தான் | கிறு | **கிறு** |
| அருங்காட்சியகம் | கழி | பகன்றான் | அம்பு | **அம்பு** |

3. **கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?**

அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

**[இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!]**

4. **சரியான கூற்றினைத் தெரிவு செய்க.**

அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை
ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு
இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்

1) ஆ, இ சரி; அ தவறு 2) அ, இ, சரி; ஆ தவறு
3) மூன்றும் சரி 4) மூன்றும் தவறு

**[3) மூன்றும் சரி]**

5. **<u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> -அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?**

அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

**[ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## குறுவினா

1. **தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?**
   - ➢ பெண்கல்வி, விருந்தோம்பல், பெண்ணடிமை நீங்குதல் ஆகியவை தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் ஆகும்.

2. **மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.**
   **மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருள்:**
   - ➢ நன்மை, தீமைகளை உணர்ந்தவர்கள் இளையவராக இருந்தாலும் அவர்கள் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவரே என்பதே இத்தொடர் உணர்த்தும் பொருள் ஆகும்.

3. **நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?**
   - ➢ திருக்குறள், அக்னிச் சிறகுகள், குடும்ப விளக்கு, நாலடியார், அண்ணாவின் சிறுகதைகள் ஆகியவை நாங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்களாகும்.

4. **சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?**
   - ➢ பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் குழந்தைத் திருமணத்தைத் தடுக்கச் சாரதா சட்டம் இயற்றப்பட்டது.

## சிறுவினா

1. **சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.**
   **சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்கள்:**
   - ➢ ஔவையார்
   - ➢ ஒக்கூர் மாசாத்தியார்
   - ➢ ஆதிமந்தியார்
   - ➢ பொன்முடியார்
   - ➢ வெண்ணிக் குயத்தியார்
   - ➢ அள்ளூர் நன்முல்லையார்
   - ➢ நக்கண்ணையார்
   - ➢ காக்கைப் பாடினியார்
   - ➢ வெள்ளி வீதியார்
   - ➢ காவற்பெண்டு
   - ➢ நப்பசலையார்.

2. **சமைப்பது தாழ்வா? இன்பம்**
   **சமைக்கின்றார் சமையல் செய்வார்.**

   **அ) இன்பம் சமைப்பவர் யார்?**
   - ➢ இன்பம் சமைப்பவர் பெண்கள்.

   **ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?**
   - ➢ சமைப்பது தாழ்வில்லை. சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கு மேலாக இன்பத்தையும் சேர்த்துச் சமைக்கின்றார். இது உயிரை உருவாக்குவது போன்றதாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. **விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.**
   - பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன.
   - அதைப்போலவே மேதைகளும் பிறர் உணர்த்தாமலே எதையும் தாமாகவே உணர்ந்து கொள்வார்கள்.

4. **''இன்றைய பெண்கல்வி'' என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.**
   - தந்தனத்தோம் என்று சொல்லியே நாங்கள் வில்லினில் பாட வந்தோமே.
   - பெண்கல்வி வேண்டுமம்மா, பேரின்பம் வேண்டுமம்மா, பெண்கள் ஆண்களை விட நல்லாப் படிக்கிறாங்க! பட்டம் பதவி எல்லாம் பெறுகிறாங்க அம்மா.
   - இன்றையப் பெண்கள் புரட்சிப் பெண்களாக, புதுமைப் பெண்களாக இருப்பாங்களே!
   - ஆமாம்! புதுமைப் பெண்களாக இருக்காங்க.

5. **மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.**
   - தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி.
   - இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும் இவரே.
   - சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர்.
   - சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.
   - தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தார்.
   - அடையாற்றில் 1930-இல் அவ்வை இல்லம்; 1952-இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவினார். இவரது காலம் 1886-1968.

6. **நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.**
   - தந்தை மறைமலையடிகள் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்.
   - தனித்தமிழ் பற்றிய கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.
   - **எழுதிய நூல்கள் :** வடசொல் - தமிழ் அகரவரிசை, தனித்தமிழ்க் கட்டுரைகள், முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர்.
   - தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு இவர் நூல்கள் பயன்தரும்.

## நெடுவினா

1. **நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.**

**முன்னுரை:**

கல்வி கண் போன்றது. அதிலும் பெண்கல்வி நாட்டின் வளர்ச்சிக்கு மிகத் தேவையான ஒன்றாகும். கல்வியால் சாதனைப் படைத்த வீரப்பெண்களைப் பற்றி இங்குக் காண்போம்.

**சாவித்திரிபாய் பூலே:**

சாவித்திரிபாய் பூலே கி.பி.1848-இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர் ஆவார்.

**மூவலூர் இராமாமிர்தம்:**

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் கி.பி.1883-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர். தமிழக அரசு, 8-ஆம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கி வருகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**பண்டித ரமாபாய்:**

இவர் சமூகத் தன்னார்வலர். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

**ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார்:**

தமிழ், இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப்புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

**நீலாம்பிகை அம்மையார்:**

இவர் மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் - தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

**முடிவுரை:**

சாதனைப் பெண்களின் பணிகள் இன்றைய தமிழகம் மிளிர பல வகைகளிலும் வழிகாட்டியுள்ளது. இத்தகைய சாதனைப் பெண்மணிகளைப் பின்பற்றி இக்காலப் பெண்களும் கல்விகற்று, சமுதாயப் பணியாற்ற வேண்டும்.

---

2. **குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.**

**கல்வியறிவற்ற பெண்கள்:**

கல்வியறிவற்ற பெண்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாக மாட்டார்கள் என்ற கூற்று சரியானதே என்பதை இன்று கண்கூடாகக் காண முடிகிறது. கல்வியறிவு அற்ற குடும்பத் தலைவி குடும்பத்தைத் திட்டமிட்டு நடத்த முடியாத நிலையில் உள்ளாள். தன் பிள்ளைகளைச் சிறப்புப் படிப்பிற்குப் பிறரிடம் அனுப்பும் நிலையில் உள்ளாள்.

**கல்வியறிவு பெற்ற பெண்கள்:**

கல்வியறிவு பெற்ற பெண் சிறந்த அறிவுடைய மக்களைப் பெற்றெடுக்கிறாள். கல்வியறிவு பெற்ற பெண்கள் தன் பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் பொறுமையுடன் கற்றுக்கொடுத்து அடுத்த தலைமுறைக்கு அறிவைக் கொண்டு செல்கின்றனர். குடும்ப வாழ்வைத் திட்டமிட்டு மேற்கொள்கிறார்கள்; சேமிக்கிறார்கள்; வளமான வாழ்வைப் பெறுகிறார்கள்.

**ஒளிராமை:**

கல்வியறிவு இல்லாத பெண்கள் வாழ்வில் ஒளிர்வதில்லை. கல்வியறிவு பெற்ற பெண்கள் எல்லாச் சூழ்நிலையிலும் தன்னை வெளிப்படுத்தி, அனைவரது கவனத்தையும் ஈர்த்து, சுறுசுறுப்பான பெண் என்ற பெயரைத் தட்டிச் செல்கிறாள்.

**சமையல் மற்றும் வீட்டுவேலை:**

சமையலும் வீட்டு வேலையும் பெண்களுக்கு மட்டுமே உரிய பணி என்ற நிலை தமிழகத்தில் உள்ளது.

கல்வியறிவு இல்லாத பெண்கள் இது நம்முடையப் பணிதான் என்று எண்ணிக் கொண்டு நோய்வாய்ப்பட்ட நிலையிலும் அவற்றைச் சிரமப்பட்டுச் செய்கிறார்கள்.

கல்வியறிவு பெற்ற பெண்கள் தங்கள் நிலையை மற்றவர் உணரும் வண்ணம் எடுத்துக்கூறி, குடும்பத்தாரைப் புரியவைத்து அவர்களையும் செய்ய வைக்கிறார்கள்.

**பெண்கல்வி:**

பெண்கள் கல்வியறிவு பெற்றால் பெண்ணடிமைத்தனம் விலகும் என்று பாரதிதாசன் கூறுகிறார்.

இன்று பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கல்வி பயில்கிறார்கள்.

பெற்றோர்கள் பெண் குழந்தைகளைப் படிக்க வைக்கிறார்கள். சில குடும்பங்களில் கணவன்மார் மனைவிகளைப் படிக்க வைக்கிறார்கள்.

இன்று ஆண்களை விடப் பெண்களே மிகுதியாகத் தேர்ச்சிப் பெறுகிறார்கள்.

எல்லாப் பணிகளிலும் பெண்கள் ஈடுபடுகிறார்கள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**நிறைவு:**

பாரதிதாசன் கண்ட கனவு இன்று நிறைவேறி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் அனைத்து வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள். வீட்டு வேலைகளை ஆண்களும் பகிர்ந்து கொள்கிறார்கள். கல்வியில் ஆண்களை விடப் பெண்களே சிறந்து விளங்குகிறார்கள்.

---

3. **நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?**

**முன்னுரை:**

நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**புத்தகசாலை:**

வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும் என்ற எண்ணமுடையவர் அறிஞர் அண்ணா. வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கினால், நமது நாடு நிச்சயமாக மனவளத்தைப் பெற முடியும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும் போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை அடிப்படைத் தேவை. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தகசாலைக்குத் தரப்பட வேண்டும்.

**நூல்கள்:**

மக்களின் மனதிலே உலக அறிவு புக வழி செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள் கூட அல்ல. அடிப்படை உண்மைகளாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

உலக அறிவை உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும். பூகோள, சரித ஏடுகள் இருக்க வேண்டும். நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்க வேண்டும்.

மக்கள் முன்னேற்றத்திற்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல்கள் இருக்க வேண்டும். நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள். மக்களின் மனமாசு துடைத்தவர்கள். தொலைதேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

**முடிவுரை:**

இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக்கொண்டால், நாட்டுக்கு நல்லநிலை ஏற்படும். கேட்டினை நீக்கிட, தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்க வேண்டும், வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

---

## மொழியை ஆள்வோம் (பக்கம்.146)

### மொழி பெயர்க்க

Akbar said, "How many crows are there in this city?"

Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".

"How can you be so sure?" asked Akbar.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".

Akbar was pleased very much by Birbal's wit.

இந்த நகரத்தில் எத்தனை காகங்கள் உள்ளன? என்று அக்பர் கேட்டார்.

ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் பீர்பால், 'ஐம்பதாயிரத்து ஐந்நூற்று எண்பத்து ஒன்பது காகங்கள்' என்றார்.

எப்படி உன்னால் உறுதியாகக் கூறமுடியும்? என்றார் அக்பர்.

'காகங்களைக் கணக்கிடும் போது அதிகமாக இருந்தால் உறவினர் காகங்கள் இங்கு இருப்பதாகப் பொருள். குறைவாக இருந்தால் அவர்கள் உறவினர்களைக் காணச் சென்றிருப்பதாகப் பொருள்' என்று பீர்பால் சொன்னார்.

பீர்பாலின் மதிநுட்பத்தை அக்பர் பாராட்டினார்.

## பிழை நீக்கி எழுதுக.

1. **மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.**
   மதீனா சிறந்த இசை வல்லுநராக வேண்டும்.
2. **நல்ல தமிழுக்கு எழுதுவோம்.**
   நல்ல தமிழில் எழுத வேண்டும்.
3. **பவளவிழிதான் பரிசு உரியவள்.**
   பவளவிழிதான் பரிசுக்கு உரியவள்.
4. **துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.**
   துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. **குழலியும் பாடத் தெரியும்.**
   குழலிக்கும் பாடத் தெரியும்.

## இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

**(எ.கா.) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.**
**பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.**

1. **அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.**
   அலுவலர் வந்ததால் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
2. **சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.**
   சுடர்க்கொடியும் மாலனும் பாடினர்.
3. **பழனிமலை பெரியது; இமயமலை மிகப்பெரியது.**
   பழனிமலையை விட இமயமலை மிகப்பெரியது.
4. **கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்**
   கவலையற்ற எதிர்காலத்திற்குக் கல்வியே நிகழ்காலம்

## விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

**புத்தகத் திருவிழா**

**நாள்** - செப்டம்பர் 19 முதல் 28 வரை
**இடம்** - சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
**நேரம்** - காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

(முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில் செப்டம்பர் 19 முதல் 28 வரை புத்தக திருவிழா நடைபெறவுள்ளது. நாள்தோறும் காலை 8 மணி முதல் மலை 6 மணி வரை திறந்திருக்கும். தினமும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

## நிகழ்வைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

அண்ணாவின் வாழ்க்கையில்.....

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே சோதனை செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று, ''தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம், ''இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள்'' என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, ''நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வரவேண்டும். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்'' என்றார்.

1. **மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?**

   மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் வந்திருப்பவர் அண்ணா என்பதை உணர்ந்தார்.

2. **அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக் கொள்ளச் சொன்னார்?**

   முதலமைச்சர் வண்டியை சோதனைச் செய்த அலுவலர் வண்டியில் இருப்பவர் முதலமைச்சர் அண்ணா என்பதை அறிந்து முதலமைச்சர் அருகில் சென்று 'தெரியாமல் நடந்தது, பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னார்.

3. **அண்ணா, வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?**

   'நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது' என்று அலுவலரைப் பாராட்டினார்.

4. **பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக.**

   1. நூலகத்தில் நல்ல நூல்களைப்பெற முடியும்.
   2. ஓவியப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றான்.

5. **நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**

   ''அண்ணாவும் அரசு அலுவலரும்''

## மொழியோடு விளையாடு (பக்கம்.148)

### சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்கள் | ஆசிரியர் | பாடவேளை | கரும்பலகை | புத்தகம் | எழுதுகோல் | அழிப்பான் |
| வழிபாட்டுக் கூட்டம் | அறை | கல்லூரி | உயர்நிலை | சீருடை | மடிக்கணினி | |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



1. மாணவர்கள் சீருடையில் வழிபாட்டுக் கூட்ட அறையில் வரிசையில் நின்றனர்.

2. ஆசிரியர், கரும்பலகையில் எழுதினார்.

3. கல்லூரியில் மடிக்கணினி பயன்படுத்தலாம்.

4. ஆசிரியர் அறைக்குள் மாணவர்கள் செல்லக்கூடாது.

5. பாடவேளைக்குரிய புத்தகமும், எழுதுகோலும் மாணவர்கள் எடுத்துவர வேண்டும்.

6. மாணவர்கள் அழிப்பானைக் கொண்டு கரும்பலகையில் எழுதியதை அழித்தனர்.

## அகராதியில் காண்க.

**அரங்கு** - இடம், நாடகமேடை

**ஒட்பம்** - அறிவு, அழகு


**கான்** - காடு, மணம், பூ

**நசை** - ஆசை, குற்றம், விருப்பம்

**பொருநர்** - பகைவர், வீரர், தலைவர்

## படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர் தண்ணீர்)

| | | |
|---|---|---|
| 1. நா. காமராசனின் கவிதை நூல் | | |
|  |  | கருப்பு மலர்கள் |
| 2. திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடகநூல் | | |
|  |  | தண்ணீர் தண்ணீர் |
| 3. நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறுநாவல் | | |
|  |  | கிழவனும் கடலும் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



| 4. சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற சிற்பியின் கவிதை நூல் | | |
|---|---|---|
|  |  | <u>ஒரு கிராமத்து நதி</u> |
| 5. எஸ்.ராமகிருஷ்ணனின் சிறார் நாவல் | | |
|  |  | <u>சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம்</u> |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



கற்ற பாடங்களைக் கவினுற கற்று

மற்ற பல சாதனை புரிந்து

சரித்திரம் படைக்க

செந்தமிழைச் சிந்தையில் ஏற்றிட

வெற்றிப் படிகளிலே வீறு கொண்டு ஏறிடு

## கடிதம் எழுதுக.

**உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்:**

ஆ.தீபிகா,
அரசு மேனிலைப்பள்ளி,
தஞ்சாவூர்.

**பெறுநர்:**

மேலாளர் அவர்கள்,
நெய்தல் பதிப்பகம்,
சென்னை - 17.

**ஐயா,**

பொருள் : தமிழ் - தமிழ் - ஆங்கிலம் கையடக்க அகராதி வேண்டுதல் சார்பாக...



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

வணக்கம். தங்கள் பதிப்பகம் மூலம் வெளிவந்துள்ள தமிழ் - தமிழ் - ஆங்கிலம் எனும் கையடக்க அகராதி எங்கள் பள்ளி நூலகத்திற்குப் பத்துப் படிகள் தேவைப்படுகின்றன. தாங்கள் வெளியிட்டுள்ள அகராதி படிப்பதற்கும் பொருள் காண்பதற்கும் மிக எளிமையாகவுள்ளது. ஆகவே, அகராதியின் பத்துப் பிரதிகளைப் பதிவஞ்சலில் அனுப்பிட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் பத்துப் பிரதிகளுக்கான வரைவோலையை இணைத்து அனுப்பியுள்ளேன்.

நன்றி,

இடம் : தஞ்சாவூர் இப்படிக்கு,

நாள் : 10-10-20 ஆ.தீபிகா.

| | |
|---|---|
| **உறைமேல் முகவரி** | அஞ்சல் தலை |
| **பெறுநர்:** | |
| மேலாளர் அவர்கள், | |
| நெய்தல் பதிப்பகம், | |
| சென்னை - 17. | |

## நிற்க அதற்குத் தக

எனக்குப் பிடித்தவை / என் பொறுப்புகள்

1. என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும்.
   எவரையும் காயப்படுத்தாமல் நடந்து கொள்வது, குறைகூறாமல் பேசுவது என் பொறுப்பு.

2. எனக்குப் படம் வரைவது பிடிக்கும்.
   பள்ளிச்சுவர், வீட்டுச்சுவர், பொதுச்சுவர் ஆகியவற்றில் வரையாமல் எழுதாமல் இருப்பதோடு பிறரையும் அவ்வாறு செய்யவிடாமல் தடுப்பது என் பொறுப்பு.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| **சமூக சீர்திருத்தவாதி** | Social Reformer | **தன்னார்வலர்** | Volunteer |
| **களர்நிலம்** | Saline Soil | **சொற்றொடர்** | Sentence |



www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## உரைநடை உலகம்

# இயல் ஐந்து
# கல்வியில் சிறந்த பெண்கள்

### பலவுள் தெரிக.

1. சூரியன், பரமாணுப் புராணம் ஆகிய அறிவியல் நூல்களை எழுதியவர்.
அ) நீலாம்பிகை ஆ) இராஜேஸ்வரி இ) சாவித்திரி பாய் **[ஆ) இராஜேஸ்வரி]**

2. சாரதா சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு.
அ) 1964 ஆ) 1943 இ) 1929 **[இ) 1929]**

3. நாட்டின் முதல் பெண் ஆசிரியர்
அ) சாவித்திரிபாய் பூலே ஆ) பண்டித ரமாபாய் இ) முத்துலெட்சுமி **[அ) சாவித்திரிபாய் பூலே]**

4. முதன்முதலில் பெண்கல்விக்குப் பரிந்துரை செய்தது.
அ) சாரதா சட்டம் ஆ) ஹண்டர் குழு இ) கோத்தாரி கல்விக்குழு **[ஆ) ஹண்டர் குழு]**

5. முப்பெண்மணிகள் வரலாறு எனும் நூலின் ஆசிரியர்
அ) நீலாம்பிகை ஆ) இராஜேஸ்வரி இ) மறைமலையடிகள் **[அ) நீலாம்பிகை]**

6. சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர்
அ) பண்டித ரமாபாய் ஆ) இராமாமிர்தம் இ) முத்துலெட்சுமி **[இ) முத்துலெட்சுமி]**

7. 'பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீருமோ' என்று முழக்கம் செய்தவர்.
அ) பெரியார் ஆ) பாரதிதாசன் இ) பாரதியார் **[ஆ) பாரதிதாசன்]**

8. **கூற்று 1** : இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர் முத்துலெட்சுமி
**கூற்று 2** : முத்துலெட்சுமி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தார்.
அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1 தவறு 2 சரி இ) கூற்று 1 சரி 2 தவறு **[இ) கூற்று 1 சரி 2 தவறு]**

9. தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.
அ) பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்திப் போராடிய வீரச்சிறுமி மலாலா.
ஆ) 2014-இல் நோபல் பரிசு பெற்றவர் மலாலா.
இ) மலாலா போராட்டக்களத்தில் இறங்கிய போது வயது 12.
**[ஆ) 2014-இல் நோபல் பரிசு பெற்றவர் மலாலா. ]**

10. பொருத்துக.
1. 1923 - அ. புற்றுநோய் சிகிச்சை நிறுவனம்
2. 1964 - ஆ. தேவதாசி ஒழிப்பு
3. 1882 - இ. கோத்தாரி கல்விக்குழு
4. 1952 - ஈ. ஹண்டர் குழு
அ) 1-ஆ, 2- இ, 3-ஈ, 4- அ ஆ) 1-இ, 2-ஆ, 3-ஈ, 4-அ
இ) 1-ஈ, 2-இ, 3-ஈ, 4-ஆ **[அ) 1-ஆ, 2- இ, 3-ஈ, 4- அ]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**11. மூவலூர் இராமாமிர்தம் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளுள் தவறானது எது?**

அ) தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி ஆ) எழுத்தாளர்

இ) அவ்வை இல்லம் நிறுவியவர் **[இ) அவ்வை இல்லம் நிறுவியவர்]**

**12. கொவ்வைத் தமிழைக் கொண்டு பாடிய பெண்பாற்புலவர்**

அ) ஔவையார் ஆ) மாசாத்தியார் இ) வெண்ணிக்குயத்தியார் **[ஆ) மாசாத்தியார்]**

**13. இந்தியாவிலே முதலில் பெண்களுக்கெனத் தனியாக பள்ளி தொடங்கப்பட்ட ஆண்டு.**

அ) 1848 ஆ) 1831 இ) 1897 **[அ) 1848]**

**14. திருமந்திரம், தொல்காப்பியத்தில் அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவாற்றியவர்.**

அ) நீலாம்பிகை ஆ) இராஜேஸ்வரி இ) முத்துலெட்சுமி **[ஆ) இராஜேஸ்வரி]**

**15. ‘முடியாது பெண்ணாலே என்கின்ற மாயையினை முடக்க எழுந்தவர்’ - யார்?**

அ) பெரியார் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் **[அ) பெரியார்]**

**16. 2014-ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர்**

அ) மலாலா ஆ) கைலாஷ் சத்யார்த்தி

இ) சாவித்திரி பாய் பூலே ஈ) ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் **[ஆ) கைலாஷ் சத்யார்த்தி]**

**17. சமண மதமும் புத்த மதமும் வளர்ந்த காலத்தில் கல்வி கற்ற பெண்ணாக இருந்தவர்**

அ) மாதவி ஆ) மணிமேகலை இ) கண்ணகி ஈ) ஆண்டாள்

**[ஆ) மணிமேகலை]**

**18. விடியாது பெண்ணாலே என்கின்ற கேலியினை மிதித்துத் துவைத்தவர் யார்?**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) பெரியார் ஈ) பட்டுக்கோட்டையார்

**[அ) பாரதியார்]**

**19. ஈ.வெ.ரா- நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் ______ படிப்பிற்கு உரியது.**

அ) உயர்நிலை ஆ) மேல்நிலை இ) பட்டப்படிப்பு ஈ) பட்டமேற்படிப்பு

**[ஈ) பட்டமேற்படிப்பு]**

**20. பெண் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாய் இருப்பது.**

அ) பெண்கல்வி ஆ) சொத்துரிமை இ) குழந்தைத் திருமணம் ஈ) வேலைவாய்ப்பு

**[இ) குழந்தைத் திருமணம்]**

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

21. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் ----. - **முத்துலெட்சுமி**
22. தடைகளை மீறிக்கல்வி கற்றுப் பண்டிதராகியவர் -----. - **பண்டிதரமாபாய்**
23. இந்தியாவில் ‘குழந்தையைப் பாதுகாப்போம்’ என்ற அமைப்பை நிறுவியவர் ----. - **கைலாஷ் சத்தியார்த்தி**
24. சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ----. - **முத்துலெட்சுமி**
25. முதன்முதலாகப் பெண்களுக்கான பள்ளி ---- மாநிலத்தில் தொடங்கப்பட்டது. - **மராட்டிய**
26. தேவதாசி ஒழிப்புச்சட்டம் நிறைவேறத் துணை நின்றவர் ----. - **மூவலூர் இராமாமிர்தம்**
27. குழந்தைத் திருமணத்தைத் தடுக்க ---- சட்டம் கொண்டு வரப்பட்டது. - **சாரதா**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## குறுவினா

**1. பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் கல்வி கற்ற பெண்கள் யாவர்?**

- காரைக்கால் அம்மையார், ஆண்டாள் ஆகியோர் பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் கல்வி கற்ற பெண்களாவர்.

**2. ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் - குறிப்பு வரைக.**
**ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்:**

- பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில், தமிழகம் வந்து மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர் ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் ஆவார்.

**3. முதன்முதலாக பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கியவர்கள் யாவர்?**

- ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே ஆகியோர் முதன்முதலாக பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கியவர்கள் ஆவார்கள்.

**4. கோத்தாரி கல்விக்குழு எதனை வலியுறுத்துகிறது?**

- 1964-ஆம் ஆண்டு கோத்தாரி கல்விக்குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்துகிறது.

**5. தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ள நூல்கள் யாவை?**

- தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் - தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகியவை தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ள நூல்களாகும்.

**6. வில்லுப்பாட்டின் மையக் கருத்து யாது?**

- பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும். அதற்குப் பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்பதையே வில்லுப்பாட்டு உணர்த்துகிறது.

**7. தமிழின் பொற்காலம் எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?**

- தமிழுணர்வை மக்களுக்கு ஊட்டி வளர்த்த காலம் சங்ககாலம். எனவே, அதுவே தமிழின் பொற்காலம் ஆகும்.

**8. சங்ககாலத்தில் பெண்கள் பெற்றிருந்த சிறப்புகள் யாவை?**

- சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் இருந்தார்கள்.
- பெண்ணுணர்வைப் பாடல்களில் உணர்த்தினார்கள்.
- தூது சென்றிருக்கிறார்கள்.
- மக்கள் துயரைத் தீர்த்திருக்கிறார்கள்.
- தமிழாலே உயர்வு பெற்றிருக்கிறார்கள்.

**9. பெண்ணடிமைத்தனத்திற்கான காரணம் யாது?**

- மூடப்பழக்கங்களால் பெண்களைத் தாழ்த்தினார்கள். அதன் விளைவாகவே பெண்ணடிமைத்தனம் ஏற்பட்டது.

**10. அறிவியல் உண்மைகள் காணப்படும் நூல்கள் யாவை?**

- திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களில் அறிவியல் உண்மைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## சிறுவினா

1. **தமிழகத்தின் முதல்பெண் மருத்துவர் யார்? அவரது சாதனைகள் யாவை?**
   - தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி.
   - இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும் இவரே.
   - சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர்.
   - சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.
   - தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தார்.
   - அடையாற்றில் 1930-இல் அவ்வை இல்லம்; 1952-இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவினார். இவரது காலம் 1886-1968.

2. **மூவலூர் இராமாமிர்தம் அவர்களின் தொண்டினை விவரிக்க.**
   - தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
   - எழுத்தாளர், திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்.
   - தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்.
   - தமிழக அரசு 8-ஆம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித்தொகையை இவரின் பெயரில் வழங்கி வருகிறது.

3. **பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள் குறித்து எழுதுக.**
   - ஈ.வெ.ரா. - நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்ட மேற்படிப்பிற்கு வழங்கப்படுகிறது.
   - சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் கல்வி மற்றும் திருமண உதவித்தொகை ஆகியவற்றிற்காக வழங்கப்படுகிறது.
   - பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே அதைத் தடுக்க 1929-ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.
   - 1964-ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக்குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

4. **பெண்கள் முன்னேற்றத்திற்குக் குரல் கொடுத்த சான்றோர்கள் யார் யார்?**
   - முடியாது பெண்ணாலே என்னும் மாயையை முடக்க எழுந்தவர் தந்தை பெரியார்.
   - விடியாது பெண்ணாலே என்ற கேலியினை மிதித்துத் துவைத்தவர் பாரதியார்.
   - பெண்ணடிமை தீரும்வரை, மண்ணடிமை தீருமோ என இடிமுழக்கம் செய்தவர் பாரதிதாசன்.

5. **பெண்கல்வி மேம்பாட்டிற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?**
   - 1882-இல் ஹண்டர் குழு முதன்முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது.
   - பெண்கள் கல்வி பயில பல உயர்கல்வி நிறுவனங்களை அரசு உருவாக்கியது.
   - பூலே இணையர் முதன் முதலாக பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்கள்.
   - 1964-ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக்குழு தன்பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.
   - விடுதலைக்குப் பின் மத்திய மாநில அரசுகள் பெண்கள் பள்ளிக்கூடங்களைத் திறந்தார்கள்.
   - பெண்கள் கல்வி கற்று உயர்ந்தார்கள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## நெடுவினா

1. **பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டோரின் பணிகளை விவரிக்க.**

**முத்துலெட்சுமி:**

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.
- தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்கான சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்:**

- தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்.

**பண்டித ரமாபாய்:**

- சமூகத் தன்னார்வலர் தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகி பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றார்.

**ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்:**

- பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் தமிழகத்திற்கு வந்து மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தார்.

**பூலே இணையர்:**

- ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்கள்.

**மலாலா:**

- பாகிஸ்தானில் பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி 12 வயதிலேயே போராட்டத்தில் இறங்கிய வீரச் சிறுமியே மலாலா.

**பெரியார்:**

- பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பெரியார், பாரதியார், பாரதிதாசன் போன்றோரும் குரல் கொடுத்தனர்.

---

## கற்பவை கற்றபின் (பக்கம்.129)

1. **இன்றைய சாதனைப் பெண்மணிகள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.**

- இந்தியாவின் முதல் சர்வதேசக் கால்பந்து போட்டியின் நடுவர் - ரூபாதேவி.
- சமூக ஊடகங்கள் வாயிலாகப் பணம் சேர்த்து மருத்துவ உதவி செய்பவர் - ஸ்மிதா டண்டி.
- குத்துச் சண்டை வீராங்கணை - மேரிகோம்
- சர்க்கரை நோயற்ற இந்தியாவை உருவாக்க உதவி புரிந்து வருபவர் - டாக்டர் நந்திஷா.
- தங்கப்பதக்கம் வென்ற பூப்பந்தாட்ட வீரர் - சாய்னா நேவால்.
- பாரம்பரியக் கைத்தொழில்களை ஊக்குவித்து, ஏழை நெசவாளர்களுக்கு உதவுபவர் - கல்யாணி ப்ரமோத் பாலகிருஷ்ணன்.
- உலகில் முதன் முதலில் மலையேறி சாதனை படைத்த மாற்றுத்திறனாளி - அருணமாசின்கா.
- யோகாப் பயிற்சி அளிப்பவர் - நன்னம்மாள்.
- இந்தியாவின் முதல் பெண் விமானி - சரளாதக்கரால்
- ஊழல் எதிர்ப்புச் சீர்திருத்தவாதி - அருணாராய்
- முதல் இந்தியப் பெண் காவல்துறை அதிகாரி - கிரண்பேடி

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை:**

ஒருவன் வாழ்வை வளப்படுத்தி அவனைச் சமுதாயத்தில் சிறந்த மேதையாக உருவாக்குவது கல்வி. வாழ்நாள் முழுவதும் தேட வேண்டிய கல்விச் செல்வத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**எங்கும் சிறப்பு:**

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு வந்து சேரும். கற்றோருக்கு ஊரோ, நாடோ, உலகமோ எல்லாம் ஒன்றுதான். அது மட்டுமின்றிச் சிறப்பையும் தரும். வரவேற்கும், வாழ்த்தும், போற்றிப்புகழும். அவர்கள் பெற்ற கல்வியினால் தான் சென்றவிடமெல்லாம் பெயரும் புகழும் வந்து சேர்கிறது.

**கற்றது கைம்மண்ணளவு:**

நாம் கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு என்று கூறப்படுகிறது. ஏனென்றால், கல்வி கடல் போன்றது. பரந்து, விரிந்து, ஆழமாக உள்ள கடலைப் போலவே கல்வியின் தன்மையும் உள்ளது.

**கல்வியழகே கலையழகு:**

மாட மாளிகைகள், வயல்வெளிகள், தங்க ஆபரணங்கள், அசையும், அசையா சொத்துகள் எவ்வளவு இருந்தாலும் அவற்றால் ஒருவனுக்கு அழகு வந்துவிடாது. அவன் பெற்ற கல்வியால்தான் அவன் அழகு பெறுவான் சமுதாயத்தில் உயர்வும் கிடைக்கும்.

**தொடர்கள்:**

**'கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி'**
**'கல்வி கரையில, கற்பவர் நாள்சில'**
**'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'**
**'கல்வியழகே அழகு'**

- போன்ற தொடர்கள் கல்வியின் சிறப்பை உணர்த்துகின்றன.

**முடிவுரை:**

கல்வி என்னும் அணிகலனை அணிந்து கொள்வோம். பிறருக்கும் அணிவிப்போம். கல்வி என்ற அணிகலன் நமக்கு என்றும் அழகு தருகின்ற அணிகலனாக விளங்கட்டும்.

---

**கவிதைப்பேழை**

## இயல் ஐந்து — குடும்ப விளக்கு

**– பாரதிதாசன்**

**பலவுள் தெரிக.**

1. **பொருத்துக.**

1. கழனி - அ. நெருப்பு
2. தாழி - ஆ. சமைக்கும் கலன்
3. தணல் - இ. உலகம்
4. வையம் - ஈ. வயல்

அ) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ ஆ) 1-ஈ, 2-ஆ, 3-அ, 4-இ

இ) 1-ஈ, 2-அ, 3-ஆ, 4-இ **[ஆ) 1-ஈ, 2-ஆ, 3-அ, 4-இ]**

2. **பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற நூல்**

அ) குடும்ப விளக்கு ஆ) பாண்டியன் பரிசு இ) பிசிராந்தையார் **[இ) பிசிராந்தையார்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. 'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்' என்றவர்
அ) கவிமணி ஆ) பாரதிதாசன் இ) பாரதியார் **[அ) கவிமணி]**

4. கல்வியை உடைய பெண்கள்
அ) களர் நிலம் ஆ) உவர் நிலம் இ) திருந்திய கழனி **[இ) திருந்திய கழனி]**

5. குடும்ப விளக்கு எனும் நூல் --- பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.
அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு **[ஆ) ஐந்து]**

6. குடும்ப விளக்கின் இரண்டாம் பகுதி
அ) கல்வி ஆ) பெண்கள் இ) விருந்தோம்பல் **[இ) விருந்தோம்பல்]**

7. 'மின்னாளை வாழ்வில் என்றும் ---- என்றே உரைப்பேன்'
அ) மின்னாள் ஆ) பெண்கள் இ) இன்னாள் **[அ) மின்னாள்]**

8. பெண்களுக்குத் தவிர்க்க ஒணாக்கடமை என்று எதனைக் கூறுகின்றனர்?
அ) பணிவிடைச் செய்வது ஆ) சமைப்பது இ) நினைப்பது **[ஆ) சமைப்பது]**

9. பெண்கல்வி வேண்டும் யாண்டும் - கோடிட்ட சொல்லின் பொருள்
அ) தவிர்க்க இயலாத ஆ) அருகில் இ) எப்பொழுதும் **[இ) எப்பொழுதும்]**

10. களர்நிலம் எனும் சொல்லின் பொருள்
அ) நன்செய்நிலம் ஆ) புன்செய்நிலம் இ) உவர்நிலம் **[இ) உவர்நிலம்]**

11. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் - என்று பாடியவர் யார்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி
**[அ) பாரதியார்]**

12. பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது சரிப்படாது என்று பாடியவர் யார்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி
**[ஆ) பாரதிதாசன்]**

13. மாக்கடல் - இலக்கணக்குறிப்பு தருக.
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) உரிச்சொல்தொடர்
**[இ) உரிச்சொல்தொடர்]**

## குறுவினா

1. ஆண், பெண் அனைவருக்கும் பொதுவானவை எவையெவை?
   - வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவையாகும் எனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

2. பெண்களுக்கு விடுதலை பறிபோனது எதனால்?
   - இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது எனலாம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**3. வாழ்வு எப்போது நலம் பெறும்?**

- அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில் தான் வாழ்வு நலம்பெறுகிறது.

**4. பெண்களுக்கே உரிய செயல்களாகக் கருதப்பட்டவை எவை?**

- சமைப்பதும், வீட்டு வேலைகளைச் சலிப்பின்றிச் செய்வதும் பெண்களுக்கே உரியதாகக் கருதப்பட்டவையாகும்.

**5. பாரதிதாசன் படைப்புகள் யாவை?**

- பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் ஆகியன பாரதிதாசனின் படைப்புகளாகும்.

**6. மறுமலர்ச்சி இலக்கியம் என்றால் என்ன?**

- புதுமைக் கருத்துகளை இயம்பும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்தவையே மறுமலர்ச்சி இலக்கியங்கள் ஆகும்.

**7. மறுமலர்ச்சி இலக்கியங்களின் பாடுபொருட்கள் யாவை?**

- இயற்கையைப் போற்றுதல்
- தமிழுணர்ச்சி ஊட்டுதல்
- பகுத்தறிவு பரப்புதல்
- பொதுவுடைமை பேசுதல்
- விடுதலைக்குத் தூண்டுதல்
- பெண்கல்வி பெறுதல்

  - போன்றவை மறுமலர்ச்சி இலக்கியங்களின் பாடுபொருட்களாக அமைந்தன.

**8. கல்வியறிவு இல்லாத பெண்களைப் பற்றிப் பாரதிதாசன் கூறுவது யாது?**

- கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள் அவர்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாக மாட்டார்கள்.
- கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள்.

  - என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

**9. கல்வி கற்ற பெண்களைப் பற்றிப் பாரதிதாசன் என்ன கூறுகிறார்?**

- கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள் அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர்.

**10. பெண்கள் என்னென்ன வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?**

- பெண்களுக்கென உள்ள வேலைகளையும், அவர்களின் விடுதலைக்கான வேலைகளையும், பெண்கள் செய்ய வேண்டியுள்ளது எனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

**11. சமைக்கும் வேலை குறித்த வழக்கத்தினை கண் இமைக்கும் நேரத்தில் மாற்ற நாம் செய்ய வேண்டியது யாது?**

- சமைக்கும் பணி பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும், அப்பணி நல்ல தாய்மார்க்கே உரியது எனவும் தமிழ்த்திருநாட்டில் இருக்கும் வழக்கத்தைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும் எனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## சிறுவினா

1. **குடும்ப விளக்கு - நூற்குறிப்பு தருக.**
   - பாரதிதாசனின் படைப்புகளில் உயர்நிலையில் நிற்பது குடும்ப விளக்கு.
   - குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள், அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது.
   - கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது.
   - குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும்.
   - இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.
   - இதன் ஆசிரியர் பாரதிதாசன்

2. **பாரதிதாசன் - ஆசிரியர் குறிப்பு வரைக.**
   - பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம்.
   - பெற்றோர் கனகசபை - இலக்குமி அம்மையார்.
   - பாரதியின் கவிதை மீது கொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார்.
   - பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு , தமிழியக்கம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
   - இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.
   - இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.
   - இவரது காலம் 29-04-1891 முதல் 21-04-1964 வரை.

## நெடுவினா

1. **குடும்ப விளக்கு என்னும் தலைப்பில் பாரதிதாசன் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.**

**கல்வியறிவற்ற பெண்கள்:**

கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அவர்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாக மாட்டார்கள். அவர்கள் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டார்கள்.

**கல்வி கற்ற பெண்கள்:**

கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர்.

**விடுதலை பறிபோகக் காரணம்:**

இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

**பெண்கள் ஒளிராமைக்குக் காரணம்:**

மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண். ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன் என்கிறார்.

**பெண்கள் எதிர்கொள்ள வேண்டிய பணிகள்:**

இன்று பெண்கள் தங்களுக்கென உள்ள பணிகளையும் தங்கள் விடுதலைக்கான பணிகளையும் செய்ய வேண்டியுள்ளது.

**இருபாலருக்கும் பொதுவான பணிகள்:**

வானூர்தியைச் செலுத்துதல், உலகையும், கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானவை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**பெண்களுக்கே உரிய பணி:**

சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது.

**சமையலின் சிறப்பு:**

சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார். உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம் பெறுகிறது.

**சமையல் இருபாலருக்கும் உரியது:**

சமையல் நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும்.

**பெண்கல்வி:**

தமிழ்த்திருநாட்டில் பெண்கள் மட்டும்தான் சமைக்க வேண்டும் என்ற வழக்கம் கண் இமைக்கும் நேரத்தில் நீங்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

---

**கவிதைப்பேழை**

# இயல் ஐந்து — சிறுபஞ்ச மூலம்

**– காரியாசான்**

## பலவுள் தெரிக.

1. **சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் ---- கருத்துகள் இடம்பெற்றுள்ளன.**
   அ) மூன்று ஆ) ஐந்து இ) ஆறு **[ஆ) ஐந்து]**

2. **15 வயதில் பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குக் கவிதைகள் அனுப்பியவர்.**
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) விக்டர் ஹியூகோ **[இ) விக்டர் ஹியூகோ]**

3. **தம் தந்தையின் போர்ப் படையில் தளபதியாக இருந்த போது அலெக்சாண்டரின் வயது.**
   அ) 15 ஆ) 16 இ) 17 **[ஆ) 16]**

4. **'பூவாது காய்க்கும் மரம் உள.....' எனத் தொடங்கும் சிறுபஞ்ச மூலம் பாடலில் இடம்பெற்றுள்ள அணி.**
   அ) உவமையணி ஆ) சொற்பொருள் பின்வருநிலையணி
   இ) எடுத்துக்காட்டு உவமையணி **[இ) எடுத்துக்காட்டு உவமையணி]**

5. **காரியாசனின் இயற்பெயர்**
   அ) காரி ஆ) ஆசான் இ) மாக்காயனார் **[அ) காரி]**

6. **பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர்**
   அ) அலெக்சாண்டர் ஆ) கலீலியோ இ) ஹியூகோ **[ஆ) கலீலியோ]**

7. **'முளைப்ப' எனப்பொருள் தரும் சொல்**
   அ) நாருவ ஆ) தாவா இ) நாறுவ **[இ) நாறுவ]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**8. மூவாது மூத்தவர், நூல் வல்லார் - கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு.**

அ) வினையாலணையும் பெயர் ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

இ) பண்புப்பெயர் **[அ) வினையாலணையும் பெயர்]**

**9. 'உரையாமை' - இச்சொல்லின் விகுதி**

அ) ஐ ஆ) மை இ) ஆமை **[ஆ) மை]**

**10. சிறுபஞ்சமூலம் என்பது ----- இலக்கியம்.**

அ) காப்பியம் ஆ) பக்தி இ) அறம் **[இ) அறம்]**

**11. சிறுபஞ்சமூலம் ----- நூல்களுள் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) பதினெண்கீழ்க்கணக்கு **[இ) பதினெண்கீழ்க்கணக்கு]**

**12. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் ------.**

அ) காரியாசான் ஆ) வள்ளலார் இ) பதஞ்சலி முனிவர் **[அ) காரியாசான்]**

**13. தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து ---- இலக்கியங்கள் தோன்றின.**

அ) காப்பிய இலக்கியங்கள் ஆ) நீதி இலக்கியங்கள்

இ) பக்தி இலக்கியங்கள் **[ஆ) நீதி இலக்கியங்கள்]**

**14. பாயிரம் செய்யுள் காரியாசானை எவ்வாறு சிறப்பிக்கிறது.**

அ) காரி ஆ) மாக்காரியாசான் இ) ஆசான் **[ஆ) மாக்காரியாசான்]**

**15. ஆசான் என்பது ----- அடிப்படையில் அமைந்த பெயர்**

அ) ஊரின் ஆ) இயற்பெயர் இ) தொழிலின் **[இ) தொழிலின்]**

**16. பூவாது காய்க்கும் - இலக்கணக்குறிப்பு தருக.**

அ) எதிர்மறை வினையெச்சம் ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) எதிர்மறைத் தொழிற்பெயர் **[அ) எதிர்மறை வினையெச்சம்]**

## குறுவினா

**1. சிறுபஞ்சமூலம் - பெயர்க்காரணம் கூறுக.**

- சிறுபஞ்சமூலம் என்பது ஐந்து சிறிய வேர்கள் என்று பொருள்படும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர்கள் உடல் நோயை நீக்கும். அதுபோல இப்பாடலில் உள்ள ஐந்து கருத்துகள் அறியாமையைப் போக்கும்.

**2. பூக்காமலே காய்க்கும் மரங்கள் சிலவற்றைக் கூறுக.**

- ஆல், அரசு , அத்தி, பலா ஆகிய மரங்கள் பூக்காமலே காய்க்கும் மரங்களாகும்.

**3. சிறுபஞ்சமூலம் உணர்த்தும் கருத்துகள் யாவை?**

- சிறுபஞ்சமூலப் பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. **காரியாசான் குறிப்பு வரைக.**

- சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்.
- மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.
- காரி என்பது இயற்பெயர்.
- ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்.
- மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் சிறப்பிக்கிறது.

## சிறுவினா

1. **அறிவுடையார் தாமே உணர்வர் என்னும் தலைப்பின் மூலம் காரியாசான் உணர்த்தும் கருத்துகளை விளக்குக.**

- பூக்காமலே சில மரங்களில் காய் காய்ப்பதுண்டு. இதனைப் போலவே நன்மை தீமைகளை நன்குணரும், உயர்ந்தவர்கள் வயதில் இளைஞர்களே ஆனாலும், அவர்கள் மூத்தவர்களோடு வைத்து எண்ணத்தக்கவரே ஆவர்.
- பாத்தி அமைத்து விதை விதைக்காமலே தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதனைப்போல மேதைகளும் பிறர் உணர்த்தாமலே, எதையும் தாங்களாகவே உணர்ந்து கொள்வார்கள். - என்று சிறுபஞ்ச மூலம் கூறுகிறது.

2. **சாதனைக்கு வயது தடையன்று என்பதற்குச் சில சான்றுகள் தருக.**

- 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.
- 11 வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி ‘பாரதி’ என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.
- 15 வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.
- 16 ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.
- 17 ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் கலீலியோ

3. **எடுத்துக்காட்டு உவமை அணியை விளக்குக.**

**இலக்கணம்:**

உவமை உவமேயத்திற்கு இடையே உவம உருபு மறைந்து வந்து பொருளை உணர்த்துமாயின் அது எடுத்துக்காட்டு உவமையணி எனப்படும்.

**சான்று:**

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

**விளக்கம்:**

பூப்பூக்காமலே சில மரங்களில் காய் காய்ப்பதுண்டு. இதனைப்போலவே நன்மை தீமைகளை நன்குணரும் உயர்ந்தவர்கள் வயதில் இளைஞர்களே. ஆனாலும், அவர்கள் மூத்தவர்களோடு வைத்து எண்ணத் தக்கவரே.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**அணிப்பொருத்தம்:**

**உவமை** - பூவாது காய்க்கும் மரம் உள

**உவமேயம்** - மூவாது மூத்தவர்

**உவம உருபு**- (போல என்ற உருபு மறைந்து வந்துள்ளது).

- இப்பாடலில் உவமையும் உவமேயமும் வெளிப்பட்டு நின்று உவமை உருபு மறைந்து வந்துள்ளதால் இதில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

---

**விரிவானம்**

## இயல் ஐந்து — வீட்டிற்கோர் புத்தகசாலை

**– பேரறிஞர் அண்ணா**

### பலவுள் தெரிக.

1. **ஆசியாவிலேயே மிகப்பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது.**

அ) சரசுவதி மகால் ஆ) கன்னிமாரா இ) அறிஞர் அண்ணா நூலகம் **[அ) சரசுவதி மகால்]**

2. **'உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே' - யார் கூற்று**

அ) அண்ணா ஆ) பெரியார் இ) கதே **[இ) கதே]**

3. **இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம்**

அ) தேசிய நூலகம், கொல்கத்தா ஆ) நடுவண் நூலகம், திருவனந்தபுரம்

இ) கன்னிமாரா நூலகம், சென்னை **[ஆ) நடுவண் நூலகம், திருவனந்தபுரம்]**

4. **உலகின் மிகப்பெரிய நூலகம் என்ற பெருமைக்குரியது.**

அ) லைப்ரரி ஆப் காங்கிரஸ் ஆ) சரஸ்வதி மகால் நூலகம்

இ) தேசிய நூலகம் **[அ) லைப்ரரி ஆப் காங்கிரஸ்]**

5. **வீட்டிற்கோர் புத்தகசாலை என்னும் பகுதி அண்ணாவின் ---- தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.**

அ) சொற்பொழிவுகள் ஆ) வானொலி உரை இ) அடுக்கு மொழிகள் **[ஆ) வானொலி உரை]**

6. **''நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே சிறந்த நண்பன்'' என்று சொன்னவர்.**

அ) அண்ணா ஆ) இரா.அரங்கநாதன் இ) ஆபிரகாம் லிங்கன் **[இ) ஆபிரகாம் லிங்கன்]**

7. **கீழ்க்கண்ட கூற்றுகளுள் தவறான கூற்றைக் கண்டறிக.**

அ) உலகமெங்கும் பயணம் செய்யும் பட்டறிவைத் தருவது நூலகம்

ஆ) சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமே

இ) இசையைப் போல் இதயத்தைப் பண்படுத்துவன நூல்கள் **[ஆ) சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமே]**

8. **உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம்**

அ) கன்னிமாரா ஆ) சரஸ்வதி மகால் இ) அறிஞர் அண்ணா **[அ) கன்னிமாரா]**

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



9. **அறிஞர் அண்ணா பற்றிய கூற்றுகளுள் தவறானது எது?**
அ) 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று போற்றப்படுகிறார்
ஆ) ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார்
இ) குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் ஆசிரியராக இருந்தார்

**[இ) குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் ஆசிரியராக இருந்தார்]**

10. **நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் நூல்**
அ) திருக்குறள் ஆ) சங்க இலக்கியம் இ) காப்பியங்கள் **[ஆ) சங்க இலக்கியம்]**

## நெடுவினா

1. **நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?**

**முன்னுரை:**

மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும் தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று நூல்களும்தான். ஆதலின் வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை என வலியுறுத்தும் அண்ணாவின் வானொலி உரையின் கருத்துச் சாரத்தைக் காண்போம்.

**நோக்கம்:**

வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியம் நாட்டுக்கோர் நல்ல நிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை. ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே. மாநிலம் மதிக்கும் மனவளம் வேண்டுமெனில் புத்தகசாலை வேண்டும்.

**மனவளம்:**

வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கினால் நிச்சயமாக மனவளத்தைப் பெறமுடியும். உலகெங்கும் பயணம் செய்யும் பட்டறிவை நூலகம் தருகிறது என்பதை உணர வேண்டும்.

**மனவளத்தைப் பெருக்க:**

அறிவின் துணைகொண்டு விஞ்ஞானிகள் ஆக்கித் தந்த வசதிகள் நமக்கு இருக்கின்றன. இருந்தும் ஏன் மனவளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது. வீடுகளிலே மனவளத்தை அதிகரிக்கவோ பாதுகாக்கவோ நாம் முயற்சி செய்வதில்லை. அதற்கான வழிவகைகளைத் தேடிக்கொள்வதும் இல்லை.

**வீட்டில் இடம் ஒதுக்க வேண்டும்:**

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்குத் தரப்படும் நிலைமாறி புத்தகச் சாலைகளுக்குத் தரப்பட வேண்டும்.

**இன்றியமையாமை:**

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும். மக்களின் மனத்திலே உலக அறிவு புக, அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள் வேண்டாம். அடிப்படை உண்மைகளை அறிவிக்கும் ஏடுகள் இருந்தால் போதும்.

**வாங்க வேண்டிய புத்தகங்கள்:**

பூகோள, சரித்திர ஏடுகள் இருக்க வேண்டும், திருக்குறள் கட்டாயமாக இருக்க வேண்டும். சங்க இலக்கிய ஏடுகள், மக்கள் முன்னேற்றத்திற்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய நூல்கள் இருக்க வேண்டும். நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலை தேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

**புத்தகம் வாங்கும் பழக்கம்:**

வீடுகளில் நடைபெறும் விசேஷங்களின் போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது புத்தகங்களை வாங்குவது என்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். உலக அறிவை உருப்படியான காரியத்துக்குப் பயன்படுத்தும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும்.

**முடிவுரை:**

கேட்டினை நீக்கிட தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக நல்ல புத்தக சாலையை வீட்டினில் அமைத்து மனவளத்தைப் பெருக்கி, மகிழ்ச்சியாக வாழ்வோம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## கற்பவை கற்றபின் (பக்கம்.138)

1. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்! - அறிஞர் அண்ணா
உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! - கதே
இவை போன்ற பொன்மொழிகளை எழுதி வகுப்பறையில் படித்துக் காட்டுக.
   - 'புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில் புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்' - பாரதிதாசன்
   - 'ஒருகோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்ட போது, 'ஒரு நூலகம் கட்டுவேன்' என்றார் காந்தி.
   - எந்த வீட்டில் நூலகம் இல்லையோ? அந்த வீட்டில் ஆன்மா இல்லை.
   - நூலகம் இல்லா ஊரை நான் மதிப்பது இல்லை - லெனின்'
   - உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அதுபோல மனப்பயிற்சிக்குப் புத்தக வாசிப்பு - சிக்மண்ட் பிராய்டு.

---

## இயல் ஐந்து

### கற்கண்டு

## இடைச்சொல் – உரிச்சொல்

### பலவுள் தெரிக.

1. வினாப்பொருளில் வரும் இடைச்சொல்
அ) ஆ ஆ) ஆவது இ) உம் **[அ) ஆ]**

2. கீழ்க்கண்டவற்றுள் எதிர்மறை இடைநிலைகள் எது?
அ) கிறு, கின்று ஆ) அ, உ இ) அல், இல் **[இ) அல், இல்]**

3. தற்காலத்தில் ஓகார இடைச்சொல் ---- பொருளில் அதிகமாக வருகின்றது.
அ) அழுத்தப் ஆ) பிரிநிலைப் இ) எதிர்மறைப் **[ஆ) பிரிநிலைப்]**

4. ஏகார இடைச்சொல் எத்தனைப் பொருள்களில் வரும்.
அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு **[அ) ஆறு]**

5. ---- என்பது ஒருமைக்கும் ---- என்பது பன்மைக்கும் உரியன.
அ) அல்ல, அன்று ஆ) அன்று, அல்ல இ) அவை, அன்று **[ஆ) அன்று, அல்ல]**

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

6. தற்காலத்தில் ஏகாரம் ---- பொருளில் மட்டுமே வருகிறது. **தேற்றப்**
7. தாமாகத் தனித்தியங்கும் ஆற்றல் இல்லாத சொற்கள் ----. **இடைச்சொற்கள்**
8. செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுவது -----. **உரிச்சொற்கள்**
9. பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டுவது ----. **இடைநிலை**
10. தல், அம், மை என்பன ----- விகுதிகள். **தொழிற்பெயர்**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## குறுவினா

**1. இடைச்சொல் என்றால் என்ன?**

- தனித்து இயங்கும் ஆற்றல் இன்றி பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்புடையவை இடைச்சொற்களாகும்.

**2. இடைச் சொற்களின் முக்கியத்துவத்தை விளக்குக.**

- பெயர்ச்சொற்கள் வினைச்சொற்களைப் போல் இடைச்சொற்கள் மிகுதியாக இல்லை.
- ஆயினும் இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

**3. இடைச்சொற்களாக வருபவை எவை?**

- வேற்றுமை உருபுகள், பன்மை விகுதிகள், திணை, பால் விகுதிகள், முக்கால இடைநிலைகள், பெயரெச்ச வினையெச்ச விகுதிகள், எதிர்மறை இடைநிலைகள், தொழிற்பெயர் விகுதிகள், வியங்கோள் விகுதிகள், சாரியைகள், உவம உருபுகள், இணைப்பு இடைச் சொற்கள், சொல்லுருபுகள், வினா உருபுகள் ஆகியவை இடைச் சொற்களாக வரும்.

**4. தற்காலத்தில் தமிழில் மிகுதியாகப் பயன்படும் இடைச்சொற்கள் எவை?**

- உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, அம் ஆகிய இடைச் சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**5. உம் - என்னும் இடைச் சொல் என்னென்ன பொருளில் வருகிறது?**

- உம் என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.
- மழைபெய்தும் புழுக்கம் குறையவில்லை (எதிர்மறை உம்மை)

**6. ஓ - என்னும் இடைச்சொல் என்னென்ன பொருளில் வருகிறது?**

- ஓகாரம் என்னும் இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய பொருள்களில் வருகிறது.

**7. தற்காலத்தில் ஓகார இடைச்சொல் என்னென்ன பொருளில் வருகிறது?**

- தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது.
- மேலும் ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை அதுவும் இல்லை போன்ற பொருள்களில் வருகிறது.
- இன்றைக்கு மழை பெய்யுமோ - ஐயம்.

**8. 'ஏ' கார இடைச்சொல் என்னென்ன பொருளில் வரும்? தற்போது என்ன பொருளில் வருகிறது?**

- 'ஏ'கார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும்.
- தற்போது ஏகாரம் தேற்றப் பொருளில் மட்டுமே வருகிறது. (தேற்றம் - அழுத்தம்)
  **எ.கா.** நடந்தே வந்தான்.

**9. 'தான்' என்னும் இடைச்சொல்லை விவரி.**

- தான் என்னும் இடைச்சொல் அழுத்தப்பொருளில் வருகிறது.
- தொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ அதனை முதன்மைப்படுத்துகின்றது.
- ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.
  **எ.கா.** நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**10. 'மட்டும்' என்னும் இடைச்சொல்லை விவரி.**

- மட்டும் என்னும் இடைச்சொல் வரையறைப் பொருளில் வருகிறது.
  **எ.கா.** படிப்பு மட்டும் இருந்தால் போதும்.

**11. 'ஆவது' என்னும் இடைச்சொல் என்னென்ன பொருளில் வருகிறது?**

- ஆவது என்னும் இடைச்சொல் குறைந்த அளவு, அது அல்லது இது, வரிசைப்படுத்தல் எனப் பல பொருள்களில் வருகிறது.
  **எ.கா.** ஐந்து பேராவது வாருங்கள்.

**12. 'கூட' என்னும் இடைச்சொல்லை விவரி.**

- கூட என்னும் இடைச்சொல் குறைந்தபட்சம், முற்று, எச்சம் தழுவிய கூற்று ஆகிய பொருளில் வரும்.
  **எ.கா.** என்னிடம் ஒரு காசு கூட இல்லை.

**13. வினாப்பொருளில் வரும் இடைச்சொல் எது?**

- 'ஆ' என்னும் இடைச்சொல் சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ அச்சொல் வினாவாகிறது.
  **எ.கா.** புகழேந்தி நேற்று உன்னுடனா வந்தான்?

**14. 'ஆம்' என்னும் இடைச் சொல்லை விவரி.**

- ஆம் என்னும் இடைச்சொல் சொல்லின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களில் தகவலாகவும், வதந்தியாகவும் செய்திகளைக் கூறுவதற்குப் பயன்படுகிறது.
  **எ.கா.** உள்ளே வரலாமா (இசைவு)

**15. எத்தனை, எத்துணை என்பதன் பொருள் வேறுபாட்டை விளக்குக.**

- எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்.
- எத்துணை என்பது அளவையும், காலத்தையும் குறிக்கும்.
  **எ.கா.** எத்தனை நூல்கள் வேண்டும்.
  எத்துணை பெரிய மரம்.

**16. உரிச்சொல் என்றால் என்ன?**

- உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருளுடையவை. ஆனால், தனித்து வழங்கப்படுவதில்லை.
- உரிச்சொற்கள் பெயரையும், வினையையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன.
- உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு ஆகிய பொருள்களில் வரும்.

**17. ஒருகுணம் தழுவிய பல உரிச்சொற்கள் யாவை?**

- உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருவதால் இவை ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்களாகும்.
  **எ.கா.** உறுபசி, தவச்சிறிது, நனிநன்று

**18. பல பொருளில் வரும் ஒரு உரிச்சொல்லை விவரி.**

கடி என்னும் உரிச்சொல்,

- கடி மலர் - மணம் மிக்க மலர்
- கடிநகர் - காவல் மிகுந்த நகர்
- கடிவேல் - கூர்மையான வேல்

- எனப் பல பொருளில் வருவதால் கடி என்னும் உரிச்சொல் பலபொருளில் வரும் உரிச்சொல் ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## கற்பவை கற்றபின் (பக்கம்.142)

### 1. பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

அ) பெண்ணடிமை போக வேண்டும்; பெண், கல்வி பெற வேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

ஆ) நமது முன்சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

அ) உம், தான், ஆம், ஆல், உம், ஆன

ஆ) விட, உம், உள்ள, ஆன், இன், கூடிய, கொண்டு.

### 2. உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.

- **உம்** - அண்ணனும் தம்பியும் வந்தார்கள்.
- **ஓ** - மன்னவனும் நீயோ?
- **ஏ** - அவனே சிறந்த வீரன்.
- **தான்** - அவன்தான் மனிதன்
- **மட்டும்** - அவன் மட்டுமன்று நானும் சென்றேன்.
- **ஆவது** - இன்றாவது மழை பெய்யுமா?
- **கூட** - ஒருவர்கூட வரவில்லை
- **ஆ** - அவனா கடைக்குச் சென்றான்
- **ஆம்** - ஊர் கூடியதாம்

### 3. பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.

அ) மணற்கேணியைப் போல் விளங்கும் நூல்தான் உறுதுணையாக இருக்கிறது.

ஆ) பெண்களைப்படிக்க வைக்காத காலத்திலும் பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கும்படியாக நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவராக வந்தார்கள்.

இ) மக்களின் மனத்தில் உலக அறிவுபுக வழிசெய்ய வேண்டும்.

### 4. பொருத்தமாக இணைத்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| அவன் | தான்<br>உம்<br>ஏ<br>ஆ | மனிதன் | அவன்தான் மனிதன்<br>அவனும் மனிதன்<br>அவனே மனிதன்<br>அவனா மனிதன்? |
| இயற்கை | | அழகு | இயற்கைதான் அழகு<br>இயற்கையும் அழகு<br>இயற்கையே அழகு<br>இயற்கையா அழகு? |

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



| | | | |
|---|---|---|---|
| உனக்கு | மட்டும்<br>கூட<br>ஆவது | தெரியுமா? | உனக்கு மட்டும் தெரியுமா?<br>உனக்குக் கூட தெரியுமா?<br>உனக்காவது தெரியுமா? |
| | | தெரியும் | உனக்கு மட்டும் தெரியும்<br>உனக்குக் கூடத் தெரியும் |

| | | | |
|---|---|---|---|
| வீடு, நாடு | உம்<br>ஓ | நமதே | வீடும் நாடும் நமதே<br>வீடோ நாடோ நமதே |
| காற்று, வெளிச்சம் | | தேவை | காற்றும் வெளிச்சமும் தேவை<br>காற்றோ வெளிச்சமோ தேவை |
| அன்பு, அமைதி | | வேண்டும் | அன்பும் அமைதியும் வேண்டும்<br>அன்போ அமைதியோ வேண்டும் |
| கபிலர், பரணர் | | வாருங்கள் | கபிலரும் பரணரும் வாருங்கள்<br>கபிலரோ பரணரோ வாருங்கள் |

## 5. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) **மா**பெரும் பொதுக் கூட்டம் (கடி, மா)

ஆ) **கடி** விடுதும் (உறு, கடி)

இ) **வாள்** நுதல் (வாள், தவ)

ஈ) **சாலச்**சிறந்தது. (சால, மழ)

உ) **கடி** மனை (கடி, தட)

## சிந்தனை வினா

**1. ''தான்'' என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?**

- தான் என்னும் இடைச்சொல் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.
- **எ.கா.** நிர்மலாதான் நேற்று பாடினாள்.
  நிர்மலா நேற்றுதான் பாடினாள்.
  நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.
  நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.

**2. அவர்களுக்குப் பரிசு தருவேன் - இத்தொடரில் ''ஆ'' என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.**

- அவர்களுக்கா பரிசு தருவேன்?
- அவர்களுக்குப் பரிசா தருவேன்?
- அவர்களுக்குப் பரிசு தருவேனா?

**3. செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம்பெறுகின்றன?**

- பெயர், வினைச்சொற்களைச் சார்ந்து பொருள் உணர்த்தும், இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களில் வரும்.
- சால, உறு, தவ, நனி, கூர், கழி ஆகிய உரிச்சொற்கள் மிகுதிப் பொருளை உணர்த்தும்.
- சால மிகுத்துப் பெயின் - குறள் . 475
- உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் - புறம்

**4. தற்காலத் தமிழ்ப் பண்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.**

- மழ, குழ, மா, தவ, உவப்பு, உறு, நனி, யாணர் ஆகியவை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**5. 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக.**

- இங்கே நிற்காதே.
- எதையும் செய்யாமல் இருக்காதே
- தனியாகப் போகாதே.

**6. இடைச்சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.**

**அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?**

வீட்டிற்குச் செல்ல இவ்வளவு பீடிகை தேவையா?

**ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.**

இத்தகைய சூழ்நிலையும் மாறினால்தான் நன்மை.

**இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.**

வானூர்தியைச் செலுத்துதலும் உலகையும் கடலையும் அளத்தலும் போன்ற எத்தகைய செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

**ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?**

சமைப்பதைத் தாழ்வு என்று எண்ணக் கூடாது.

**உ) பூக்காமலே சில மரங்களில் காய்ப்பதுண்டு.**

சில மரங்கள் பூப்பதில்லை; காய் மட்டுமே காய்க்கும்.

**ஊ) வாளால் வெட்டினான்.**

வாளால்தான் வெட்டினான்.






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

1. அகமாயப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் - உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்

அ) பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) பூவனங்கள் என்று எதனைக் குறிப்பிடுகிறார்?
இ) 'நிகரிலா' இலக்கணக்குறிப்பு தருக.

விடை:
அ) அகமாய்ப்.......
அமைந்தவைச்........
ஆ) காப்பியங்கள்
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2. ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் - நீதி
ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்
மானிட மேன்மையைச் சாதித்திடக் - குறள்
மட்டுமே போதுமே ஓதிநட......

அ) பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
ஆ) பாடலில் வந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
இ) இப்பாடலில் கூறப்பட்டுள்ள இலக்கியம் எது?

விடை:
அ) ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் - நீதி
மானிட மேன்மையைச் சாதித்திடக் - குறள்
ஆ) ஏனிவ்.......
ஏந்திய......
இ) திருக்குறள்

3. எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்ந்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே

அ) பாடலில் இடம்பெற்றுள்ள மோனையை எடுத்தெழுதுக.
ஆ) ஏந்தி - இலக்கணக் குறிப்பு தருக.
இ) 'தீது' - பொருள் தருக.

விடை:
அ) எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஆ) வினையெச்சம்
இ) தீமை, குற்றம், துன்பம்

4. விரலை மடக்கியவன் இசையில்லை - எழில்
வீணையில் என்று சொல்வதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்

அ) விட்டுவிட்டு - இலக்கணக்குறிப்பு தருக.
ஆ) இப்பாடல் வரிகள் உணர்த்தும் அணி எது?
இ) எதை விட்டுவிட வேண்டும்?

விடை:
அ) அடுக்குத்தொடர்
ஆ) உவமையணி
இ) குறைகள் சொல்வதை

5. தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்

அ) பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுது.
ஆ) முத்தமிழ் - விரித்து எழுது.
இ) முத்திக்கனி - இலக்கணக்குறிப்பு தருக.

விடை:
அ) முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
ஆ) மூன்று + தமிழ் - இயல், இசை, நாடகம்
இ) உருவகம்

6. குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்
வந்துஎன்றும் சித்தாமணியாய் இருந்த உனைச்
சிந்துஎன்ற சொல்லிய நாச்சிந்துமே.

அ) பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுது.
ஆ) சிந்தாமணி - இலக்கணக்குறிப்பு தருக.
இ) சிந்தாமணி என்னும் சொல் உணர்த்தும் காப்பியம் எது?

விடை:
அ) குறம் என்றும்........
உறவு என்று........
வந்து என்றும்........
சிந்து என்று........
ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) சீவகசிந்தாமணி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# விண்ணப்பம் எழுதுதல்

## 1. கணினி இயக்குபவர் பணிக்கு விண்ணப்பம்

**அனுப்புநர்**

செ. கலாவதி,
எண்.51, வடக்குரதவீதி,
திருவில்லிபுத்தூர் - 626125.

**பெறுநர்**

டால்பின் கணினி நிறுவனம்,
239, கீழப்பட்டித்தெரு,
திருவில்லிபுத்தூர் - 626125.

**மதிப்பிற்குரிய நிறுவனர் அவர்களுக்கு,**

வணக்கம், தங்கள் நிறுவனத்திற்குக் கணினி இயக்குபவர் பணிக்குத் தகுதி வாய்ந்தவர்கள் தேவையென விளம்பரம் கொடுத்திருந்தீர்கள். நான் தட்டச்சு இளநிலையும் கணினியில் எம்.எஸ்.ஆபீசும் முடித்துள்ளேன். அத்துடன் பத்தாம் வகுப்பும் தேர்ச்சி பெற்றுள்ளேன். எனவே எனக்கு அந்த வேலை வாய்ப்பினைக் கொடுத்தால் கடமை தவறாமல் வேலை செய்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

நன்றி!

தேதி : 06.08.2020, தங்கள் உண்மையுள்ள,
இடம் : திருவில்லிபுத்தூர் செ.கலாவதி.

**உறைமேல் முகவரி**

**பெறுநர்** அஞ்சல் தலை

டால்பின் கணினி நிறுவனம்,
239, கீழப்பட்டித்தெரு,
திருவில்லிபுத்தூர் - 626125.

**பின் இணைப்பு**

**தன் விவரக்குறிப்பு**

1. பெயர் : செ.கலாவதி
2. பிறந்தநாள் மற்றும் வயது : 20.04.1995
3. வயது : 21
4. பாலினம் : பெண்
5. தந்தையின் பெயர் : வெ.செழியன்
6. முகவரி : 51, வடக்கு ரதவீதி, திருவில்லிபுத்தூர்.
7. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் : 350 / 500
8. தாய்மொழி : தமிழ்
9. பயின்றமொழிகள் : தமிழ், ஆங்கிலம்
10. தட்டச்சு : ஆங்கிலம்
11. கணினி : எம்.எஸ்.ஆபீஸ்

மேற்கூறிய விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகின்றேன்.

**(செ. கலாவதி)**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



### 2. பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம்

பூஞ்சோலை நகர்,
கிருஷ்ணகிரி.
13.07.2020.

அன்புள்ள கயல்விழி,

நலம். நலம் அறிய ஆவல்.

உன் வீட்டில் அம்மா, அப்பா, அண்ணன் ஆகியோரின் நலம் அறிய ஆவல். நீ சென்ற ஆண்டு பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றதைச் செய்தித்தாள் மூலம் அறிந்து மகிழ்ந்தேன். உன்னுடைய விடாமுயற்சியும், உழைப்பும் உனக்கு இந்தப் பெருமையைத் தேடித்தந்துள்ளன.

அரசுப்பள்ளி மாணவர்களுக்கு நீ ஒரு நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்கிறாய். உன் தாய் தந்தையருக்கும், ஆசிரியருக்கும் பெருமை சேர்த்துள்ளாய். 'மாவட்ட ஆட்சியராகி ஏழை மக்களின் உயர்விற்குப் பாடுபடுவேன்' என்று நீ தொலைக்காட்சியில் பேட்டியளித்ததைக் காணும்போது மிகவும் பெருமையாக இருந்தது. உனது விருப்பப்படி மாவட்ட ஆட்சியராக வரவேண்டுமென்று மனமார வாழ்த்துகிறேன்.

அன்புத் தோழி,
த. வசந்தி

**உறைமேல் முகவரி**

**பெறுநர்** அஞ்சல் தலை
சு. கயல்விழி,
10, பாரதிதாசன் தெரு,
மதுரை.

### 3. வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் தோழியைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

பூஞ்சோலை நகர்,
கிருஷ்ணகிரி,
13.07.2020.

அன்புள்ள கயல்விழி,

நலம். நலம் அறிய ஆவல்.

உன் வீட்டில் அம்மா, அப்பா, அண்ணன் ஆகியோரின் நலம் அறிய ஆவல். சென்ற ஆண்டு வஞ்சியூர் கிராமத்தில் ஒரு சிறுவன் வெள்ளத்தில் அடித்துச் சென்றபோது நாங்கள் எல்லோரும் செய்வதறியாது திகைத்தோம். ஆனால் நீயோ சற்றும் சிந்திக்காமல் நீரில் அடித்துச் சென்ற சிறுவனை ஆற்றில் குதித்துக் காப்பாற்றினாய். உனது வீரச்செயலை நமது ஊர் மக்களும் புகழ்ந்து போற்றினர்.

தற்போது அச்செயலுக்காக உனக்குத் தமிழக அரசு அண்ணா விருது வழங்கிக் கௌரவித்துள்ளதைத் தொலைக்காட்சியில் கண்டேன். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். நீ மேலும் வீரமும் விவேகமும் கொண்டு பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வளர மனமார வாழ்த்துகிறேன்.

அன்புத்தோழி,
த. வசந்தி.

**உறைமேல் முகவரி**

**பெறுநர்** அஞ்சல் தலை
சு. கயல்விழி,
10, பாரதிதாசன் தெரு,
மதுரை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# பொதுக் கட்டுரைகள்

## 1. கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.

**முன்னுரை:**

ஒருவன் வாழ்வை வளப்படுத்தி அவனைச் சமுதாயத்தில் சிறந்த மேதையாக உருவாக்குவது கல்வி. வாழ்நாள் முழுவதும் தேட வேண்டிய கல்விச் செல்வத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**எங்கும் சிறப்பு:**

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு வந்து சேரும். ஊரும், நாடும், உலகமும் அவர்களுக்கு எல்லாச் சிறப்புகளையும் தந்து வரவேற்கும்; இந்த உலகம் அவர்களை வாழ்த்தும்; போற்றிப் புகழும்; இவையாவும் அவர்கள் பெற்ற கல்வியினால் தான் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

**கற்றது கைம்மண்ணளவு:**

நாம் கற்றது கைம்மண்ணளவு தான், கல்லாதது உலகளவு என்று கூறப்படுகிறது. ஏனென்றால் பரந்து விரிந்து, ஆழமாக உள்ள கடலைப் போலவே கல்வியின் தன்மையும் உள்ளது.

**கல்வியழகே கலையழகு:**

மாட மாளிகைகள், வயல்வெளிகள், தங்கஆபரணங்கள், அசையும், அசையாச் சொத்துகள் எவ்வளவு இருந்தாலும் அவற்றால் ஒருவனுக்கு அழகு வந்துவிடாது. அவன் பெற்ற கல்வியால்தான் அவனுக்கு அழகு உண்டாகும்.

**தொடர்கள்:**

''கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'', ''கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி'', ''கல்வி கரையில கற்பவர் நாள்சில'', ''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'', ''கல்வியழகே அழகு'' என்பன கல்வியின் சிறப்பை உணர்த்தும் சிறப்புத் தொடர்கள் ஆகும்.

**முடிவுரை:**

கல்வி என்னும் அணியை நாம் அணிந்து கொள்வோம். பிறருக்கும் அணிவிப்போம். கல்வி என்ற அணிகலன் நமக்கு என்றும் அழகு தருகின்ற அணிகலனாக விளங்கட்டும்!

## 2. நான் விரும்பும் கவிஞர் 'பாரதியார்'

**முன்னுரை:**

நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் தமது, உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுத்த விடுதலைப் போராட்ட வீரர்கள் பலர், அவர்களுள் தனது உணர்ச்சி மிக்க கவிதையால், தமிழகத்தைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தவரே நான் விரும்பும் கவிஞரான பாரதியார் ஆவார்.

**தோற்றம்:**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் சின்னசாமி, இலக்குமி இணையருக்கு மகனாக 11.12.1882 ஆம் ஆண்டு பாரதி பிறந்தார். இளமையிலேயே பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து 'பாரதி' என்னும் பட்டம் பெற்றார்.

**நாட்டு விடுதலை:**

மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும், சிறந்த இகழாசிரியராகவும் இருந்த பாரதி ஆங்கிலேயரின் அடிமைப்பிடியிலிருந்து நாடு விடுதலை பெற வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். தமது பாடலால் தூங்கிய மக்களைத் தட்டி எழுப்பி, சாதி மதப்பாகுபாடின்றி அனைவரையும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தார்.

**தேசியக்கவி:**

பாரதியாரின் துடிப்புள்ள கவிதைகள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட மக்களைத் தட்டி எழுப்பியது அனைவருமே பாரதியின் கவித்தீயில் எரிந்தனர். இதனால் அனைவராலும் 'தேசியக்கவி' எனப் பாராட்டப்பட்டார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**சமுதாயக் காவலர்:**

நாட்டின் விடுதலையோடு சமூக விடுதலைக்கும் குரல் கொடுத்தவர் பாரதி.

**''குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'' என்றும்,**

**''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்''**

என்றும் பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்தவர்

இவை போன்ற எண்ணற்ற கவிதைகள் பாரதியார் சமூகத்தின் மீதும், மொழியின் மீதும் கொண்ட பற்றினை உணர்த்துகின்றன.

**முடிவுரை:**

''பாரதநாடு பார்க்கெலாம் திலகம்'' என்று நாட்டின் பெருமையை விண்ணை முட்டுமளவு முழக்கமிட்டவர் பாரதி. அவர் புகழ் காப்பதே நமது தலையாய கடமையாகும்.

## 3. பெண்கல்வி

**முன்னுரை:**

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி வையம் தழைக்குமாம்'' என்ற பாரதியின் முழக்கமே, பெண் விடுதலைக்கு வித்திட்டது.

**பெண்கல்வி:**

''கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்; அங்குப் புல் விளைந்திடலாம். நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை'' என்று பெண்கல்விக்காக முழக்கமிட்டான் பாரதிதாசன், பாரதியார், திரு.வி.க., பெரியார் போன்றோர் பெண்கல்வி வளம் பெறப் பாடுபட்டனர். ஒளி படைத்த கண்களைப் படைத்தவர்களாய், உறுதி படைத்த மனத்தினராய், பெண்கள் இன்று புதிய வரலாறு படைத்து வருகிறார்கள். பல நாடுகளின் அதிபர்களாக மாநிலங்களின் முதல்வர்களாகப் பற்பல குழுமங்களின் தலைமைப் பொறுப்பிலே வியத்தகு சாதனை புரிந்து வருகின்றனர் இன்றைய பெண்கள்.

**இன்றைய பெண்கள் நிலை:**

'எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி' என்ற பாரதியின் கனவை நனவாக்கி இன்றைய மகளிர் பல்துறை வித்தகர்களாய்ச் சாதனை படைத்துப் புகழ் பெற்று விளங்குகின்றனர்.

**முடிவுரை:**

''கல்வி சிறந்த தமிழ்நாடு'' என்று பாடிய புலவனின் விருப்பத்திற்கேற்ப இன்று தமிழ்நாடு பெண்கல்வியிலும் வியத்தகு சாதனைப் படைத்து வருகிறது.

## 4. தேசிய ஒருமைப்பாடு

**முன்னுரை:**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற தாரக மந்திரத்தை நாம் கடைப்பிடித்ததனால் இன்று விடுதலைக் காற்றைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்.

**விடுதலைப் போராட்டம்:**

இந்தியா ஆங்கிலேயரின் ஆட்சி முறையிலிருந்து விடுதலை பெற நாம் ஒன்றுபட்டு உழைத்தோம். நமது ஒற்றுமையே அவர்களை நம் நாட்டிலிருந்து விரட்டியது. ''நாம் அனைவரும் இந்தியர்கள்'' என்ற உணர்வுடன் செயல்பட்டதால் தான் இவ்விடுதலை சாத்தியமாயிற்று. சுதந்திர இந்தியாவில் பாரத மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே அனைத்துக் கவிஞர்களின் ஒருமித்த கருத்தாகும்.

**வளர்க்கும் வழிகள்:**

மக்களிடையே ஒற்றுமையும் வளர்ச்சியும் அமைய வேண்டுமானால் நாட்டுத் தலைவர்கள் தன்னலம் துறந்து பிறர் நலம் பேணும் தகைமை பெற்றிருத்தல் வேண்டும். சுய இலாபத்தோடு செயல்படும் அரசியல் தலைவர்களையும், தீவிரவாத இயக்கங்களையும் மக்கள் புறக்கணிக்க வேண்டும். மாணவர்களின் மனதில் நாட்டுப்பற்றை விதைத்தால் நாளைய இந்தியா வளமான இந்தியாவாக உலகில் வளமை பெற்றோங்கும்.

**முடிவுரை:**

உலக நாடுகளில் நமது நாடு வல்லரசாக எல்லாத் துறைகளிலும் சிறப்புற்றோங்க நாம் ஒன்றுபட்டு உழைப்போம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இலக்கிய நயம் பாராட்டல்

**முன்னுரை**

இலக்கணச் செங்கோல்
யாப்பு சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்களோடு
பவனி வருவன இலக்கியங்கள்

செய்யுள் கற்போருக்கும், கேட்போருக்கும் இனிமை தருவதற்குக் காரணம் செய்யுள்களில் அமைந்துள்ள சந்தம், சுவை, அணி, தொடை, முதலிய இலக்கிய நயங்களே!

அவர்கள் இயற்றியுள்ள இப்பாடலில் அமைந்துள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.
(கோடிட்ட இடத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆசிரியர் பெயரை எழுதவும்)

**முன்னுரை**

- ✶ ஆசிரியர் குறிப்பு
- ✶ திரண்ட கருத்து
- ✶ மையக்கருத்து
- ✶ சொல் நயம்
- ✶ பொருள் நயம்
- ✶ தொடை நயம்
  1) மோனை
  2) எதுகை
  3) இயைபு
  4) அளபெடை
  5) முரண்
- ✶ அணிநயம்
- ✶ சுவை நயம்
- ✶ சந்த நயம்
- ✶ கற்பனை நயம்
- ✶ தலைப்பு
- ✶ முடிவுரை

**ஆசிரியர் குறிப்பு:**

**பாரதியார்**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | சுப்பிரமணிய பாரதியார் |
| **பெற்றோர்** | : | சின்னச்சாமி இலக்குமி அம்மையார் |
| **ஊர்** | : | தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம் |
| **பெயர்க்காரணம்** | : | இளமையிலேயே கவிபாடும் திறன் பெற்றதால் ‘பாரதி’ என அழைக்கப்பட்டார். |
| **சிறப்பு** | : | பெண் விடுதலைக்கும், நாட்டு விடுதலைக்கும் அரும்பாடுபட்டார். |
| **இயற்றிய நூல்கள்** | : | பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், தேசிய கீதம் முதலியன. |
| **ஆண்டு** | : | 1882 - 1921 |

**திரண்ட கருத்து:**

பாடலைக் குறைந்தது 7 முறையாவது படித்துப் பார்க்கவும். பாடலின் முழுப்பொருளையும் (பொழிப்புரை) எழுத வேண்டும். பாடலில் உள்ள கடினமான சொற்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். கவிஞர் பாடல்களில் வெளிப்படுத்தும் மேலோட்டமான கருத்துகளை எழுத வேண்டும். பத்தி பத்தியாக எழுத வேண்டும்.

**மையக் கருத்து**

பாடலின் கருத்தைப் புரிந்து (மையக்கருவினைப் புரிந்து) ஓரிரு வரிகளில் பாடலின் சிறப்பை, பெருமிதத்தை, அவலத்தை, நகையை, தாழ்வை முன்னிறுத்திப் பாடப்பட்டுள்ளதை எழுத வேண்டும்.

**சொல் நயம்**

பாடலில் உள்ள கலைச்சொற்களைக் கண்டறியவும், அச்சொற்களை எடுத்தெழுதி அதன் பொருளை எழுதுதல் வேண்டும். கலைச்சொற்களை எழுதிய பின் அடைமொழிச் சொற்களைக் கண்டறிதல் வேண்டும் அடைமொழிச்சொல் என்பது முன்ஒட்டுச் சொல் ஆகும்.

**எ.கா.**

குயில் - கருங்குயில்

இங்குக் ‘கருங்குயில்’ என்பதில் உள்ள ‘கருங்’ என்பது குயிலின் நிறத்தினை மேலும் உணர்த்த வந்த முன்ஒட்டுச் சொல் என்பர்.

மேலும், பாடலின் அளபெடைச் சொற்கள் அடுக்குத்தொடர்ச் சொற்கள், இரட்டைக்கிளவி போன்றவை காணப்பட்டாலும் அவ்வவ் தலைப்பிட்டு எடுத்து எழுதுதல் வேண்டும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**பொருள் நயம்**

செய்யுளின் முழுப்பொருளையும் நன்றாக அறிதல் வேண்டும். கவிஞர் எக்கருத்தைப் பற்றிப் பாடியுள்ளார் என்பதை அறிதல் வேண்டும். பாடலில் கூறியுள்ள மையக்கருத்தை எப்படி நயம்படக் கூறியுள்ளார் என்பதைச் சிறுசிறு வாக்கியங்களாக எழுத வேண்டும்.

**தொடை நயம்**

'தொடுக்கப்படுவது தொடை' எனப்படும்.

தொடை நயங்களான,

- மோனை
- எதுகை
- இயைபு
- முரண்
- அளபெடை

ஆகிய 5 தலைப்புகளில் ஏற்புடைய நயங்களைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். தொடை பற்றிய பழமொழிகளை மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும்.

''தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்''
- பழமொழி

''தொடை நிரம்பிய தோம்அறு மாக்காதை'' - கம்பர்

**மோனைத்தொடை**

''தலை எழுத்து ஒப்பது மோனை''
- தொல்காப்பியம்

''எழுவா எழுத்து ஒன்றின் மோனை''
- யாப்பருங்கலக்காரிகை

''மோனை முத்தமிழ் மும்மதம் பொழி
யானை முன்வந்து எதிர்த்தவன் யாரடா?
- ஒட்டக்கூத்தர்

பாடலின் அடிகளிலோ, அல்லது சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது ''மோனை''யாகும்.

அடிகளில் உள்ள சீர்களில் முதல் எழுத்தோ, சீரோ ஒன்றி வருவது ''சீர் மோனை'' எனப்படும்.

அடிதோறும் முதல் எழுத்தோ, சீரோ ஒன்றி வருவது ''அடிமோனை'' எனப்படும்.

**எதுகை நயம்**

''தலை எழுத்து ஒப்பது மோனை
அஃது ஒழிந்தவற்றின் எதுகை யாகும்''
- தொல்காப்பியம்

''எது கை, கொடுக்காவிடினும்
எதுகை கைக்கொடுக்கும்'' - பழமொழி

பாடல்களில் உள்ள சீர்களிலோ, அடிகளிலோ முதல் எழுத்து அளவு ஒத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது ''எதுகை'' எனப்படும்.

அடிகளில் உள்ள சீர்களில் முதல் எழுத்து ஒத்து நின்று இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ''சீர் எதுகை'' எனப்படும்.

அடிதோறும் முதல்எழுத்து அளவு ஒத்து நின்று இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தால் அஃது ''அடி எதுகை'' எனப்படும்.

**இயைபுத்தொடை**

''இறுவா ஒன்றல் இயைபின் யாப்பே''
- தொல்காப்பியம்

செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ, கடைசி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வரத்தொடுப்பது இயைபாகும்''

**முரண்தொடை**

''மொழியினும் பொருளினும் முரணுதலே முரண்''
- தொல்காப்பியம்

செய்யுளின் அடியிலோ, சீரிலோ சொல்லோ பொருளோ முரண்பட வருவது முரண் தொடையாகும்.

**அளபெடைத் தொடை**

''அளபெடுத் தொன்றும் அளபெடைத் தொடையே''
- தொல்காப்பிம்

செய்யுளில் உள்ள சீர்களில் காணப்படும் உயிரளபெடை, ஒற்றளபெடைச் சொற்களை எடுத்து எழுத வேண்டும்.

**அணி நயம்**

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். சொல்லாலும் பொருளாலும் அழகுபடப் பாடப் பெறுவது அணியாகும். அது, சொல்லணி, பொருளணி என இரண்டு வகைப்படும். கவிதையில் பயின்று வந்துள்ள அணிகளை அறிந்து எழுதுதல் வேண்டும்.

**1) உவமையணி**

''பண்பும் தொழிலும் பயனும் என்ற இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செய்வது உவமை''
- தண்டியலங்காரம் - 31



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் வந்து போல, போன்ற உவம உருபுகள் வெளிபட்டு நிற்பது 'உவமையணி' எனப்படும். பாடல்களில் போல, போன்ற, அன்ன, இது போன்ற உவம உருபுகள் வெளிப்பட்டு நின்றால் அப்பாடலில் 'உவமையணி' இடம் பெற்றுள்ளது என்று எழுதவும்.

**2) எடுத்துக்காட்டு உவமையணி**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் வந்து போல, போன்ற உவம உருபுகள் மறைந்து வந்தால் அஃது 'எடுத்துக்காட்டு உவமையணி' எனப்படும்.

**3) உருவக அணி**

உவமை வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாத வகையில் பொருளைச் சிறப்பித்துச் சொல்வது உருவக அணி எனப்படும்.

''உமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்

- தண்டி-34

**எ.கா**

குளக்கரை சென்றேன் - பச்சை
இலைத் தட்டில் சிந்தும் பால்போல

இங்குத் தட்டுப்போன்ற இலை எனக் குறிப்பிடாமல் இலையைத் தட்டாக உருவகப்படுத்தியுள்ளார் புலவர்.

**குறிப்பு**

உவமை பின்னும், எந்தப் பொருளைப் பற்றிச் சொல்கிறோமோ (உவமேயம்) அது முன்னும் வந்தால் அது உருவகமாகும்.

மலர்க்கை - உவமை
கைம்மலர்- உருவகம்

**4) வேற்றுமையணி**

பாடலில், முதலில் இருபொருளுக்கு உள்ள ஒப்புமையைக் கூறிப் பின்பு ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது 'வேற்றுமையணி' எனப்படும்.

**எ.கா**

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

தீயினால் சுடுவதும் நாவினால் கொடுஞ்சொல் பேசுவதும் துன்பம் தரும். இவ்வாறு அதன் ஒற்றுமையைக் கூறிப் பின்பு தீயினால் சுடுவதை 'ஆறிவிடும் புண்' என்றும், நாவினால் கொடுஞ்சொல் கூறுவதை 'ஆறாத வடு' என்றும் கூறியுள்ளதால் இப்பாடல் 'வேற்றுமையணி' ஆகும்.

**5) சொற்பொருள் பின்வருநிலயணி**

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே திரும்பத் திரும்பத் தந்தால் அது 'சொற்பொருள் பின்வருநிலையணி' எனப்படும்.

**எ.கா.**

கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்

இப்பாடலில் 'ஏறிய' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து, 'பொருந்திய' என்னும் ஒரே பொருளைத் தந்ததால் இப்பாடலில் 'சொற்பொருள் பின்வரு நிலையணி' இடம் பெற்றுள்ளது.

**6) உயர்வு நவிற்சியணி**

ஒரு பொருளின் உயர்வை, உயர்வான ஒரு பொருளோடு உயர்த்தி அழகுபடக் கூறுவது 'உயர்வு நவிற்சியணி' ஆகும்.

**எ.கா**

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

தமிழ்நாட்டின் சிறப்பை மேலும் அழகுபடுத்த அதைவிடச் சிறப்பான வானத்தோடு உயர்வுபடுத்திக் கூறியுள்ளதால் இஃது 'உயர்வு நவிற்சியணி' ஆகும்.

**குறிப்பு**

பாடலில் ஏதாவது ஒரு பொருளை மற்ற பொருளோடு சேர்த்து உயர்வுபடுத்திக் கூறப்பட்டுள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

**7) இயல்பு நவிற்சியணி**

உள்ளதை உள்ளவாறு அழகுபடப் பொருள் தருமாறு கூறுவது 'இயல்பு நவிற்சியணி' ஆகும்.

**எ.கா**

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

இப்பாடலில் முயற்சி இருந்தால், எதையும் அடையலாம் முயற்சி இல்லையென்றால் துன்பம் வந்து சேரும் என ஆற்றொழுக்காய்ப் பொருள் தருவதால் இப்பாடல் 'இயல்பு நவிற்சியணி' வகையைச் சாரந்தது.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**குறிப்பு**

கொடுக்கப்பட்டுள்ள பாடலில் உள்ள வரிகள் ஆற்றொழுக்காய்ப் பொருள் தர வேண்டும். முதல் அடியில் இருந்து இறுதி அடி வரை ஒரே கருத்தைக் கொண்டு செல்ல வேண்டும்.

**குறிப்பு**

அணிநயம் இல்லையென்றாலோ, கண்டறிய முடியவில்லை என்றாலோ 'அணிநயம்' என்று தலைப்பிட்டு இப்பாடலில் இயல்பு நவிற்சியணி இடம் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டு இயல்பு நவிற்சியணிக்கான விளக்கத்தை எழுத வேண்டும்.

**சந்த நயம்**

'சந்தம் தமிழுக்குச் சொந்தம்'

இப்பாடலை ஏற்ற இசைக் கருவியுடன் பாடினால் பாடுவோருக்கும் கேட்போருக்கும் மிகுந்த இன்பத்தைத் தரும் விதத்தில் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார்.

என்று குறிப்பிட்டு எழுத வேண்டும். சந்தம் என்பது ஓசையாகும். பாடல் என்ன பா வகையைச் சார்ந்தது எனக் கண்டுபிடித்து அதற்குரிய ஓசையை எழுத வேண்டும்.

**1. வெண்பா**

இறுதி அடியில் மூன்று சீர்களைப் பெற்றுவரும். மற்றைய அடிகள் நான்கு சீர்களைப் பெற வேண்டும்.

------ ------ ------ ------
------ ------ ------ ------
------ ------ ------ ------
------ ------ ------

**2. ஆசிரியப்பா**

முதலடியும் இறுதி அடியும் நான்கு சீர்களைப் பெற்று வருதல் வேண்டும். இடையடிகளைக் கணக்கில் கொள்ள வேண்டாம்.

------ ------ ------ ------
------ ------ ------ ------
------ ------ ------ ------
------ ------ ------ ------

**3. ஆசிரிய விருத்தம்**

- ❖ குறைந்த அளவு நான்கு அடிகள் பெற்று வரும்.
- ❖ ஐந்து சீர்களுக்கு மேல் இருக்க வேண்டும்.
- ❖ மறியடி பெற்றும் பெறாமலும் வரும்.
- ❖ எல்லா அடிகளிலும், அல்லது முதல் மூன்று அடிகளிலும் ஒத்த எதுகையைப் பெற்று வரும்.

**4. கலி விருத்தம்**

- ❖ நான்கு அடிகளைப் பெற்று வரும்.
- ❖ எல்லா அடிகளிலும் ஒத்த சீர் இருக்க வேண்டும்.

முதலடியிலுள்ள நான்கு சீர்கள் எந்த அசையமைப்பில் வந்ததோ அதே அசையமைப்பைப் பின்வரும் மூன்று அடிகளிலும் உள்ள சீர்கள் பெற்று வருவது கலிவிருத்தமாகும்.

**5. கலித்துறை**

- ❖ ஓர் அடியில் ஐந்து சீர்களைப் பெற்றிருக்க வேண்டும்.
- ❖ முதல் நான்கு சீர்கள் ஈரசையாகவும், ஈற்றுச் சீரின் ஈற்றசை நேரிலும் முடிதல் வேண்டும்.
- ❖ நான்கு அடிகளைக் கொண்டிருக்கும்.

------ ------ ------ ------
------ ------ ------ ------
------ ------ ------ ------
------ ------ ------ ------

**6. கட்டளைக் கலித்துறை**

- ❖ முதல்சீர் நேரசையில் ஆரம்பித்தால், மெய்யெழுத்துகளை நீக்கினால் பதினாறு எழுத்துகள் ஒரு அடியில் வர வேண்டும்.
- ❖ முதல்சீர் நிரையசையில் ஆரம்பித்தால் மெய்யெழுத்துகளை நீக்கிய பிறகு பதினேழு எழுத்துகள் வர வேண்டும்.
- ❖ நான்கு அடிகள் பெற்று வரும்.

**7. சிந்துப்பா**

- ❖ தனிச்சொல் பெற்று வரும்.
- ❖ தனிச்சொல்லை நீக்கினால் முதலடியில் எத்தனை சீர் இருந்ததோ அதே எண்ணிக்கையில் அடுத்துவரும் அடிகளில் சீர்கள் அமைதல் வேண்டும். வினாக்கள் பெரும்பாலும் ஆசிரியவிருத்தம், சிந்துப்பா ஆகியவற்றிலே அமையும்.

**ஓசைகள்**

வெண்பா - செப்பலோசை
ஆசிரியப்பா - அகவலோசை
கலிப்பா - துள்ளலோசை
வஞ்சிப்பா - தூங்கலோசை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



சந்தம் என்பது இசைநயத்தால் பாடலைப் படிப்போர் மனதில் இசைக்கச் செய்வதாகும். அவ்வகையில் எதுகை, மேனை, இயைபு, முரண் (இவற்றுள் வந்துள்ள நயங்களின் பெயரை மட்டும் குறிப்பிடவும்) ஆகிய சொல்லமைப்புகளைப் பயன்படுத்தி இசைக்கச் செய்துள்ளார் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

'சொல்வண்ணத்தாலே பாடல் வனப்புறும்' என்பதால் பாட்டில் கலந்த பல்வகை வண்ணத்தால் படிப்போரை மகிழ்விக்கிறது இக்கவிதை.

**வண்ணத்தைக் கண்டறியும் முறை**

1. வல்லிசை வண்ணம் - வல்லின எழுத்து மட்டும் வருவது
2. மெல்லிசை வண்ணம் - மெல்லின எழுத்து மட்டும் வருவது
3. குறுஞ்சீர் வண்ணம் - குறிலெழுத்து மட்டும் வருவது
4. நெடுஞ்சீர் வண்ணம் - நெடிலெழுத்து மட்டும் வருவது
5. சித்திர வண்ணம் - குறில் நெடில் இரண்டுமே கலந்துவருவது
6. ஏந்தல் வண்ணம் - ஒரே சொல் பலமுறை பயின்று வருவது

**சுவை நயம்**

நகை, அவலம், இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எட்டுச் சுவைகளும் இலக்கியங்களில் பயின்று வரும்.

**சுவைகளைக் கண்டுபிடித்தல்**

1. **நகை**
   - ❖ பிறரை எள்ளி நகையாடுதல்
   - ❖ வலிமையிருந்தும் வலிமையறியாமை
   - ❖ ஆண்-பெண் மாறுபாடு
   - ❖ பொய்யாகக் கூறுவதையும் மெய்யாக உணர்தல்.

   ஆகிய இந்நான்கு இடங்களில் நகைச்சுவை நிகழும்.

2. **அவலம் (அழுகை, சோகம்)**
   - ❖ பிறர் தன்னை எளியன் ஆக்குதல்.
   - ❖ பொருளை இழப்பது.
   - ❖ தன்னிலை மாறுபடுதல் (செல்வன்-வறியவன்)
   - ❖ வறுமைப்பட்டிருத்தல்

3. **இளிவரல் (கழிவிரக்கம்)**
   - ❖ மூப்படைதல்
   - ❖ நோயால் வாடுதல்
   - ❖ சோகம்
   - ❖ மென்மை

4. **மருட்கை (வியப்பு)**
   - ❖ எவ்விடத்தும் தோன்றாத பொருளைப் பற்றிப் பாடுதல்
   - ❖ நுண்ணியன கண்டு வியத்தல்.
   - ❖ மலை, யானை போன்ற பெரிய பொருட்களைக் கண்டு வியத்தல்.
   - ❖ ஒன்றன் பரிமாணத்தைக் கொண்டு வியத்தல்.

5. **அச்சம் (பயம்)**
   - ❖ விலங்கினால் ஏற்படுவது
   - ❖ தெய்வப்பயம்
   - ❖ திருடர்களால் ஏற்படுவது
   - ❖ அரசரால் ஏற்படும் அச்சம்

6. **வெகுளி (சினம்)**
   - ❖ அங்கத்தை அறுத்தல்
   - ❖ கீழோரை நலிதல்
   - ❖ பிறரைத் திட்டுதலும், அழித்தலும்
   - ❖ கொலை போன்ற துன்பம் செய்தல்.

7. **பெருமிதம் (வீரம்)**
   - ❖ கல்வியால் பெருமையடைதல்
   - ❖ வீரச்செயலைப் பாடுதல்
   - ❖ புகழைப்பற்றிப் பாடுதல்
   - ❖ கொடையைப் பற்றிப் பாடுதல்

8. **உவகை (இன்பம்)**
   - ❖ செல்வச் சிறப்பு
   - ❖ காண்டலும், கேட்டலுமாகிய புலனின்ப உணர்வு.
   - ❖ ஆண்-பெண் கூடுதல்.

**எண்வகை மெய்ப்பாடு**

**நகை** - சிரிப்பு (இளமை, அறிவின்மை, மடமை இகழ்தல்)

**அவலம்** - அழுகை, சோகம் (அசைவு, இழிவு, வறுமை, இழத்தல்)



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**இளிவரல்** - கழிவிரக்கம் (மூப்பு, பிணி, வருத்தம், மென்மை)

**மருட்கை** - வியப்பு (புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்)

**அச்சம்** - பயம் (விலங்கு, தெய்வம், கள்வர், அரசு)

**வெகுளி** - கோபம் (உறுப்பைக் குறைத்தல் குடிப்பிறப்பிற்குக் கேடு, கொலைக்கு ஒருப்படுதல், கோல்கொண்டு அலைத்தல்)

**பெருமிதம்** - வீரம் (கல்விச்சிறப்பு, வீரம், புகழ்ச்சி , கொடை)

**உவகை** - இன்பம் (செல்வநுகர்ச்சி, ஐம்புலன் இன்பம், புணர்ச்சி , விளையாட்டு)

**குறிப்பு**

❖ பாடல் வெளிப்படுத்தும் கருத்துக்கேற்ப இச்சுவைகள் வெளிப்படும் ஒரே பாடலில் ஓரிரு சுவைகளும் இடம் பெறலாம்.

❖ மேற்கண்ட ஒவ்வொரு சுவைகளும் (மெய்ப்பாடுகளும்) அடைப்புக்குள் தரப்பட்டுள்ள நான்கின் அடிப்படையில் தோன்றும்.

**கற்பனை நயம்**

கற்பனை நயம் நான்கு வகைப்படும். அவை,

1. படைப்புக் கற்பனை
2. இயைபுக் கற்பனை
3. கருத்து விளக்கக் கற்பனை
4. வெறும் கற்பனை

**1. படைப்புக் கற்பனை**

வெவ்வேறு இடத்தில் கொண்ட வேறுபட்ட இரண்டு காட்சிகளைக் கற்பனைபடப் பாடுவது ‘படைப்புக் கற்பனை’ ஆகும்.

**2. இயைபுக் கற்பனை**

ஒன்றோடு ஒன்றினை இயைபு படுத்தப் பாடுவது ‘இயைபுக் கற்பனை’ ஆகும்.

**3. கருத்து விளக்கக் கற்பனை**

புலவர் தன் கருத்தை விளக்குவதற்காகக் கற்பனையுடன் பாடுவது ‘கருத்து விளக்கக் கற்பனை’.

**4. வெறும் கற்பனை**

இல்லாத ஒன்றை அல்லது நடக்க முடியாத ஒன்றைக் கற்பனையாக நினைத்துப் பாடுவது ‘வெறும் கற்பனை’ ஆகும்.

**தலைப்பு**

❖ பாடலை நன்றாகப் படித்துப் பார்க்கவும்.

❖ பொருளை முழுமையாக அறியவும்

❖ அப்பாடல்

1. சமுதாயம்
2. அறிவியல்
3. மொழி
4. இயற்கை

என எதைப் பற்றிக் கூறுகிறது என்பதை அறியவும்.

❖ தலைப்பு ஐந்து எழுத்து முதல் எட்டு எழுத்துக்கு மிகாமல் இருத்தல் நயம்.

❖ ஒரே ஒரு தலைப்பு மட்டுமே எழுதப்பட வேண்டும்.

**முடிவுரை**

‘‘கவிஞன் தன் உள்ளத்து’’ உணர்வுகளையும், சமுதாய நடவடிக்கைகளையும் அழகியல் நோக்கில் கவிதையாகப் படைக்கின்றான்’’.............. (கவிஞர் பெயர்) இயற்றியுள்ள இப்பாடலிலும், (எழுதப்பட்டிருக்கும் உள் தலைப்புகளை எடுத்து எழுதி) அவை அமைந்து பாடலுக்கு இனிமையைத் தந்துள்ளது............ (கவிஞர் பெயர்) அவர்களின் பிறபாடல்களைப் படித்தும், நாமே சில பாடல்களைப் படைத்தும் தமிழன்னைக்குப் பெருமை சேர்ப்போம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# எளிய வழியில் இலக்கணக்குறிப்புகளைக் கண்டறியும் முறைகள்

### 1. அளபெடை

அ, இ, உ, ஒ - போன்ற உயிரெழுத்துகள் சொற்களின் நடுவிலும் இறுதியிலும் வருவதில்லை. அவ்வாறு வந்திருந்தால் அளபெடை என உணர்க.

**அ) செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை**

1. ''இ'' என்னும் உயிரெழுத்தைத் தவிர, பிற உயிரெழுத்துகளுள் ஒன்று சொல்லில் (அளபெடுத்து) வருவது இசைநிறை அளபெடை ஆகும்.
2. அச்சொல் ஈரசைச் சீராக இருக்கும். (எ.கா.) தொழாஅர், வெரூஉம் (பெரும்பாலும் இவ்வழிமுறைச் சரியாக அமையும்)

**ஆ) சொல்லிசை அளபெடை**

1. சொல் ''இ'' என்னும் உயிரெழுத்தில் முடிந்தால் அது சொல்லிசை அளபெடை ஆகும்.
2. அந்த உயிரெழுத்தை நீக்கிவிட்டு, மீதி எழுத்துகள் சேர்ந்து ஓரசைச் சீராக இருக்கும். **(எ.கா.)** தழீஇ, ஓரீஇ, செலீஇய.

**இ) இன்னிசை அளபெடை**

1. சொல்லின் இடையில் ''உ'' என்னும் உயிரெழுத்து இருக்கும்.
2. சொல் மூவசைச்சீராக இருக்கும். (எ.கா.) வளர்க்குறூஉம்

(குறிப்பு : ''இ'' என்னும் எழுத்தில் முடிந்தால் அது சொல்லிசை அளபெடை ஆகும். ஏனைய உயிரெழுத்து இருந்தால் கொடுக்கப்பட்ட சொல்லை அசைபிரித்துப் பார்க்கவும். இரண்டு அசைகள் வந்தால் அது செய்யுளிசை அளபெடை எனவும் மூன்று அசைகள் வந்தால் அஃது இன்னிசை அளபெடை எனவும் கொள்க. பெரும்பாலும் இம்முறை சரியாக அமையும்.)

(செ - அ, ஒ; சொ - இ, இ - உ)

### 2. வினைத்தொகை

1. இரு சொற்களே இணைந்து வரும்.
2. முதற்சொல் வினைச் சொல்லாகவும், இரண்டாம் சொல் பெயர்ச் சொல்லாகவும் அமையும்.
3. இரு சொற்களுக்கும் இடையில் முக்காலங்களும் மறைந்திருக்கும்.

**(எ.கா.)** திருந்துமொழி, பொருந்துமொழி புனைகலம்

### 3. பண்புத்தொகை

1. குணம், நிறம், சுவை, வடிவம், அளவு - இப்பண்புகளுள் ஒன்றைப் பெற்றுவரும்.
2. முதலில் பண்புச் சொல்லும், அடுத்துப் பெயர்ச் சொல்லும் அமைந்து, இரண்டும் இணைந்து வரும்.
3. இவ்விரு சொற்களுக்கும் இடையில் ''ஆகிய'', ''ஆன'' என்னும் சொற்களுள் ஒன்று மறைந்து வரும்.
4. பண்புத்தொகைச் சொற்களைப் பிரிக்கும்போது பெரும்பாலும் நிலைமொழி ஈறு ''மை'' விகுதியைப் பெற்றிருக்கும்.

**(எ.கா.)** பெருந்தேர் - பெருமை + தேர்
ஆருயிர் - அருமை + உயிர்
சேவடி - செம்மை + அடி

### 4. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

1. இருபெயர்ச் சொற்கள் ஒட்டி (சேர்ந்து) வரும்.
2. முதல் சொல் சிறப்புச் சொல்லாகவும் இரண்டாம் சொல் பொதுச் சொல்லாகவும் அமையும்.

**(எ.கா.) இளமைப்பருவம்**

இளமை - சிறப்புச்சொல்,
பருவம் - பொதுச்சொல்

**தமிழன்னை**

தமிழ் - சிறப்புச்சொல்,
அன்னை - பொதுச்சொல்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**கைத்தலம்**

கை - சிறப்புச்சொல்,

தலம் - பொதுச்சொல்

### 5. உவமைத்தொகை

1. இரு சொற்கள் இணைந்து வரும்.
2. முதல் சொல் உவமைச் சொல்லாய் வரும்.
3. இரு சொற்களுக்கும் இடையில் ''போன்ற'' என்னும் சொல் மறைந்து வரும்.

**(எ.கா.)** மதிக்குடை (மதி போன்ற குடை)

பொன்னடி (பொன் போன்ற அடி)

மலரடி (மலர் போன்ற அடி)

### 6. உம்மைத் தொகை

1. இரண்டு அல்லது மூன்று சொற்கள் சேர்ந்து வரும்.
2. சொற்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் இருக்கும்.
3. ஒவ்வொரு சொல்லுக்கும் இறுதியில் ''உம்'' என்பது மறைந்து வரும்.

**(எ.கா.)**

காசு பணம் (காசும் பணமும்)

நான் அவன் (நானும் அவனும்)

### 7. எண்ணும்மை

1. ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொற்கள் சேர்ந்து வரும்.
2. ''உம்'' என்பது வெளிப்படையாக வரும்.

**(எ.கா.)** வையகமும் வானகமும்

நகையும் உவகையும்

### 8. முற்றும்மை

1. சொற்பொருள் முழுமையாகத் தொகுக்கப்பட்டிருக்கும்.
2. சொல்லின் இறுதியில் ''உம்'' என்பது வெளிப்படையாக இருக்கும்.

**(எ.கா.)** யாரையும், எழுபிறப்பும், யார்க்கும் எளிய

### 9. வேற்றுமைத்தொகை

1. வேற்றுமை எட்டு வகைப்படும்.
2. முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை.
3. இரண்டு முதல் ஏழாம் வேற்றுமை முடியவுள்ளவற்றுக்கு முறையே ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பவை உருபுகளாகும்.
4. இவ்வுருபுகள் பெயர்ச் சொல்லோடு சார்ந்து அவற்றின் பொருளை வேறுபடுத்தி வருவதால் வேற்றுமை ஆகும்.
5. இரு சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபுகளுள் ஒன்று மறைந்து வந்தால் அது 'வேற்றுமைத் தொகை' என வழங்கப்படும்.

**(எ.கா)** அடிவாழ்த்துவம் (அடியை வாழ்த்துவம்)

இதில் ''ஐ'' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது. எனவே இஃது ''இரண்டாம் வேற்றுமைத் தொகை'' ஆயிற்று.

### 10. உருபும் பயனும் உடன்தொக்க தொகை

1. இரு சொற்கள் இணைந்து வரும்.
2. அவ்விரு சொற்களுக்கும் இடையே ஒரு வேற்றுமை உருபும் அதன் பொருளை (பயனை) விளக்கும் வேறு சொல்லும் மறைந்து இருக்கும்.

**(எ.கா.)** முள்ளிலை - முள்ளைக் கொண்ட இலை

இதில் ''ஐ'' என்ற இரண்டாம் வேற்றுமை உருபும் ''கொண்ட'' என்ற அதன் பயனைக் குறிக்கும் சொல்லும் மறைந்து வந்துள்ளன. எனவே இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆயிற்று.

### 11. பெயரெச்சம்

1. பெயரைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் பெயரெச்சமாகும்.
2. சொல், ''அ'' அல்லது ''உம்'' என்னும் ஓசைகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(பெரும்பாலும் இம்முறை சரியாக வரும்)

**(எ.கா.)** அசைத்த மொழி, படாத துயரம்

### 12. எதிர்மறைப் பெயரெச்சம்

1. முதல் சொல் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் எச்சவினைச் சொல்லாக இருக்கும்.
2. இரண்டாம் சொல் பெயர்ச்சொல்லாக இருக்கும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. முதல் சொல் ''அ'' (த) என்னும் ஓசையில் முடிவுறும்.

**(எ.கா.)** அணையாத விளக்கு, தீராத வறுமை

### 13. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

1. முதல் சொல் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் எச்சவினைச் சொல்லாக இருக்கும்.
2. அதன் இறுதி எழுத்து கெட்டிருக்கும்.
3. இரண்டாம் சொல் பெயர்ச் சொல்லாக இருக்கும்.
4. முதல் சொல் ''ஆ'' என்ற ஓசையில் முடியும்.

**(எ.கா.)** கருவிடாத்திருநகர், இலாநெஞ்சம்
எதிரிலாக் கடவுள்

### 14. வினையெச்சம்

1. வினையைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் வினையெச்சமாகும்.
2. சொல் பெரும்பாலும் ''இ'', ''உ'', ''அ'' என்னும் ஓசைகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

**(எ.கா)** போற்றி ஒழுகப்படும், கண்டுளிவெருவி (இ)
வந்து சென்றான், ஒழிந்து (உ)
காண வந்தான், அழைக்க (அ)

### 15. முற்றெச்சம்

1. ஒரு வினைமுற்றோ, பல வினைமுற்றுகளோ அடுத்தடுத்து வரும்.
2. வினைமுற்று, முற்றுப் பொருளை உணர்த்தாமல், எச்சப்பொருளை உணர்த்தி வரும்.
3. ஒரு வினைமுற்றைக் கொண்டு முடியும்.

**(எ.கா.)** நின்றிலள் நின்றசிலம்பு

### 16. வினையாலணையும் பெயர்

1. பார்ப்பதற்கு வினைமுற்றைப் போல் இருக்கும்.
2. ஆனால் அது பெயர்ச்சொல்லாகப் (பெயராக) பயன்படுத்தப்பட்டிருக்கும்.
3. வினைச்சொல் பெயரோடு சேர்ந்து பெயர்ப்பொருளைத் தந்தால் அது வினையாலணையும் பெயர் ஆகும்.

**(எ.கா.)** வந்தவர், போனவர்

### 17. வியங்கோள் வினைமுற்று

1. 'க', 'இய', 'இயர்', 'அல்' - இவற்றுள் ஒன்றைக் கொண்டு முடிந்தால் அது வியங்கோள் வினைமுற்று ஆகும்.
2. சில இடங்களில் ''அ'', ''இ'' என்பன கொண்டும் முடிவுறும்.
3. வாழ்த்துதல், வைதல், வேண்டுதல், விதித்தல் - என்னும் பொருள்களில் மரியாதை ஏவல் வினைமுற்றுகளாக வரும்.

**(எ.கா.)** செய்க - க, வாழிய - இய,
வாழியர் - இயர், வாழல் - அல்,
வாழ - அ, வாழி - இ

### 18. தொழிற்பெயர்

1. தொழிலைக் (வேலையை) குறிக்கும்.
2. தல், அல், கை, ஐ, வை, ஆல், அம், மை, து, கு, பு, உ, தி, சி , வி, உள், பாடு, காடு - போன்ற விகுதிகளுள் ஒன்றைப் பெற்று வரும்.

**(எ.கா.)** நடத்தல் - தல், ஆடல் - அல்,
கோறல் - அல், கொலை - ஐ,
பார்வை - வை, வாழ்க்கை - கை

### 19. ஒரு பொருட்பன்மொழி

1. ஒரு பொருள் தரக்கூடிய இரண்டு சொற்கள் ஒட்டிவரும்.
2. பெயர்ச்சொற்கள் இரண்டோ, வினைச்சொற்கள் இரண்டோ ஒரே பொருளைத் தரும் வேறு வேறுச்சொற்கள் இணைந்து வரும்.

**(எ.கா.)** வல்விரைந்து, மாபெரும் பொதுக்கூட்டம்

### 20. அடுக்குத்தொடர்

1. ஒரே சொல் இரண்டு முதல் நான்கு முறைகள் வரை அடுத்தடுத்து அடுக்கி வரும்.
2. பிரித்தால் பொருள் தரும்.
3. விரைவு, கோபம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் - இவற்றுள் ஒரு பொருளை உணர்த்தும்.

**(எ.கா.)** வாழிய வாழிய, தினந்தினம், ஓடுஓடு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

### 21. இரட்டைக்கிளவி

1. ஒரே சொல் இரண்டு முறை அடுத்தடுத்து வரும்.
2. வினைக்கு அடைமொழியாக குறிப்புப் பொருளை உணர்த்தி வரும்.
3. பிரித்தால் பொருள் தராது.

**(எ.கா.)** சலசல, கலகல, பளபள

### 22. உரிச்சொல் தொடர்

1. சால, உறு, தவ, நனி, கூர், கழி, மா, தட, க, மழ, குழ, தெவ், வை, கெழு - என்பவை உரிச்சொற்கள்.
2. இவைகளில் ஏதாவது ஒன்று பெயர்ச்சொல்லின் அல்லது வினைச்சொல்லின் முன் வரும்.

**(எ.கா.)** கடிமகள், உறுகுறை, வைவாள், வாள்முகம் மாமதுரை, மாமலை, மாமணி, தடந்தோள்

### 23. உருவகம்

1. உவமேயம் (பொருள்) முன்னும் உவமை (உவமானம்) பின்னும் அமைந்திருக்கும்.
2. உவமேயத்தையும் உவமையையும் வேறுபாடு இல்லாது, ஒன்றே எனக் கருதிக் கூறப்படும்.
3. ''ஆகிய'', ''என்னும்'' - போன்ற சொற்கள் வெளிப்படையாகவோ, மறைந்தோ வரும்.

**(எ.கா.)** கண்ணின் நீர்க்கடல், தங்கத்தீவு, பொற்கரை தங்கத்திமிங்கலம், கண்ணீர்வெள்ளம்

### 24. மரூஉ

1. இலக்கண வழக்குச் சிதைந்த சொல்லாக இருக்கும்.
2. சொல்லின் வடிவம் மாறியோ, சுருங்கியோ இருக்கும்.

**(எ.கா.)**

சோழ நாடு (இலக்கண வழக்கு) - சோணாடு (மரூஉ)
காஞ்சிபுரம் (இலக்கண வழக்கு) - காஞ்சி (மரூஉ)

### 25. போலி

1. ஒரு சொல்லின் முதல் எழுத்தோ, இடை எழுத்தோ, இறுதி எழுத்தோ மாறுபட்டுப் பொருள் மாறுபடாமல் வந்தால் அது 'போலி' என வழங்கப்படும்.

**(எ.கா.)** மயல் - மையல் - முதற்போலி
அரசன் - அரைசன் - இடைப்போலி
அறம் - அறன் - இறுதிப்போலி

2. சொல்லின் அனைத்து எழுத்துகளும் மாறுபட்டு, அதன் பொருள் மாறுபடாமல் வந்தால் ''முற்றுப்போலி'' எனப்படும்.

**(எ.கா.)** ஐந்து - அஞ்சு - முற்றுப்போலி

3. ஒரு சொல்லில் எழுத்துகள் முன்பின்னாக மாறி, பொருள் மாறுபடாமல் வருவது முன்பின்னாகத் தொக்கபோலி ஆகும்.

**(எ.கா.)** தசை - சதை -முன்பின்னாகத் தொக்கபோலி
மரநுனி - நுனிமரம் - முன்பின்னாகத் தொக்கபோலி

### 26. ஆகுபெயர்

1. ஒன்றின் இயற்பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகித் தொன்றுதொட்டு வழங்கிவருவது ஆகுபெயர் ஆகும்.

**(எ.கா.)** ஊர் சிரித்தது.



# இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம்

## தமிழோவியம்

**இலக்கணக்குறிப்பு**

1. **எத்தனை எத்தனை, விட்டு விட்டு** - அடுக்குத் தொடர்கள்
2. **ஏந்தி** - வினையெச்சம்
3. **காலமும்** - முற்றும்மை

**பகுபத உறுப்பிலக்கணம்**

**வளர்ப்பாய் - வளர் + ப் + ப் + ஆய்**

**வளர்** - பகுதி
**ப்** - சந்தி
**ப்** - எதிர்கால இடைநிலை
**ஆய்** - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## தமிழ்விடு தூது

**இலக்கணக்குறிப்பு**

1. **முத்திக்கனி** - உருவகம்
2. **தெள்ளமுது** - பண்புத்தொகை
3. **குற்றமிலா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. **நா** - ஓரெழுத்து ஒருமொழி
5. **செவிகள் உணவான** - நான்காம் வேற்றுமைத்தொகை
6. **சிந்தாமணி** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. **கொள்வார் - கொள் + வ் + ஆர்**
   **கொள்** - பகுதி
   **வ்** - எதிர்கால இடைநிலை
   **ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி

2. **உணர்ந்த - உணர் + த் (ந்) + த் + அ**
   **உணர்** - பகுதி
   **த்** - சந்தி (த் - ந் ஆனது விகாரம்)
   **த்** - இறந்தகால இடைநிலை
   **அ** - பெயரெச்ச விகுதி

## பட்டமரம்

**இலக்கணக்குறிப்பு**

1. **வெந்து, வெம்பி, எய்தி** - வினையெச்சங்கள்
2. **மூடுபனி** - வினைத்தொகை
3. **ஆடுங்கிளை** - பெயரெச்சத்தொடர்

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. **விரித்த - விரி + த் + த் + அ**
   **விரி** - பகுதி
   **த்** - சந்தி
   **த்** - இறந்தகால இடைநிலை
   **அ** - பெயரெச்ச விகுதி

2. **குமைந்தனை - குமை + த்(ந்) + த் + அன் + ஐ**
   **குமை** - பகுதி
   **த்** - சந்தி (த் - ந் ஆனது விகாரம்)
   **த்** - இறந்தகால இடைநிலை
   **அன்** - சாரியை
   **ஐ** - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## பெரியபுராணம்

**இலக்கணக்குறிப்பு**

1. **கருங்குவளை, செந்நெல்** - பண்புத்தொகைகள்
2. **விரிமலர்** - வினைத்தொகை
3. **தடவரை** - உரிச்சொல் தொடர்

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. **பாய்வன - பாய் + வ் + அன் + அ**
   **பாய்** - பகுதி
   **வ்** - எதிர்கால இடைநிலை
   **அன்** - சாரியை
   **அ** - பலவின்பால் வினைமுற்று விகுதி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# அணிகள்

## 1. உவமையணி

**இலக்கணம்:**

ஒரு பொருளை அதனோடு ஒப்புமை உடைய வேறொரு பொருளைக் கொண்டு விளக்கும்போது செய்யுளில் உவமை, உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாய் வருமானால் அஃது உவமையணி ஆகும்.

**எ.கா.**

**''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை''**

**உவமை** : அகழ்வாரைத் தாங்கும் நிலம்
**உவமேயம்** : தம்மை இகழ்வாரைப் பொறுப்பவர்
**உவமஉருபு** : போல

**விளக்கம்:**

பூமி தன்மீது நின்று தன்னைத் தோண்டுபவரையும் கீழேவிழாமல் தாங்கிக் கொண்டிருக்கிறது. அதுபோல, தம்மை இகழ்வாரையும் பொறுத்தல் வேண்டும் என்பதாம்.

## 2. உருவக அணி

**இலக்கணம் :**

உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்றே எனத் தோன்றுமாறு உவமையின் தன்மையைப் பொருளின் மேல் ஏற்றிக் கூறுவது ''உருவக அணி'' ஆகும்.

**எ.கா.**

**இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக**
**வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி**
**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்**
**பைங்கூழ் சிறுகாலைச் செய்.**

**விளக்கம்:**

இப்பாடலில், இன்சொல் - நிலமாகவும், வன்சொல் - களையாகவும், வாய்மை - எருவாகவும், அன்பு - நீராகவும், அறம் - கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

## 3. எடுத்துக்காட்டு உவமையணி

**இலக்கணம் :**

உவமை ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய, இடையே உவம உருபு மறைந்து வருவது ''எடுத்துக்காட்டு உவமை அணி'' ஆகும்.

**எ.கா.:**

**''இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை''**

**விளக்கம்:**

**உவமை** : இன்மையுள் இன்மை விருந்து ஓரால்
**உவமேயம்** : வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை

இடையில் போல என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

**குறள் விளக்கம்:**

தன்னை நாடி வரும் விருந்தினரை உபசரிக்க முடியாதவாறு வறுமைப்பட்டிருத்தல் மிகவும் கொடியது. அதுபோல, அறிவிலார் செய்த தவறால் தனக்குப் பெருந்தீங்கு விளைவதாயினும், அது கருதி அவர்களைத் தண்டிக்கும் வலிமை தனக்கிருந்தும் தண்டிக்காமல் பொறுத்தலே வலிமைக்குள் சிறந்த வலிமையாம் என்பதாகும்.

## 4. சொல்பின்வருநிலையணி

**இலக்கணம்:**

முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொல் பின்வருநிலை அணியாகும்.

**எ.கா:**

**''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை.''**

**விளக்கம்:**

இக்குறளில் 'துப்பு' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருகிறது.

துப்பார்க்கு - உண்பவர்க்கு, துப்பு - நல்ல, நன்மை, துப்பு - உணவு என்று பல பொருள்களில் வருவதைக் காணலாம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# டால்பின் பப்ளிகேசன்ஸ் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

| கடையின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|
| **சென்னை** | |
| M.K. ஸ்டோர்ஸ் | 044-25386143 |
| F.A. ஸ்டோர்ஸ் | 97105 68240 |
| அராபா புக் டிரேடர் | 044-25987868 |
| கிங்ஸ் புக் ஹவுஸ் | 044-25367660 |
| பிஸ்மி புக் சென்டர் | 044-25380666 |
| லிம்ரா புக் சென்டர் | 99400 39953 |
| பிரின்ஸ் புக் ஹவுஸ் | 044-42053926 |
| பழனிராஜ் | 98414 94023 |
| M.R. புக் ஸ்டோர்ஸ் | 91766-64596 |
| நூர் புக் சென்டர் | 81487-23350 |
| **தாம்பரம்** | |
| ஸ்ரீராம் அன் கோ | 044-22266431 |
| **ரெட்ஹில்ஸ்** | |
| திருமலை புக் சென்டர் | 98411 53261 |
| **மதுரை** | |
| மனோ புக் சென்டர் | 0452-2621577 |
| ஜெயம் புக் சென்டர் | 0452-2623636 |
| U. சந்திரமோகன் | 99426-39194 |
| M.V. சதீஸ்குமார் | 98433-49892 |
| சன்மதி டிரேடர்ஸ் | 97872 61333 |
| M.P.S.S. புக் ஷாப் | 8098151515 |
| வெற்றி புக் சென்டர் | 9843461624 |
| **கோவை** | |
| மெஜெஸ்டிக் புக் ஹவுஸ் | 99943 43334 |
| ராதாமணி ஸ்டோர்ஸ் | 0422-2392122 |
| கண்ணன் புத்தக நிலையம் | 95858 88890 |
| ராஜகணபதி புத்தக நிலையம் | 94430 06703 |
| சேரன் புக் ஷாப் | 0422-2396623 |
| **பொள்ளாச்சி** | |
| கலைமகள் ஸ்டோர்ஸ் | 04259-228738 |
| அமிர்தம் பேப்பர் மார்ட் | 98651 03333 |
| **அன்னூர்** | |
| ஸ்ரீ கார்த்திகேயன் ஸ்டோர்ஸ் | 94436 52226 |
| **திருச்சி** | |
| ராசி பப்ளிகேசன்ஸ் | 0431-2703692 |
| சுமதி பப்ளிகேசன்ஸ் | 0431-2703230 |
| ஸ்ரீ முருகன் புக்சென்டர் | 0431-2703076 |
| காயத்ரி புக் ஹவுஸ் | 97517 87873 |
| **துறையூர்** | |
| கே.கே.ஆர் ஸ்டோர்ஸ் | 98656 58650 |
| **விழுப்புரம்** | |
| சபரிநாதன் பிரதர்ஸ் | 04146-222581 |
| **கள்ளக்குறிச்சி** | |
| கிருபா ஸ்டேசனரி | 04151-223114 |
| **சேலம்** | |
| விக்னேஷ் புக் சென்டர் | 042-74020409 |
| ஜி.ஆர் பப்ளிகேசன்ஸ் | 93446 39631 |
| **கடலூர்** | |
| பெல் புத்தக நிலையம் | 04142-652252 |

| கடையின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|
| **சிதம்பரம்** | |
| வெற்றி புக் சென்டர் | 94432 22648 |
| ஜெயம் புக் சென்டர் | 93630 60516 |
| **தஞ்சாவூர்** | |
| ஸ்ரீனிவாசா புக் சென்டர் | 94865 25806 |
| செந்தில்குமார் | 9095902187 |
| **கும்பகோணம்** | |
| ஸ்ரீ மார்கண்டேயா புக் டிப்போ | 0435-2420750 |
| **திருவண்ணாமலை** | |
| பிச்சாண்டி முதலியார் | 94432 14725 |
| **வேலூர்** | |
| பூமிநாதன் | 93451 72090 |
| வேலூர் புக் சென்டர் | 04162-213250 |
| **திருப்பத்தூர் (வேலூர்)** | |
| ரவிக்குமார் | 97863 15453 |
| **ஈரோடு** | |
| செந்தில் புக் பேலஸ் | 04242-214886 |
| தனா புக் கம்பெனி | 0424-2221230 |
| **பள்ளிப்பாளையம்** | |
| அம்மன் சஞ்சீவி புக் சென்டர் | 9786040230 |
| **பவானி** | |
| தனா புக் சென்டர் | 9486230921 |
| **கோபிசெட்டிப்பாளையம்** | |
| கிராவிட்டி புக் வேர்ல்டு | 9385728528 |
| **திருவாரூர்** | |
| வி. ராமச்சந்திரன் | 94866 86627 |
| **ராமநாதபுரம்** | |
| ராமநாதசுவாமி புக் ஷாப் | 94434 91772 |
| அருணா நோட் புக் சென்டர் | 9842537005 |
| **சிவகங்கை** | |
| நியூ அய்யனார் புக் ஷாப் | 9994079013 |
| **கிருஷ்ணகிரி** | |
| ஸ்ரீ ரமணா புக் ஹவுஸ் | 90253 13661 |
| **திருநெல்வேலி** | |
| ஆறுமுகம் பிள்ளை புக் சென்டர் | 98949-17088 |
| **திண்டுக்கல்** | |
| அய்யனார் புக் சென்டர் | 95008-62024 |
| **பழனி** | |
| தர்சன் புக் எம்போரியம் | 8667218504 |
| **கோவில்பட்டி** | |
| இந்திரா பேப்பர் ஸ்டோர் | 96777-38071 |
| **திருப்பூர்** | |
| மகேஸ்வரி புக் ஸ்டால் | 94420-04254 |
| **தேனி** | |
| K. சுப்புராஜ் | 88703-16922 |
| மாயா புக்ஸ் & கிப்ட்ஸ் | 04554-270809 |
| **நாமக்கல்** | |
| ஸ்ரீ கணபதி புக் சென்டர் | 70948-07585 |
| **விருதுநகர்** | |
| சேது புக் சென்டர், | 94864-61400 |

**OUR PUBLICATIONS**

English Guide & Exercise Book - Std: IX,X,XI,XII

தமிழ் உன்னால் முடியும் - வகுப்பு : IX,X,XI,XII

அறிவியல் பயிற்சி ஏடு - வகுப்பு : X

சமூக அறிவியல் பயிற்சி ஏடு - வகுப்பு : IX & X

For Orders Contact

98653 06197 / 89256 77710 / 99435 67646

Orders through WhatsApp : 93453 14146

Orders through SMS : 93453 30937

E-mail ID : dolphin.pub2005@gmail.com

Padasalai.Net

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in